


# தேசம்

NATION THE THESAM




Issue - 05 Once a Month JULY 2024




## தாம் தேர்ந்தெடுத்த மக்கள் பிரதிநிதிகளில் ஒருவர் கூட “உத்தமர்“ இல்லையே!

## கனடாவின் அழகிய மாகாணமான அல்பேர்ட்டாவின் ஜேஸ்பர் நகரம் காட்டுத் தீக்கு இரையாகியது






## ”கனடியத் தமிழர்களின் கனவான “தமிழ்ச் சமூக மையம்“நிஜமாக எழுந்து நிற்க வேண்டும்”

## தமிழ் முற்போக்கு கூட்டணி பங்கு வகிக்கும் அரசாங்கம் விரைவில் இலங்கையில்



# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இன்னொரு சக்கர நாற்காலி

**"அரசியல் நீரோட்டத்தில் நிர்வாகத் திறன் கொண்டவர்கள், முகாமைத்துவ அறிவு கொண்டவர்கள், பன்மொழிப் புலமை கொண்டவர்கள், சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்கள், மக்களுக்காக பாடுபடுபவர்கள், மக்களின் துன்ப துயரங்களை அறிந்தவர்கள், காசுக்கு விலைபோகாதவர்கள் ஆகியோரே உள்ளீர்க்கப்பட வேண்டும்."**

சத்தியன்- கனடா

தமிழ் மக்களின் உரிமைக்காக பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வடிவங்களில் போராட்டங்கள் நடைபெற்று வந்தது. அந்தவகையில் தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டம் தற்போது இல்லாத போதிலும் தமிழ் மக்கள் மத்தியில் தற்போதும் தமது உரிமைக்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டே வருகின்றன.



அந்தவகையில் ஆயுதப் போராட்டம் பலமாக இருந்த காலப்பகுதியில் அரசியல் ரீதியாக நாம் எமது உரிமைகளை பேரம்பேசி பெற்றுக் கொள்ளும் நோக்குடனும்சர்வதேச அரசியல்செயற்பாடுகளையும் கருத்தில் கொண்டு பல்வேறு கட்சிகளையும் ஒன்றிணைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. எனினும் ஆரம்பகாலத்தில் பல கட்சிகள் இணைந்து உருவாக்கப்பட்டாலும் பின்னர் சிலர் பல்வேறு காரணங்களுக்காக விலகிச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனாலும், தமிழ் மக்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழ் மக்களுக்கான கட்சி என தொடர்ச்சியாக நம்பப்பட்டு வந்தது. எனினும், கட்சியில் இருந்த பலர் தமது சுயஇலாபத்திற்காகவும், அரசுக்கு முண்டுகொடுக்கும் முகமாகவும் செயற்பட்டு வந்தமையினால் பலர் கட்சியிலிருந்து விலகிச் சென்றதுடன் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான ஆதரவினை குறைத்து பிற கட்சிகளின் மீது நாட்டம் காட்டத் தொடங்கினார்.

ஆரம்ப காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தேர்தல்களின் ஊடாக அதிக ஆசனங்களைக் கைப்பற்றி வந்தது. எனினும் காலப்போக்கில் அது படிப்படியாகக் குறைவடைந்து வந்துள்ளதுடன், தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு கட்சி உறுப்பினர்கள் மட்டுமே காணப்படும் நிலைக்கு வந்துள்ளது.

ஒவ்வொரு கட்சிக்கும் என பல கொள்கைகள், விதிமுறைகள், கோட்பாடுகள், விழுமியங்கள் காணப்படுகின்றபோதிலும், தற்போதைய கால ஓட்டம் - தொழில்நுட்ப மாற்றம் - உலக நடப்பு என்பவற்றுக்கு ஏற்ப கட்சிகள் தமது கொள்கைகளைப் புறந்தள்ளிச் செயற்படுதல் வேண்டும்.

கூட்டமைப்பின் தலைவராக செயற்படுவோரில் பெரும்பகுதியினர் தற்போது வயது முதிர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்களுக்கு அனுபவம் உள்ளது, அவர்களாலேயே சிறப்பாக செயற்பட முடியும் என சிலர் கூற முனையலாம். ஆனால் தற்போதைய தொழில்நுட்ப யுகத்தில் அனுபவசாலிகளைக் காட்டிலும் பல அறிவாளிகள் - மதிநுட்பவாதிகள் - தந்திரசாலிகள் காணப்படுகின்றார்கள் அவர்களையும் கட்சியில் இணைத்துக் கொண்டு பயணிப்பதே சாலச் சிறந்ததாகும்.

இதற்கென காணப்படும் கட்சிக் கொள்கைகளைப் புறந்தள்ளிவிட்ட காலத்தின் தேவைக்கேற்ப சிறந்த நபர்களை கட்சிக்குள் உள்வாங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இரா. சம்பந்தனால் கொண்டுவரப்பட்ட மதிநுட்ப வாதியான சுமந்திரன் தற்போது கூட்டமைப்பின் ஆரோக்கிய செயற்பாட்டுக்கு பொருத்தமற்றவராக காணப்படுவதுடன் ஒத்துக் போகும் தன்மையை கொண்டிராததுடன், தனது தந்திரங்கள் குறுக்குவழியில் பயன்படுத்தி கட்சியின் தலைமைத்துவத்தை தான் கைப்பற்றுவதற்காக போராடி வருகின்றார். இது கட்சிக்கோ அல்லது சமூகத்திற்கோ ஆரோக்கியம் அற்ற செயற்பாடாக காணப்படுகின்றது.

இப்படியானவர்களை புறந்தள்ளிவிட்டு தற்போது வடக்குக் கிழக்கில் உள்ள நிர்வாகத் திறன் கொண்டவர்கள், முகாமைத்துவ அறிவு கொண்டவர்கள், பன்மொழிப் புலமை கொண்டவர்கள், சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்கள், மக்களுக்காக பாடுபடுபவர்கள், மக்களின் துன்ப துயரங்களை அறிந்தவர்கள், காசுக்கு விலைபோகாதவர்கள் அரசியல் நீரோட்டத்திற்கு உள்ளீர்க்கப்பட வேண்டும்.

உண்மையில் வடக்குக் கிழக்கில் பல ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர்கள், பாடசாலை அதிபர்கள், முகாமைத்துவம் சார்ந்தவர்கள், பிரபல கணக்காளர்கள், எழுத்தாளர்கள் என பலர் தமது பதவிக் காலத்திலேயே சமூகத்தின் மீது அக்கறை கொண்டு செயற்பட்டு வந்துள்ளார்கள். அவ்வாறான நபர்களுக்கு இடம்கொடுப்பதன் மூலம் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தலாம் - ஏற்படும்.

ஆனால் அண்மையில் ஏற்பட்ட சம்பவங்களை எல்லாம் பார்க்கும் போது அவை எவையும் நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகளை இல்லாது செய்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஜூன் 30 ஆம் திகதி இயற்கை எய்தினார். இவர் தனது இறுதிக் காலம் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட்டு வந்துள்ளார். சம்பந்தன் தனது கடைசிக் காலத்தில் பாராளுமன்ற கூட்டத்தொடர்கள் பலவற்றில் கலந்து கொள்ளவில்லை. அவர் தனது உடல்நிலை காரணமாக இவ்வாறு செயற்படுவதன் மூலம் தமிழ் மக்களுக்கு எந்த அனுகூலங்களையும் பெற்றுக் கொடுக்கவில்லை.

இரா. சம்பந்தன் இயற்கை எய்திய பின்னர் அவரது இடத்திற்கு திருகோணமலையில் போட்டியிட்டு அடுத்த இடத்தைப் பெற்றுள்ள கதிரவேலு சண்முகம் குகதாசன் நியமிக்கப்பட்டுள்ளார். திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் நீண்டகாலம் கனடாவிலேயே வசித்து வந்துள்ளார். 2020 ஆம் ஆண்டு முதல் இவர் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவராக செயற்பட்டு வருகின்றார். திருகோணமலை மாவட்டத்தில் நாடாளுமன்ற தேர்தலில் தமிழரசுக் கட்சி ஒரு ஆசனத்தினை மட்டுமே பெற்றுக் கொண்டது. அதன் படி அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற இரா. சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு அடுத்த படியாக குகதாசன் 16,770 வாக்குகளைப் பெற்றிருந்தமையினால் சம்பந்தனின் இடத்திற்கு இவர் 02.07.2024 அன்று நியமிக்கப்பட்டதுடன் கடந்த 09.07.2024 அன்று நாடாளுமன்றத்தில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். அத்துடன் நாடாளுமன்றத்தில் பதவிப் பிரமாணம் செய்த பின்னர் அவர் தனது இருக்கைக்கு உதவியாளர் ஒருவரின் உதவியுடன் அழைத்துச் செல்லப்பட்ட போது தவறி விழுந்து விட்டார்.

இச் சம்பவத்தினை உற்றுநோக்கும் போது இரா. சம்பந்தன் அவர்களைத் தொடர்ந்து மீண்டும் ஒரு சக்கர நாற்காலியுடன் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு செல்லும் நிலை ஏற்படலாம். எனவே, தொடர்ச்சியாக நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பு எப்பொழுதும் சக்கர நாற்காலியில் உறுப்பினர்களை அழைத்துச் செல்லும் போல் தெரிகின்றது.

இந் நிலை மாற்றப்பட வேண்டும். கடந்த 2022 ஆண் ஆண்டு காலி முகத்திடலில் இடம்பெற்ற போராட்டமானது இதனையே வலியுறுத்தி நிற்கின்றது. அதன்படி நாடாளுமன்றத்திற்கு செல்லும் உறுப்பினர்கள், அவர்களின் செயற்பாடுகள் என்பவற்றுடன் நாடாளுமன்றத்தில் இளமையான துடிப்பான அரசியல் அறிவு உடைய புதிய உறுப்பினர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்பதாகும்.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் தற்போதைய எதிர்பார்ப்பு தமது எதிர்கால சந்ததியினர் சிறப்பாக வாழ்வதற்கு ஏற்ற சூழல் என்று ஏற்பட வேண்டும் என்பதாகும். ஏனெனில் நாம் கடந்து வந்த பாதை கடினமானது. எனவே அத்தகைய நிலை தமது எதிர்கால சந்ததியினருக்கு ஏற்படக் கூடாது என்பதாகும். இத்தகைய நிலை தோற்றம் பெற வேண்டுமாயின் தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவம் சிறப்பாகவும் - ஆரோக்கியமாகவும் - மதிநுட்பமாகவும் செயற்பட வேண்டும் என்பதாகும். இதற்கு தற்போதைய கூட்டமைப்பின் செயற்பாடுகள் ஒருபோதும் பொருத்தமானது போதுமானது அல்ல. எனவே, கூட்டமைப்புக்குள் புதிய இரத்தம் - நுட்பம் உட்பாச்சப்பட வேண்டும் என்பதாகும்.



அத்தகைய ஒரு சிறந்த காலம் விரைவில் ஏற்பட வேண்டும் என மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். இதற்கெல்லாம் எதிர்காலத்தில் இடம்பெறும் தேர்தல் தொடர்பான அறிவிப்பும் அதில் போட்டியிட உள்ள நபர்களின் தன்மையும் பதிலாக இருக்கும்.

மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவதனைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதுடன் இதே நிலை தொடருமாக இருந்தால் வடக்கு கிழக்கு மக்கள், தமது புதிய தலைமைத்துவத்தை தெரிவுசெய்ய புதிய முறை புதிய கட்சி  புதிய உறுப்பினர்களை தேர்வுசெய்ய ஆர்வம் காட்டுவதுடன் மட்டுமன்றி சாவகச்சேரி வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊழல், முறையற்ற செயற்பாடுகளுக்கு எதிராக அணிதிரண்டு போராடியது போன்று கூட்டமைப்புக்கு எதிராகவும் தமது போராட்டத்தை முன்னெடுப்பதை தடுக்கமுடியாது போகலாம்.




தேசம் குரல் –மே 2024

Thesam Publishers

தேசம் வெளியீட்டாளர்கள்

EDITORIAL TEAM - THESAM
GRAPHIC: HEVEN
TECHNICAL: Y.INTHUNATHAN
PRINTERS: PRINT TECK
MARKETING & DISTRIBUTION
MANAGER - Ramsankr Sivanathan: 647.891.7725

Phone: 647 848 1113
Unit #201, 3967 Lawrence Ave East, Scarbourough, ON, M1G 1S2
Email: info@thethesam.com www.thethesam.com

# தாம் தேர்ந்தெடுத்த மக்கள் பிரதிநிதிகளில், ஒருவர் கூட 'உத்தமர்' இல்லையே என புலம்பும், வறுமையில் வாடும் தாயக மக்கள்!

எம் தாய் மண்ணிற்கு மற்றுமொரு பெயர் 'தமிழ் மண்'. அந்த மண்ணில் எவ்வித நவீன வசதிகளும் இல்லாத காலத்தில், அதாவது சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அதுவும் வெளிநாட்ட்வர்களின் ஆட்சிக் கொடுங்கோலினால் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த காலப்பகுதியிலும் கூட தமிழ் மொழியையும் பண்பாட்டையும் இலக்கியங்களையும் விவசாயத்தையும் கைத்தொழில்களையும் கட்டிக் காத்தவர்கள்தான் எம் தமிழ் மண்ணில் மூத்தவர்களாக இருந்தவர்கள்.

அவர்களில் ஆசிரியர்கள் இருந்தார்கள், பண்டிதர்கள் இருந்தார்கள். தொழில் வல்லுனர்கள் இருந்தார்கள். விவசாயிகள் இருந்தார்கள். எழுத்தாளர்கள் இருந்தார்கள். ஆங்கிலம் கற்றவர்கள் இருந்தார்கள். ஆனால் தமிழ் பேசும் அரசியல்வாதிகள் இருக்கவில்லை.

ழ்வு நகர்ந்து கொண்டு தான் இருந்தது. சமூகங்கள் எழுச்சி பெற்றன. வசதி படைத்தவர்கள் கப்பல் பயணம் செய்து வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி கற்று அறிவுச் செல்வத்தையும் பொருட்செல்வத்தையும் எம் மண்ணுக்கு கொண்டு வந்து சேர்த்தார்கள். குளங்கள் கட்டப்பெற்றன. பயிர்ச் செய்கை பெருகியது. மக்கள் பஞ்சத்தில் ஆழ்ந்து போகாமல் மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்கள். கல்வியில் சிறந்து விளங்கினார்கள், கலைகளைக் கற்றார்கள், கிராமங்கள் தோறும் சன சமூக நிலையங்களும் ஆலயங்களும் கல்விச் சாலைகளும்பெருகின. தமிழ்ப்பகுதிகளுக்குச் சென்றால் நல்ல ஆங்கிலத்தையும் விஞ்ஞானத்தையும் கணிதத்தையும் புவியியலையும் கற்று கல்விமான்களாக வரலாம் என்று தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களே யாழ்ப்பாணத்தையும் மட்டக்களப்பையும் நாடிச் சென்ற ஒரு காலம் இருந்தது.

ஆனால் இன்று அனைத்தும் மாறிவிட்டன. அரசாங்கத்தின் செலவில் வைத்தியர்களாக கல்வி கற்று வைத்தியர்களாக வந்தவர்களே அரசுக்கு துரோகம் இழைத்து விட்டு வெளிநாடுகளுக்கு பொருள் தேடும் நோக்கில் 'பறந்து' செல்கின்றனர். உள்நாட்டில் வேலை செய்யும் வைத்தியர்களோ 'வைத்திய சேவை' செய்வதற்கு பதிலாக 'வதை' செய்யும் சாதாரண மனிதர்களாக விளங்குகின்றார்கள். மக்களைச் சென்றடைய வேண்டிய பொருட்களை அவர்கள் கொள்ளையடிக்கின்றார்கள். அரசுப் பணியின் செய்ய வேண்டியதை செய்யாமல் துரோகம் இழைக்கின்றார்கள்.




இவர்கள் மாத்திரமல்ல, எமது மக்கள் தங்கள் வாக்குகளை அளித்து பாராளுமன்றத்திற்கு அனுப்பிய மக்கள் பிரதிநிதிகள் கூட மக்களுக்கு 'துரோகம்' இழைப்பவர்களாகவே காணப்படுகின்றார்கள். தங்கள் சுக போகங்களுக்காகவும் பொருள் தேடிக் கொள்ளவதற்காகவுமே இந்த பதவிகளில் தொடர்வதற்கு துடிக்கின்றார்கள். முன்னர் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களும் தற்போது தொடர்கின்றவர்களும் இதற்கு விதிவிலக்காக இல்லை என்பதை கேள்விப்படுகின்ற போது மனது கொதிக்கும் நிலையை எமது மக்கள் அடைந்துள்ளார்கள்.

அதை விட கேவலம் இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் எமது மக்கள் பிரதிநிதிகளில் சிலர் சாராயத் தவறணைகளும் மதுச்சாலைகளும் நடத்தும் அரசாங்க அனுமதிப்பத்திரங்கள் பெற்று அவற்றின் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்களை சம்பாதிக் கொள்பவர்களாக விளங்குகின்றார்கள் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. தங்கள் பதவிகளைப் பாவித்து கொழும்பில் உள்ள சிங்கள அமைச்சர்களின் 'கால்களில் விழுந்து' மதுச்சாலைகள் நடத்தும் அனுமதியைப் பெற்று மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் அதன் மூலம் சம்பாதிக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் பற்றிய தகவல்கள் எமக்கு கிடைத்துள்ளன. அவற்றின் புகைப்படங்களும் எம்மிடம் உள்ளன.

இதே போன்று வட மாகாணத்திலும் முன்னாள் ஆசிரியராகஇருந்ததற்போதையபாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும் யாழ்ப்பாணத்தில் மதுச்சாலைகள் இரண்டு உள்ளதாக அண்மையில் வைத்தியர் அர்ச்சுனா அவர்கள் தெரிவித்துள்ளார். ஆசிரியராக இருப்பவர்கள் அதிபர்களாகவும் கல்வி அதிகாரிகளாகவும் வந்துள்ளார்கள் என்பதைத் தான் நாம் கேள்விப்பட்டுள்ளோம். ஆசிரியர்களாக இருப்பவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டால் அதனால் மக்கள் அதிக பயனடைவார்கள் என்று எமது மக்கள் எதிர்பார்த்திருப்பார்கள். ஆனால் முன்னாள் ஆசிரியர்கள் இந்நாள் மதுக்கடை உரிமையாளர்களாக உள்ளார்களே? இதை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும் என்று கேட்கின்றார்கள் வாக்களித்த வடக்கு கிழக்கு தமிழ் மக்கள்.!

# ஜனாதிபதித் தேர்தலும் தென்னிலங்கையும்

சத்தியன்- கனடா

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் இவ்வாண்டு நடைபெறவேண்டும் என பல்வேறு தரப்பினராலும் குறிப்பிடப்பட்டு வந்தது. எனினும் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட வேண்டும் அல்லது ரணில் விக்கிரமசிங்க மேலும் சில ஆண்டுகள் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் அல்லது தேர்தல் நடத்தாது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி பதவியை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பன போன்ற பல்வேறு கதைகள் குறிப்பிடப்பட்டு வருகின்றன.



இந்த நிலையில் கடந்த வாரம் தேர்தல் ஆணைக் குழுவின் அறிக்கையின் படி ஜனாதிபதித் தேர்தலானது செப்டெம்பர் - ஒக்டோபர் மாதத்தில் நடைபெறலாம் என்று அறிவித்ததுடன் அதுதொடர்பான அறிவிப்பு ஜூலை மாதம் வெளியிடப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க இதுவரை தான் எந்தக் கட்சியில் போட்டியிடுவது அல்லது பொதுவேட்பாளராக போட்டியிடுவதா என்பது தொடர்பான இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்க முடியாத நிலையில் காணப்படுகின்றார். அத்துடன் அவர் தற்போது ஜனாதிபதியாக காணப்படுகின்ற போதிலும் பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் ஆதரவுடனேயே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதுடன் அவர்களின் கொள்கைப்படியே செயற்பட்டும் வருகின்றார்.

பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களில் சிலர் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவதுடன் ஐக்கிய தேசிய கட்சியில் சிலர் இணைந்தும் சிலர் வேறு கட்சியாக ஆதரவும் தெரிவித்து வருகின்ற போதிலும் சில உறுப்பினர்கள் பொதுஜன பெரமுன கட்சியிலேயே நீடிக்கின்றனர். அவர்கள் பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரையே தாம் ஆதரிக்க உள்ளதாகவும் எனவே தமது கட்சியின் சார்பில் வேறு ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக இருக்க வேண்டும் என குறிப்பிட்டு வந்தனர்.

இந்தநிலையில் அண்மையில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்ட நாமல் ராஜபக்ச தமது கட்சியின் கொள்கைகளை ஏற்று செயற்படும் கட்சியை சேர்ந்தவரே ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவார் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அவருக்கு போட்டியாக சஜித் பிரேமதாஸ் அனுரகுமார திஸநாயக் ஆகியோர் போட்டியிட உள்ளதுடன் தம்மிக்க பெரேராவும் பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிடுவார் என்றும் கூறப்பட்டு வந்தது. இவை அனைத்தும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றால் அல்லது அதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னரே ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆனால் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக சில சம்பவங்கள் அண்மைய நாட்களின் பல சந்தேகங்களை ஏற்படுத்தி உள்ளன. அதன்படி தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் குறித்து அரசியலமைப்பின் பிரகாரம் விளக்கமளிக்குமாறு உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனுவை தொழிலதிபர் சி.டி.லெனவவினால் தாக்கல் செய்துள்ளார். அடுத்த ஜனாதிபதித் தேர்தல் திகதி குறித்து உயர் நீதிமன்றம் விளக்கமளிக்கும் வரை தற்போது நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதைத் தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறும் மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆர்.பிரேமதாஸ சந்திரிக்கா மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆட்சிக்காலங்களில் ஜனாதிபதியின் பதிவிக்காலமானது 6 ஆண்டுகளாக காணப்பட்டது. எனினும் மைத்திரிபால ஜனாதிபதியாக பதிவியேற்ற பின்னர் முன்வைக்கப்பட்ட அரசியல் அமைப்பின் பிரகாரம் (அரசியலமைப்புத் திருத்தம்) ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. எனினும் அது சரியான முறையில் சட்டமாக்கப்பட்டுள்ளதா அல்லது அவை தொடர்பான மாற்றங்கள் செய்ய முடியுமா என்பது தொடர்பாக நீதிமன்றத்தில் வழங்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப்போடுவதற்கான உத்தி ஒன்றாகவே கருதப்படுவதாக அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்டு வருகின்றார்கள். முன்னைய அரசியல் அமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி பதிவிக்காலம் ஆறு ஆண்டுகள் என குறிப்பிட்டு தீர்ப்பு வழங்கப்பட்டால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வருடம் தேர்தலை நடத்தாது மேலும் ஒரு ஆண்டுகள் ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.



இதன் ஒரு அங்கமாகவே ஜனாதிபதி பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டிவிடும் செயற்பாட்டை மேற்கொண்டு வருவதாக தெரிகின்றது. இதற்கு முன்னரும் ஒருதடவை தேர்தலை நடத்துவது தொடர்பாக அறிவிப்பினை வெளியிட்டுவிட்டு அதற்கு தேவையான நிதியை ஒதுக்கவே அல்லது அரச அச்சுத் திணைக்களத்துக்கு செலுத்தாமல் இருந்து தேர்தல் பிற்போடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தநிலையில் வழக்குத் தாக்கல் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி மனுதாரர் தன்னிடமோ அல்லது தனது சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசிக்கவோ ஆலோசனை பெறவோ இல்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.
2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி சமிந்திர தயான் லெனவ என்பவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

மேற்படி மனுவை தாக்கல் செய்வதன் மூலம் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் பிரிவு 12(1)82(6)3-4-118மற்றும்125ஆகியபிரிவுடன்வாசிக்கப்பட வேண்டிய 126 இன் படி அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் 3ஆம் பிரிவின் ஊடாகத் திருத்தப்பட்ட பிரிவு 30(2)ஐ வியாக்கியானம் செய்யக்கூடாது என குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய ஜனாதிபதியின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் என்பதைக் கருத்தில் கொண்டு தேர்தல் ஆணைக்குழு அடுத்த ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும் என்பதால் உயர் நீதிமன்றத்தினால் இது குறித்த இறுதித் தீர்ப்பு அறிவிக்கப்படும் வரையில் 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான மேலதிக பணிகள் முன்னெடுக்கப்படுவதைத் தடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என மனுதாரர் தரப்பு குறித்த மனுவில் கோரியுள்ளது.

மேலும் ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என்பதோடு 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருப்பது சரியானது என்பதே தனது உறுதியான நிலைப்பாடாகும் என்பதையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்துள்ளார்.

நடப்பு ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாக விளக்கமளிக்க வேண்டும் என்று கோரியும் அதுவரையில் தற்போது திட்டமிடப்பட்டுள்ள ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படக்கூடாது என்று உத்தரவிடக்கோரியும் தாக்கல் செய்யப்பட்ட மனு எதிர்வரும் திங்கட்கிழமை ஜூலை 8ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இதன் நிமித்தம் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு அமைக்கப்பட்டுள்ளது.
விஜித் மலல்கொட முர்து பெர்னான்டோ ப்ரீதி பத்மன் எஸ். துரைராஜா ஆகியோர் இந்த அமர்வில் இடம்பெறுகின்றனர். எனவே மேற்படி சம்பவங்களை நோக்குமிடத்து ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதி தொடர்பான அறிவிப்பு எப்போது வெளிவரும் என்பது குறித்து ஊகிக்க முடியாதுள்ளது.

இது தொடர்பில் அனுரகுமார தகருத்துத் தெரிவிக்கையில் 2019 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனஅவ் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை உயர் நீதிமன்றத்தால் தீர்மானிக்கக் கோரிய போதுஅவ் உயர் நீதிமன்றம் தெளிவான தீர்ப்பை வழங்கியது. இதன்படி அரசியலமைப்பின் 19வது திருத்தத்தின்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று அனுரகுமார தெரிவித்துள்ளார். இந்தநிலையில்அவ் ஜனாதிபதி மற்றும் அவரது குழுவின் சதிகள் அல்லது தந்திரோபாயங்களை தேசிய மக்கள் சக்தி
தோற்கடிக்கும் என்று அவர் கூறியுள்ளார்



தேசம் பத்திரிக்கையில்
விளம்பரம் செய்ய அழையுங்கள்
647-891-7725

# ஒன்றுபட்ட இலங்கைக்குள் தன்னாட்சி தமிழரசை உருவாக்க வேண்டும் என்ற இலட்சியம் கொண்டவர் சம்பந்தன் அவர்கள்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு– கனடா

ஆறு சகாப்தங்களுக்கு மேலாக ஓயாது ஒழியாது தமிழ்மக்களின் உரிமைகளுக்காக நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போராடிவந்த சம்பந்தன் ஐயாவின் குரல் ஓய்ந்துவிட்டது. கடந்த சில ஆண்டுகளாக அவரது உடல்நலம் குறைந்து காணப்பட்டாலும் அவரது குரலில் தளர்ச்சி இருக்கவில்லை.

சம்பந்தன் ஐயா தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர்களான தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்றோர் வழியில் அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் திறம்படச் செய்தவர். தமிழரசுக் கட்சியுடன் ஆன அவரது தொடர்பு 1961 ஆம் ஆண்டு நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தோடு தொடங்கியது. அவர் கைது செய்யப்பட்டு பனாக்கொடை தடுப்பு முகாமில் சிறிது காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.



அவரது முழுநேர அரசியல் நுழைவு 1977 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் திருகோணமலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக போட்டியிட்டு வென்றதன் வாயிலாகத் தொடங்கியது.

1983 கறுப்பு யூலையில் மூவாயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும், அவர்களது உடைமைகள் சேதமாக்கப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தும் தனி நாடு கோருவதை தடைசெய்தும் கொண்டு வரப்பட்ட இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தின் கீழ் நாடாளுமன்றத்தில் உறுதிமொழி எடுக்க மறுத்து அதன் அமர்வுகளை மூன்று மாதங்கள் தொடர்ந்து புறக்கணித்ததன் விளைவாக சம்பந்தன் ஐயா தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை 1983, செப்டம்பர் 7 இல் இழந்தார்.

1985 ஆம் ஆண்டு திம்புவில் நடந்த அனைத்துக் கட்சி மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக பங்குபற்றிய மூன்று முக்கிய தலைவர்களில் சம்பந்தன் ஐயாவும் ஒருவர்.

1987 இல் நிறைவேற்றப்பட்ட 13 ஏ சட்ட திருத்தத்தில் உள்ள குறைபாடுகள் பற்றி அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்த இராசீவ் காந்தி அவர்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி 28 ஒக்தோபர், 1987 ஒரு நீண்ட கடிதம் எழுதியது. அந்தக் கடிதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் மு.சிவசிதம்பரம், பொதுச் செயலாளர் அ. அமிர்தலிங்கம் மற்றும் துணைத் தலைவர் இரா.சம்பந்தன் கையெழுத்திட்டிருந்தனர்.

2015 செப்டெம்பர்3முதல்2018 டிசம்பர்18வரைஇலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித்தலைவராகவும் சம்பந்தன் ஐயா இருந்துள்ளார். எதிர்க்கட்சித்தலைவராக விளங்கியஅவர், தந்தை செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம் ஆகியோருக்கு அடுத்து,தென்னிலங்கைஅரசியல்தலைவர்களாலும் வெளிநாட்டு இராசதந்திரிகளாலும் பெரிதும் மதிக்கப்பட்டதமிழ்மக்களின் ஆளுமைமிக்க தலைவராக விளங்கினார்.

2009 மே 18 இல் போர்முடிந்த கையோடு பயங்கரவாதத்தை ‘ஒழித்துக் கட்டிய’ சிறிலங்கா அரசைப் பாராட்டி மே 27 இல் இந்தியா கொண்டுவரப்பட்ட தீர்மானம் 29 நாடுகள் ஆதரவாகவும் 12 நாடுகள் எதிராகவும் வாக்களித்து ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்டது. 2011 ஆம் ஆண்டுவரை ஐநாமஉ பேரவை சிறிலங்கா அரசை ஆதரித்தே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தப் போக்கு 2011 ஆம் ஆண்டுவரை நீடித்தது. அதை மாற்றி அமைத்தவர் சம்பந்தன் ஐயா அவர்கள். அந்த ஆண்டு ஒக்தோபர் மாதக் கடைசியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழு ஒன்று சம்பந்தன் ஐயா தலைமையில் அமெரிக்கா சென்று வெளியுறவு அமைச்சு அதிகாரிகளோடு இரண்டு நாட்கள் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியது. அதன் பின்னரே 2012 ஆம் ஆண்டு தொடக்கம் ஐநாமஉ பேரவையில் சிறிலங்கா அரசுக்கு எதிரான தீர்மானங்கள் அடுத்தடுத்து அமெரிக்காவினாலும் அதன் நட்பு நாடுகளாலும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இவ்வாறு ஈழம்வாழ் தமிழ்மக்களுக்கு எதிரான மனிதவுரிமை மீறல்கள், போர்க்குற்ற விசாரணைகள், பொறுப்புக்கூறல்கள், மீள்நல்லிணக்க முயற்சிகள் இன்று பேசுபொருளாக மாறியுள்ளது. அந்தப் பெருமை சம்பந்தன் ஐயாவின் சாணக்கிய அரசியலையே சாரும்.

“முழுமையான உள்ளக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படாவிட்டால் அதற்கு மாற்றீடாக நாங்கள் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோருவோம். ஆகையால் நாட்டின் நன்மை கருதி - நாட்டில் வாழ்கின்ற மக்களின் நன்மை கருதி - தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கருதி பெரும்பான்மை சிங்களத் தலைவர்கள் நல்ல முடிவை எடுக்க வேண்டும். புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும், தமிழ் மக்களின் வேட்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும், வடக்கு - கிழக்கில் வரலாற்று ரீதியாகத் தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்ற அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்” என்பன சம்பந்தன் ஐயாவின் பெருவிருப்பாக கடைசிவரை இருந்தது.

தமிழ்மக்கள் இழந்த அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க,இணைப்பாட்சிஅரசியல்முறைமையின் கீழ் தமிழ்மக்களின் வரலாற்றுத் தாயக பூமியில் த்தில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் இணைப்பாட்சி கட்டமைப்பின் கீழ் ஒரு தன்னாட்சி தமிழரசை உருவாக்க வேண்டும் என்ற சம்பந்தன் ஐயாவின் இலட்சியம் கைகூட இதய சுத்தியோடு உழைப்பதே அவருக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

சம்பந்தன் ஐயாவின் பிரிவினால் வாடும் அவரது துணைவியார், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# மருத்துவப் பராமரிப்புப் பணித்துறையைப் பலப்படுத்த ஒன்ராறியோ மாகாண அரசு $10 மில்லியன் டாலர்களை ஒதுக்கியுள்ளது

## அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவிப்பு

எமது மாகாணத்தில், மருத்துவப் பராமரிப்புப் பணித்துறையைப் பலப்படுத்த ஒன்ராறியோ மாகாண அரசு கூ10 மில்லியன் டாலர்களை ஒதுக்கியுள்ளது ஊரகப் பகுதிகளிலும் தொலைதூர மருத்துவமனைகளில் அவசர சிகிச்சைப் பிரிவில் 1,000க்கும் மேற்பட்ட மருத்துவதாதியர்களின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு 10 மில்லியன் டொலர்களை அளிப்பதன் மூலம் ஒன்ராறியோ தனது சுகாதார அமைப்பை வலுப்படுத்துகிறது. இத்திட்டம் தொடங்கிய காலத்திலிருந்து இதன்மூலமாக 72 மருத்துவமனைகளிலுள்ள 400 இற்கும் மேற்பட்ட மருத்துவ தாதியர்கள் பயனடைந்துள்ளதுடன், மேலும் இவ்வாண்டில் 163 அவசர சிகிச்சை பிரிவுகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். “ஒன்ராறியோ வாழ் மக்களுக்கு வீட்டிற்கு அருகாமையிலேயே தீவிர சிகிச்சைக்கான வசதியை உறுதி செய்வதில் எங்கள் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது” என அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார்.

2018 முதல், அரசாங்கம் 80,000 புதிய தாதியர்களையும், 24,000 இற்கு அதிகமான தனிநபர் மருத்துவப் பராமிப்புப் பணியாளர்களையும் நியமித்துள்ளது. மேலும் 30,000 தாதியத்துறை மாணவர்கள் தற்போது ஒன்ராறியோ கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கற்று வருகின்றனர். இந்த முதலீடு, சுகாதாரப் பணியாளர் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும், திறன்களை மேம்படுத்துவதன் மூலம் பணியாளர்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும் ஒதுக்கப்படும் 743 மில்லியன் திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்பது குறிப்பிடத்தக்கது என்றார் அமைச்சர் விஜய் தணிகாசலம்



# LOGAN KANAPATHI

Member Provincial Parliament ~ Markham - Thornhill

## புதிய மாற்றம்

எமது மாகாண அரசு அவசர சேவைப் பிரிவில் சேவை புரியும் செவிலியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் அவசர உதவித் துறையின் சேவைகளை மேம்படுத்துகிறது. இது காத்திருப்பு நேரத்தை குறைத்தும், சிகிச்சை தரத்தை உயர்த்தியுமுள்ளது. இந்த முயற்சி, சுகாதாரத் துறையில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், சேவையின் தரத்தையும் மேம்படுத்துகிறது. டொரண்டோவில் உள்ள தமிழ்ச் சமூகத்தினர் இந்த மாற்றங்களால் பெரிதும் பயன்பெறலாம். மேம்பட்ட சுகாதாரச் சேவைகளைப் பயன்படுத்தி, இந்த வாய்ப்புகளை தெரிந்துகொள்ள நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம்.





**மாகாணம் சார்ந்த தேவைகளுக்கு, என்னுடைய அலுவலகத்தை அணுகுங்கள்.**

**For appointments, email**
**logan.kanapathico@pc.ola.org**
**Tel: 905 305 1935**
**www. logankanapathi.ca**

**Constituency Office**
**7380 McCowan Road, Unit 3**
**Markham, ON L3S 3H8**

# "காணாமல் போனவர்களை எவரேனும் அடையாளம் காண விரும்பினால், அதற்கு ஒரே வழி குழியிலிருந்து பெறப்பட்ட உயிரியல் கைரேகைகளை பகுப்பாய்வு செய்வதே"

தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகள் மற்றும் பெண் போராளிகளுடையது என நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிபுணர் அறிக்கையின் அடிப்படையில் அனுமானிக்கப்பட்ட, வன்னிப் புதைகுழிகளின் சடலங்களை அடையாளம் காண, மரபணு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டுமென, அகழ்வாராய்ச்சிக்குப் பொறுப்பான பிரதான தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வன்னியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்க பட்டதையடுத்து, கொக்குத்தொடுவாய் வெகுஜன புதை குழியின் மீட்கப்பட்ட எச்சங்கள், காணாமல் போனவர்கள் உடையதா என, காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் (முஆீ) தவிசாளர் மகேஷ் கட்டுலந்த சந்தேகம் வெளியிட்டிருந்தார்.

"காணாமல் போனவர்களின் தலைவிதியை மிக உயர்ந்த தரத்திற்கு அமைய கண்டறிவதோடு, இது வரையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள காணாமல் போனவர்களுக்கும், கண்டுபிடிக்கப்பட்ட சடலங்களுக்கும் இடையில் ஏதேனும் தொடர்பு உள்ளதா என்பதை கண்டறிய எதிர்பார்க்கின்றோம்."

"காணாமல் போனவர்களை எவரேனும் அடையாளம் காண விரும்பினால், அதற்கு ஒரே வழி குழியிலிருந்து பெறப்பட்ட உயிரியல் கைரேகைகளை (biological fingerprints) பகுப்பாய்வு செய்வதே" என பேராசிரியர் ராஜ் சோமதேவ ஜூலை 10 ம் திகதி அன்று கொக்குத்தொடுவாய் அகழ்வு இடம்பெறும் பகுதியில் வைத்து வன்னி ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

போரின் போது காணாமல் போனவர்களை அடையாளம் காண தேவையான உயிரியல் மாதிரிகள் ஏற்கனவே விசாரணைக் குழுவினரால் சேகரிக்கப்பட்டு வருவதாக தெரிவித்த தொல்பொருள் நிபுணர், நீதிமன்ற உத்தரவை பெற்று விஞ்ஞான ரீதியான ஆய்வினை மேற்கொண்டு அவர்களின் சரியான காலத்தை கண்டறிய முடியும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

"மறுபுறம், இந்த சந்தர்பத்தில் காணாமல் போனவர்களை அடையாளம் காண்பதற்காக பல சத்திய கடதாசிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கௌரவ நீதவான் தெரிவித்தார். எனவே, எதிர்காலத்தில் ஏதேனும் மரபணு பரிசோதனை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுமாயின், தகுந்த மாதிரிகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளோம். மிகவும் முறையான மற்றும் விஞ்ஞான ரீதியில், அதாவது ஒவ்வொரு எலும்புக்கூட்டிலிருந்தும், இந்த மூன்றாவது கட்டத்தில் பெறப்படும் ஒவ்வொரு எலும்புக்கூட்டிலிருந்தும் மாதிரியைப் பெற திட்டமிட்டுள்ளோம்."

பாரிய புதைகுழியின் முதலாவது மற்றும் இரண்டாவது அகழ்வின்போது, பணிகளுக்கு சரியான முறைகள் பின்பற்றப்படாமையால், அவ்வாறான மாதிரிகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை என பேராசிரியர் வன்னி ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

"கடந்த முறை, கனரக வாகனங்கள் மற்றும் கனரக இயந்திரங்கள் மூலம் ஏற்கனவே அகழ்வு மேற்கொள்ளப்பட்டமையால் நிறைய இடையூறுகள் ஏற்பட்டன. இதனால், முதல் கட்டத்திலும், இரண்டாம் கட்டத்திலும் அவற்றைச் செய்ய முடியாமல் போனது. எனவே அத்தகைய இடத்திலிருந்து இதுபோன்ற சோதனைக்கான மாதிரிகளை எடுப்பது ஆபத்தானது. ஆனால் இந்த முறை, எதிர்காலத்தில் எந்தவொரு அறிவியல் ஆய்வுக்கும் பயன்படுத்தக்கூடிய மாதிரிகளை எங்களால் சரியான முறையில் பெற முடிந்தது."



40 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்ட கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் அளவு குறித்தும், விசாரணைகளுக்கு முன்னோடியாக இருக்கும் தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவ விளக்கமளித்துள்ளார்.

"இந்த மூன்றாவது சந்தர்ப்பத்தில், நான்கு மனித எலும்புக்கூடுகளை எங்களால் கண்டுபிடிக்க முடிந்துள்ளது. மேலதிகமாக கடந்த இரண்டாம் கட்டத்தில் நாங்கள் இங்கே அகற்றாத மேலும் மூன்று மனித எலும்புக்கூடுகள் உள்ளன. இவற்றை பார்க்கும்போது, இப்போது ஏழு எலும்புக்கூடுகளை அகற்ற வேண்டியுள்ளது. நாங்கள் அகழ்வுப் பணிகளைத் தொடர்கிறோம். இந்த அகழ்வின் முடிவுகளுக்கு அமைய இந்த இடத்தில் மேலும் பல எலும்புக்கூடுகள் இருப்பதைப் புரிந்துகொள்ளக்கூடிய சான்றுகள் எங்களிடம் உள்ளன. ஆனால் இதன் எண்ணிக்கை எவ்வளவு என்று சொல்வது எங்களுக்கு இன்னும் கடினமாக உள்ளது. எலும்புக்கூடுகள் ஒன்றன் மேல் ஒன்றாக வைக்கப்படாமல் இருப்பதால், அகழ்வுப் பணிகள் முடியும் வரை சரியான தீர்மானத்திற்கு வருவது எங்களுக்கு கடினமாக உள்ளது.
எனவே, இந்த எலும்புக்கூடுகள் ஒன்றின் மேல் ஒன்றாக விழுந்துள்ளதால் அவற்றை அகற்றுவது மிகவும் சிக்கலானது என நான் நினைக்கிறேன், எனவே அவற்றை மிகவும் கவனமாக அகற்ற வேண்டும்."

மனித எலும்புக்கூடுகளுக்கு மேலதிகமாக, வெகுஜன புதைகுழியில் கண்டறியப்பட்ட பகுப்பாய்வுக்கு பயன்படுத்தக்கூடிய பொருட்கள் குறித்தும் தடயவியல் தொல்பொருள் பேராசிரியர், விளக்கமளித்திருந்தார்.

"நாங்கள் இரண்டு முக்கியமான சில தொல் பொருட்களைக் கண்டுபிடித்துள்ளோம், அதாவது, பகுப்பாய்வுக்கு பொருத்தமான, பயன்படுத்தக்கூடிய இரண்டு பொருட்கள் கிடைத்துள்ளன. துப்பாக்கிச் சன்னத்தின் தலை. ஒரு புல்லட் ஹெட். மற்றொன்று இரண்டு கம்பி துண்டுகள் கிடைத்துள்ளன. எனவே நாம் அதை சுத்தம் செய்து பகுப்பாய்வு செய்ய வேண்டும். இன்று அந்த இரண்டும்தான் எங்களுக்கு கிடைத்தன."

மீட்கப்பட்ட பொருட்களின் பகுப்பாய்வு தாமதமானதற்கான காரணத்தையும் அவர் தெளிவுபடுத்தினார்.

"அது தவிர, மட்பாண்ட துண்டுகள், உடைந்த கண்ணாடி போத்தல்கள் மற்றும் பிற இரும்புத் துண்டுகளையும் நாங்கள் கண்டறிந்துள்ளோம். மட்பாண்ட துண்டுகள், கண்ணாடித் துண்டுகள், பிற இரும்புத் துண்டுகளுக்கும், எலும்புக்கூடுகளுக்கும் இடையிலான தொடர்பு என்னவென்ன எமக்குத் தெரியவில்லை. அகழ்வு முடியும் வரையில் இதுத் தொடர்பில் நாம் ஆராய வேண்டும். மேலும் கிடைக்கின்றவற்றை பார்த்து, அவர்களின் நிலைகள் மற்றும் அவைகள் எவ்வாறு இதனுடன் தொடர்புபடுகின்றன என்பது தொடர்பிலும், இறந்தவர்களுடன் அவைகளுக்கு நேரடியாக தொடர்பு காணப்படுகிறதா அல்லது அந்த சம்பவத்துடன் தொடர்புடையதா? இல்லையெனில், உடல்கள் வேறு இடத்தில் இருந்து குப்பையைப்போல் இங்கு கொண்டு செல்லப்பட்டனவா? என்பதை ஆய்வு செய்து தீர்மானிக்க சிறிது காலம் எடுக்க வேண்டும். "

ஒரு வருடத்திற்கு முன்னர் வன்னியில் தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்ட வெகுஜன புதைகுழியின் காலக்கணிப்புக்கான கார்பன் பரிசோதனைக்கு தேவையான மாதிரிகளை சேகரிக்கும் உத்தரவு இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என அவர் கூறுகிறார். ஒரு வெளிநாட்டு ஆய்வகத்தில் சரியான காலத்தை தீர்மானிக்க, கார்பன் 14 அல்லது 'பொம்ப் பள்ஸ்' அல்லதுபகுப்பாய்வு செய்யப்பட வேண்டும் என்பது அவரது பரிந்துரை.

"இந்த சம்பவம் நடந்த காலத்தை பரிந்துரைக்க நீதிமன்றம் எனக்கு உத்தரவிட்டுள்ளது.
அதனால் நான் அதை செய்துள்ளேன். ரிலேடிவ் டேட் (தொடர்புடைய காலப்பகுதி) நீதிமன்றத்தில் எவராவது கோரிக்கை வைத்தாலோ, விஞ்ஞான சோதனைக்கு அனுப்ப நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தாலோ, அகழும்போதே தெரிவிக்க வேண்டும். ஏனென்றால் நாம் அதில் மாதிரிகளை சேரிக்க வேண்டும். எனினும் அவ்வான ஒன்று இன்னும் வரவில்லை."

கொக்குத்தொடுவாய் வெகுஜன புதைகுழியில் அகழ்வில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இதுவரை எவ்வித அழுத்தமும் விடுக்கப்படவில்லை என, வன்னியில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்த பேராசிரியர், மகிழ்ச்சியாகவும் ஒத்துழைப்புடனும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

"எல்லோரும் எங்களுடன் மிகவும் நட்பாக இருக்கிறார்கள். எங்களுக்கு இதுவரை அவ்வாறான அழுத்தம் அல்லது பாதிப்பும் எதுவும் இல்லை."

2023 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில், கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்திலிருந்து கொக்கிளாய் நோக்கி சுமார் 200 மீற்றர் தொலைவில், நீர் வழங்கல் திணைக்கள ஊழியர்கள் நீர் குழாய்களை அமைப்பதற்காக நிலத்தை தோண்டிக் கொண்டிருந்த போது, மனித உடல் பாகங்கள் மற்றும் ஆடைத் துண்டுகள் வெளிப்பட்டன.



# தமிழரசினை அழித்து தான் சார்ந்தவர்களை வாழவைத்த தலைவர் இரா.சம்பந்தன்

சத்தியன் - கனடா

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய இரா.சம்பந்தன் கடந்த 30.06.2024அன்று இயற்கை எய்தினார். பொதுவாக ஒருவர் இயற்கை எய்திவிட்டால் அவர் தொடர்பில் இரங்கல் தெரிவிப்பது தமிழர் நம் பண்பாடு. எனினும் உண்மையைக் கடந்து நாம் புகழாரம் சூட்டுவது எற்புடையது அல்ல.

இவரின் மரணம் தொடர்பாக பல்வேறு தரப்பினரும் தமது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள். பொதுவாக ஒரு இனத்தின் தலைவன் இறந்தால் மக்கள் மனங்களில் கவலை அல்லது துயரம் ஒன்றை ஏற்படுத்துவது வழக்கம் ஆனால் சம்பந்தன் ஐயா அவர்கள் நம் தமிழினத்தின் தலைவராக இருந்தபோதிலும் அவரின் இறப்புச் செய்தி எவரையும் (தென்னிலங்கை தேசத்தைத் தவிர) கவலைகொள்ள வைக்கவுமில்லை அதற்கான எந்தச் சாத்தியப்பாடுகளும் காணப்படவில்லை. ஆனால் சம்பந்தன் ஐயா அவர்கள் இறந்தது தொடர்பாக எந்த சமூக ஊடகத்தினை பார்க்கின்ற போதிலும் அவர் தொடர்பான எதிர்மறையாக கருத்துக்களே அதிகம் பகிரப்படுகின்றன. இதனை உற்றுநோக்கும் போது தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் தமது எதிர்பார்ப்புக்களை அவர் மீது கொண்டிருந்தார்கள் என்பதற்கும் அதனால் ஏற்பட்ட வலியை வெளிக்காட்டுவதாகவே உள்ளது.

ஏனெனில் அனைத்து தரப்பிரனரையும் நம்பக்கூடிய வகையில் செயற்பட்டதுடன் மட்டுமன்றி பல்வேறு தரப்பினரும் இவரால் மட்டுமே இதைச் செய்ய முடியும் என்று நம்பும் அளவிற்கு கருத்துக்களை காலத்திற்கு காலம் முன்வைத்தும் வந்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் அவர்கள் ஒன்றிணைக்கக் கூடிய தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கி அதற்கு பொருத்தமான தலைவர் என்ற எண்ணப்பாட்டில் இவரை தலைவராக நியமித்தபோதிலும் இவர் தென்னிலங்கை தேசத்தின் விசுவாசியாகவே செயற்பட்டார். எனினும் காலப்போக்கில் இவரின் செயற்பாடுகளில் விரக்தியுற்ற பலர் அதிலிருந்து விலகிக் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி தானும் விடுதலைப்புலிகளின் கொலைப் பட்டியலில் இருந்ததாக பாராளுமன்றத்தில் தெரிவித்ததன் மூலம் அவர் தான் தமிழினத்தின் தலைவர் அல்ல தென்னிலங்கை தேசத்தின் ஆதரவில் அவர்களைக் காப்பாற்ற வந்த தூதுவன் என்பதை பறைசாற்றியுள்ளார்.

இந்தியாவில் தமிழ்நாட்டிற்கு ஒரு கருணாநிதி போல் எமது இலங்கை தேசத்தின் தமிழ் இனத்திற்கு ஒரு தலைவராக இரா.சம்பந்தன் அவர்கள் செயற்பட்டுள்ளதைக் காணலாம்.

இவர் அரசியல் தந்திரசாலி என்று குறிப்பிடுவதில் மிகையில்லை ஆனால் அவர் தான் சார்ந்தவர்கள் வாழ தன்னுடைய அரசியல் நலன்களைப் பயன்படுத்தியதுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு தன்னைவிட எதிர்காலத்தில் சிறந்த தலைவர்கள் எவரும் உருவாகக் கூடாது என்பதுடன் தென்னிலங்கை தேசத்திற்கு தனது விசுவாசத்தை காட்டும் நோக்குடன் தனது அரசியல் வாரிசாக சுமந்திரனை விட்டுச் சென்றுள்ளார்.

அத்துடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் ஆற்றல் மிக்கவர் அரசியல் அனுபவசாலி வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சிறந்த முறையில் கையாளக்கூடியவர். ஒரு அரசியல் கட்சியை வழிநடத்தக் கூடிய தலைமைத்தவப் பண்புகளைக் கொண்டவர்.

இவையனைத்தும் இருந்தும் அவர் தனது ஆற்றலை அரசியல் அனுபத்தை தமிழ்மக்களுக்காக தமிழ் இனத்துக்காக பயன்படுத்தவில்லை. உண்மையில் ஓர் இனத்தில் அரசியல் தலைவன்ரூபவ் அல்லது வழிகாட்டி இறந்து விட்டால் அந்த இன மக்கள் கண்ணீர்விட வேண்டும்ரூபவ் அல்லது கவலை கொள்ள வேண்டும் அல்லது அனுதாபத்தை தெரிவிக்க வேண்டும்ரூபவ் அந்த இனம் சார்ந்த தேசம் தனக்கு ஏற்பட்ட இழப்பை சோகத்தை ஏதோவொரு வகையில் வெளிப்படுத்த வேண்டும்ரூபவ் ஆனால் அவை எதுவும் இங்கு நடப்பாதாக தெரியவில்லை.

இரா.சம்பந்தன் காலமாகிவிடால் என்ற செய்தி ஒரு சாதாரண செய்தியாகக் கடந்து சென்றதைப் பார்த்தபோதுதான் இரா. சம்பந்தன் அரசியல் செயற்பாட்டால் தமிழ் மக்கள் எத்துணை தூரம் விரக்தியும் வெறுப்பும் கொண்டுள்ளனர் என்பது தெரிய வந்தது.

ஆம் தமிழ் மக்கள் இரா.சம்பந்தனை நம்பினர். அவர் தனது அரசியல் ஆளுமையைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத்தருவார் என எதிர்பார்த்தனர். எனினும் தமிழ் மக்கள் இரா.சம்பந்தன் மீது வைத்திருந்த நம்பிக்கையை அவர் இம்மியளவும் புரிந்துகொள்ளவில்லை. அன்றி அந்த நம்பிக்கைக்கு விசுவாசமாகச் செயற்படவும் இல்லை.மாறாக இரா சம்பந்தன் தன்மை ஒரு கொழும்பு வாசியாகக் காட்டிக் கொண்டதுடன் தனக்குக் கிடைத்த கட்சித் தலைமை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை அடிப்படையாகக் கொண்டு சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து சலுகைகளைப் பெற்று சுகபோகமாக வாழ்ந்தாரேயன்றிரூபவ் எல்லாம் இழந்து கண்ணீரும் கம்பலையுமாக நிற்கின்ற தமிழ் மக்களை அவர் கிஞ்சித்தும் நினைக்கவில்லை.

சுருங்கக்கூறின் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையையும் செய்யாத அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் கந்தறுத்து ரூடவ்ற்றில் இலங்கை தமிழரசுக்கட்சிக்குள் உள்ளக முரண்பாடுகளை ஏற்படத்தி தனக்குப் பின் தமிழனுக்கு அரசியல் தலைமையே இருக்கக் கூடாது என்பது போல எல்லாவற்றையும் நிர்மூலமாக்கி சிங்களப் பேரினவாதத்துக்குப் பேருதவி செய்துவிட்டு மறைந்து விட்டார்.

அத்துடன் தனது செல்வாக்கினைப் பயன்படுத்தி அவர் தென்னிலங்கை தேசத்திற்கு செய்த நன்றிக்கடன்களுக்கு கைமாறாக தென்னிலங்கை தேசம் அவரை எதிர்க்கட்சித் தலைவர் எனும் கதிரையில் அமர்த்தி அழகுபார்த்தது. அத்துடன் தனது இன மக்களின் துன்ப துயரங்களைக் கூடக் கண்டுகொள்ளாது ஒவ்வொரு முறையும் பொங்கலுக்கு தீர்வு பெற்றுத் தருகிறேன் தீபாவளிக்கு தீர்வு பெற்றுத் தருகிறோம் என்று ஒவ்வொரு முறையும் மக்களை ஏமாற்றி வந்துள்ளார். இவரின் வருகையினால் கதிர்காமர்ரூபவ் நிலன் திருச்செல்வம் போன்றவர்கள் புனிதர்களாக எண்ணுமளவுக்கு சூழ்நிலை தோன்றியுள்ளது.

## சிங்களத் தலைவர்கள் இரங்கல்

இரா. சம்பந்தனுக்கு அஞ்சலி செலுத்துவதில் தமிழ்த் தரப்பினை காட்டிலும் சிங்கள அரசியல் தலைவர்கள் ஒவ்வொருவரும தமது இரங்கல்களையும் அவர் இலங்கை தேசத்திற்கு ஆற்றிய விசுவாசத்தையும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சொல்லி வருகின்றார்கள் அந்தவகையில்ரூபவ் இரா.சம்பந்தனின் மறைவு தொடர்பில் பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தி இரங்கலைத் தெரிவித்த ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கையில் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன்ரூபவ் ஒருமுறை என்னுடன் உரையாற்றும் போது "ரணில்ரூபவ் நான் நாட்டைப் பிரிப்பேன் என்று நினைக்கிறீர்களா? நான் சிறுவனாக இருந்த போதுரூபவ் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரம் பெறுவதைப் பார்க்கச் சென்றிருந்தேன்" என குறிப்பிட்டார். அதனைக் காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை. நம்மில் பலர் அப்போது பிறக்கவே இல்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும்ரூபவ் அவர் எப்போதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டிற்காக பங்காற்றினார் என குறிப்பிட்டார். மீண்டும் ஏமாற்றப்படாமை சென்றார் மற்றுமொரு ஜனாதிபதியுடனும் கதைத்து ஏமாறுவதற்கு முன்பாகவே நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் காலமாகிவிட்டதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார். வடக்கு - கிழக்கு இணைந்த சமக்ஷ்டி தீர்வுதரப்பட வேண்டும் என்பதில் இலங்கையின் எட்டு ஜனாதிபதிகளுடன் பேசி நம்பி ஏமாந்த தலைவராகவே சம்பந்தன் பார்க்கப்படுகின்றார். அத்தோடு சம்பந்தன்ரூபவ் அரசியலுக்கு வருகின்ற போது தான் முன்னிலையாகி இருந்த வழக்குகளை முடித்து விட்டே வருவேன் எனக் கூறி மக்களின் உரிமைக்காகவே தனது தொடர் போராட்டத்தினை அகிம்சை வழியில் முன்னெடுத்தார் என்ற தோற்றப்பாடும் உண்டு.



## கட்சிக்குள் வந்த எதிர்ப்பு

"கட்சியின் தலைமைப் பதவியில் இருக்கும் சம்பந்தன் விலக வேண்டும் எனவும்ரூபவ் வயது முதிர்ச்சியின் காரணமாக தொடர்ச்சியாக சம்பந்தனுக்கு நாடாளுமன்றத்திற்கு வர முடியாது. இதனால் அவர் பதவி விலக வேண்டும்" என அவரால் வளர்த்தெடுக்கப்பட்ட அறிமுகப்படுத்தப்பட்ட அவரின் விசுவாசியினாலேயே கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதை அடுத்து அவருக்கு பாரிய ஏமாற்றத்தையும் கவலையையும் ஏற்படுத்தியதாக கட்சி உறுப்பினர்களால் முன்னர் குறிப்பிடப்பட்டது. அத்துடன் அவருடன் கதைத்து அவரை பதவி விலகச் செய்வதற்காக குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. இதற்கு முன்னர் இருந்த தந்தை செல்வா உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் வயது முதிர்ந்தாலும் கூட கட்சிக்குள் மிகவும் மரியாதையாக நடத்தப்பட்டிருக்கின்றனர். இவ்வாறான நிலையில் நீண்ட அரசியல் வரலாற்றைக் கொண்ட சம்பந்தன் பதவி விலக வேண்டும் என்று கூறி அவரின் இறுதிக் காலத்தில் அரசியல் ரீதியாக பாரிய அழுத்தங்கள் முன்வைக்கப்பட்டன.எனினும் அதற்கு இணங்கவில்லை.

"இலங்கை தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும்ரூபவ் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அவருடைய முதுமையின் பொருட்டு நடைமுறை அரசியலில் பங்களிப்புச் செய்யமுடியாதிருப்பதனால் அவர் தனது பதவியைத் துறக்க வேண்டும் என்று நாங்கள் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றோம். விசேடமாக நான் அந்த விடயத்தில் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றேன் என்றும் சுமந்திரன் தெரிவித்திருந்தார். அதற்கு சம்பந்தன் ஐயா அவர்கள பின்வருமாறு கூறியிருந்தார்.

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது திருகோணமலை மக்கள் தன்னை அந்த மாவட்டத்தின் முதலாம் நபராக தெரிவு செய்திருக்கின்றார்கள். அவர்கள் எனது உடல்நிலைமைகளை அறிந்தே தெரிவு செய்திருக்கின்றார்கள் என்றும் குறிப்பிட்டு தன்மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுத்து பதவி விலகாது தனது பதவியைக் காத்துக் கொண்டார். எனினும் திருகோணமலை மக்களை பிரதிநிதித்துவம் செய்து செயற்படுத்தப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. பிறிதொரு பிரதிநிதியை நியமித்தாலும் மக்கள் அவரைத் தெரிவு செய்திருப்பன் என்பது சம்பந்தனுக்கு தெரியாதது ஒன்றும் அல்ல.இதேவேளை சம்பந்தனின் அரசியலுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று கருதிய பலர் இன்று சம்பந்தனின் மரண வீட்டில் தங்களை மிகச் சிறந்த ஆளுமையாளர்களாகக் காட்டிக் கொள்ள முயல்கின்றனர்ரூபவ் தங்களது இருப்பை தக்க வைத்துக் கொள்ள சம்பந்தனின் மரண வீட்டையும் தங்களது சாதகமாக பயன்படுத்தி பலர் அரசியல் செய்ய முற்படுவதையும் காணலாம். என்ன செய்வது தமிழ் மக்கள் நம்பிக்கை கெட்ட சோகத்தோடுரூபவ் கருடபுராணம் கூறும் நியமம் நடந்தாகும் என்ற நம்பிக்கையோடு அமைதி கொள்கின்றனர்.

இம்மாதச் சிறுகதை!

இம்மாதச் சிறுகதை!

இம்மாதச் சிறுகதை!

# வாழாவெட்டி

கந்தையா தில்லைவிநாயகலிங்கம்,

இலங்கையின் யாழ்பாணத்தில் ஒரு அமைதியான கிராமத்தில்நன்முகைஎன்றஒருஇளம்பெண் கனவுகள் நிறைந்த இதயத்துடன் உயர் வகுப்பை வெற்றிகரமாக முடித்துவிட்டு, ஆசிரியர் ஆகும் எண்ணத்துடன் யாழ்ப்பாணம் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூ ரியில் கல்வி கற்று வந்தார். நவம்பர் 28, 2022 அன்று யாழ்பாணத்தை ஆண்ட இறுதி மன்னனான சங்கிலிய மன்னனின் குடும்பப்படம் தேசிய கல்வியியற் கல்லூரியில் திறந்து வைக்கப்பட்டது. சங்கிலிய மன்னனின் குடும்பப்படத்தை சித்திரத்துறை மாணவ ஆசிரியர்களின் மூலம் கல்லூரியின் சித்திரத்துறை விரிவுரையாளர் நெறிப்படுத்தியிருந்தார். அதேவேளை கல்லூரியின் நுழைவாயிலில் தனிக்கருங்கல்லால் ஆன 13.5 அடி சங்கிலியன் உருவச்சிலை இருப்பதும் குறிப்பிடத் தக்கது. அன்று மாலை கலை நிகழ்ச்சி ஒன்றும் நடைபெற்றது. அதில் நன்முகையின் பரதநாட்டியமும் இசை கச்சேரியும் இருந்தது. அவள் இப்ப இறுதியாண்டு மாணவி. அவள் மேடையில் ஏறுகையில் அவளுடைய திராட்சை விழிகள் நம்பிக்கையுடன் பிரகாசித்தன, அவளுடைய சிரிப்பு ஒரு மென்மையான மெல்லிசையாக எதிரொலித்தது.

சதிராடும் அவளின் கண்களுக்கு முன்பு - வாழ்வில் சற்றும் சளைத்ததில்லை அவளின் இதழ்கள், மதியையும் மயக்கும் அளவில் - அவளின் சிவந்த உதட்டில் இருந்து வரும் பாடல் வரிகள் எல்லோர் மனதையும் கொள்ளை கொண்டன. அப்படி ஒரு பாடலை தானே இயற்றி அங்கு பாடினாள். முன் வரிசையில் இளம் டாக்டர் இமையாளன் தலைமை விருந்தினராக அங்கு வீற்றிருந்தான். அவன் கண்கள் அவளையே பார்த்தபடி இருந்தது. "புயலே சுமந்து பிறையே அணிந்து பொருவிலுடன் கயலே மணந்த கமலம் மலர்ந்து, பசும்பொற் கொடி நின்றது போல" அவனுக்கு அவள் தெரிந்தாள். ஆமாம் கூந்தலைச் சுமந்து, பிறை போன்ற நெற்றியை கொண்டு, போரிடும் வில் போன்ற புருவத்தை உடைய, கயல் மீன் போன்ற கண்ணுடன், தாமரை முகத்தாள் மலர்ந்து தூய பொன்னாலான கொடி நின்றது போல அவன் மனதில் அவள் நின்றாள். அவன் சற்று தன்னை இழந்து தடுமாறினான். அவன் வாய் "அஞ்சனம் தீட்டிய விழிகள், என்னை அடிமை ஆக்கிடும் வழிகள், தஞ்சம் அடையத் துடிக்கும் என்னை, வஞ்சம் தீர்க்க கொஞ்சும் இதழ்கள், மஞ்சத்தில் இல்லை சொர்க்கம், அவளின் மை தீட்டிய விழிகளில் ... " என தன்பாட்டில் முணுமுணுத்துக்கொண்டு இருந்தது.

வசீகரத்தையும் கவர்ச்சியையும் வெளிப்படுத்திய இமையாளனை அவளின் கண்களும் கொஞ்சம் மேய்ந்தன. என்றாலும் அவள் அதற்குமேல் ஒரு கற்பனையும் செய்யவில்லை. பொதுவாக பெண்களின் அடி மனதில் ஒரு ஏக்கம் இருந்து கொண்டு தான் இருக்கும், ஆனால் அதை வெளியில் யாரும் பார்த்து விட கூடாது என்பதில் பெண்கள் சர்வ எச்சரிக்கையாக இருப்பார்கள். உண்மையில் ஒரு ஆண் ஒரு பெண்ணை பார்பதை காட்டிலும் பெண்கள் தான் ஆதிக அளவில் நோட்டம் போடுவதாக ஒரு உளவியல் சொல்கிறது. அதிகமாக அச்சம் மடம் நாணம் ஒருவேளை வெளிப்படையாக சிந்திக்க தடுத்து இருக்கலாம்? அல்லது நீ பெண் பெண் என்று வீட்டில் சொல்லி சொல்லி வளர்த்த கட்டுப்பாடாக இருக்கலாம்? அவளின் வீட்டைச் சுற்றியுள்ள பசுமையான நிலப்பரப்புகளைப் போலவே, பழக்கவழக்கங்களும் மரபுகளும் பாரம்பரிய குடும்பம் ஒன்றில் பிறந்த அவளிடம் ஒட்டியிருந்தன.

ஒருகிழமைக்கு பின், நன்முகையின் வீட்டுக்கு இமையாளனின் பெற்றோர் பெண்கேட்டு வந்தனர். நன்முகையின் பெற்றோர் இப்படி ஒரு வரன் தங்கள் வீடு தேடிவரும் என்று கனவில் கூட நினைக்கவில்லை. அவர்கள் மிக மிக சந்தோசமாக ஏற்றுக்கொண்டனர். இமையாளன் ஒரு பிரசித்தி பெற்ற மருத்துவர் மட்டும் அல்ல, ஒரு விளையாட்டு வீரரும் கூட. அவனின் அப்பா ஒரு பெரும் செல்வாக்கு உள்ள செல்வந்த வர்த்தகர். "அத்தி மலரும் அருங்காக்கை வெண்ணிறமுங், கத்து புனல் மீன் பதமுங் கண்டாலும் ◻ பித்தரே, கானார் தெரியற் கடவுளருங் காண்பரோ, மானார் விழியார் மனம்" என பார்ப்பதற்கு அருமையான அத்தி மலரும், காக்கையின் வெள்ளை நிறமும், ஒலிக்கின்ற கடலில் உள்ள பெரு மீன்களின் கால்களும், ஒருக்கால் பார்க்க இயன்றாலும், பெண்களின் மன நிலையை நம்மால் காண முடியாது என ஒரு நீதி வெண்பாப் பாடல் கூறினாலும், நன்முகை, மனம் திறந்து வெளிப்படையாகவே தன் மனநிலையை உறுதியாக தெரியப் படுத்தினாள்.



நன்முகை, இமையாளன் இருவருக்கும் பெற்றோர்கள் வாழ்த்த, ஊரார் போற்ற, நண்பர்கள் சூழ மகிழ்ச்சியான கொண்டாட்டங்களுடன் திருமணம் கொண்டாடப்பட்டு நன்முகையும் இமையாளனும் ஆழ்ந்த காதலில் வாழ்வை ஆரம்பித்தார்கள். அவர்களின் ஆரம்ப நாட்கள் ஒரு பிரகாசமான எதிர்காலத்திற்கான கனவுகளை நெய்ததுடன், அவர்கள் புது வீட்டைக் கட்டி, தங்கள் அன்பின் வண்ணங்களால் வர்ணம் பூசி, எண்ணற்ற மகிழ்ச்சியான தருணங்களைப் அங்கு பகிர்ந்து கொண்டனர். அவர்கள் இருவரும் உள்ளத்தால் ஒன்றிப், பொன் எழில் பூத்து புது வானில் சிறகை அடித்து பறந்தனர். ஆனால் காலப்போக்கில், அவர்களின் திருமணத்தில் ஒரு விரிசல் தோன்றத் தொடங்கியது.

கணவன், மனைவி இருவருமே ஒருவொருக்கு ஒருவர் மதிப்பளித்து, அன்போடும், அர்ப்பணிப்போடும் வாழ்ந்தால் இல்லறம், நல்லறமாக மாறும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. என்றாலும் பெற்றோர்கள், உறவினர்களிடம் இருந்து தனிக்குடித்தனம் தூ ரப் போனபின், தாங்களே உடனுக்குடன் முடிவு எடுப்பதாலும் சிலவேளை விட்டுக்கொடுப்புக்கள் இல்லாமல் சிக்கல் ஏற்படுகின்றன என்பது உண்மைதான். அதுமட்டும் அல்ல, இன்று சமுதாயத்தில் நிலவிவரும் பல்வேறு பிரச்சினைகளில் தம்பதியினரின் கருத்துவேறுபாடும் ஒன்றாகும். வாழவும் முடியாமல், மீளவும் முடியாமல், போலி வாழ்வு வாழ்ந்து வாழ்வை வீணாக்குபவர்களை இன்று காணக்கூடியதாக உள்ளது. அதற்காக எல்லா நேரமும் சமாளித்து போகவேண்டும் என்று அர்த்தம் இல்லை.

எமது சமுதாயத்தில் குடும்பம் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. பெண்ணுக்கு அவளது மரியாதை மனைவியாகும் போதும், தாய் ஆகும் போதும் கிடைக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அது சரியான கணவனை அடையும் பொழுது தான். இமையாளனின் வேலை அவரை நீண்ட நேரம் வேலை செய்ய வைத்தது, நன்முகையை வீட்டில் தனியாக விட்டுவிட்டார். ஆனால் அவள் அதை பெரிதாக பொருட்படுத்தவில்லை. இளம் தம்பதியராக, காதலராக இரண்டு மூன்று ஆண்டுகள் அனுபவித்தபின், தாயாகும் அவளின் ஆரம்ப எண்ணம் மேல் தான் கோபம் வந்தது. ஒரு குழந்தை இருந்து இருந்தால் அது அவளின் தனிமையை குறைப்பதாகவும் ஆறுதலாகவும் இருந்து இருக்கும். காலப்போக்கில் அவர்களுக்கிடையே உள்ள தூரம் வளர்ந்தது, விரைவில், தவறான புரிதல்கள் உறவில் ஊடுருவத் தொடங்கின.

நீண்ட வேலை, நேரம் சென்று வீடுவருதல், களைப்பு போன்றவற்றால் இமையாளன் நன்முகையுடன் தனது துணைக்கென ஒரு நேரம் சரியாக ஒதுக்குவது இல்லை. அவன் நல்ல வேலை, நல்ல சம்பளம், நல்ல வசதி, சமூகத்தில் நல்ல அந்தஸ்து. அத்தனையும் அவளும் அனுபவிக்கக் கூடியதாக இருந்தது. என்றாலும் ஒரு தனிமை அவளை வாட்டிக்கொண்டே இருந்தது. அவர்கள் இருவரும் பரஸ்பரம் மனம் விட்டு பேசுவது குறைந்து கொண்டே போனது. இங்கு உணர்வுகளுக்கோ உணர்ச்சிகளுக்கோ உறவுகளுக்கோ முக்கியத்துவம் இன்றி போகத்தொடங்கியது.

நன்முகை அவனுக்கு பிடித்தமான உணவைச் சமைத்து, தன்னை அலங்காரம் செய்து அவன் வேலையால் திரும்பி வரும் பொழுது ஆவலுடன் காத்திருந்து தொடர்பை உயிர்ப்புடன் வைத்திருக்க தன்னால் இயன்றவரை முயன்றாள். இருப்பினும், இமையாளன் தனது வேலையில் அதிக ஈடுபாடு கொண்டவராக சில பல வேளை, நன்முகையை புறக்கணித்து விடுவான். அதனால் நன்முகை விரக்தியின் விளும்புக்குப் போகப்போக அவளிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டது. இப்ப அவள் அவனுக்காக காத்திருப்பது இல்லை. உணவை சாப்பாட்டு மேசையில்வைத்துவிட்டுநேரத்துடன்படுத்துவிடுவாள் அல்லது தன் நண்பிகளுடன் பொழுதுபோக்குவாள். அவன் அவளுடன் தன் நேரங்களைப் பொறுத்து கொஞ்சி குலாவி கதைக்க வந்தாலும் அவள் அவனை பொருட்படுத்தாமல் புறக்கணிக்க தொடங்கினாள். அவளின் கோபம் புரிகிறது. அது எங்கே போகும் என்பதை அவள் உணரவில்லை. அவள் நினைத்தது எல்லாம், இப்படி செய்தால், அவன் தன் பிழையை உணர்ந்து, வீட்டிலும் தன்னிலும் ஒரு குறிப்பிட்ட நேரமாவது செல்வழிப்பான் என்றே! ஆனால் அது தான் அவளின் வாழ்க்கையையே முற்றாக மாற்றி விட்டது.

உடற்கூறு ரீதியாக இமையாளனின் இந்த இளம் வயதில், நன்முகையின் புறக்கணிப்பால், ஏற்படுகிற காம உணர்வு சமுதாயக் கட்டுப்பாடுகளை மீறத் தொடங்கியது. அவள் நினைத்தது ஒன்று நடந்தது ஒன்றாகிவிட்டது. அவன் மது, மாது இரண்டுடனும் மெல்ல மெல்ல தொடர்பை ஏற்படுத்தி கொண்டான்.

தொடர்ச்சி 10 பக்கம்...

09 பக்கம் தொடர்ச்சி...

## வாழாவெட்டி இம்மாதச் சிறுகதை!

நன்முகையை அவன் ஏறெடுத்து பார்ப்பதும் இல்லை. ஒரு மனைவி வீட்டில் இருக்கிறாள் என்பதை மறந்தே விட்டான். என்றாலும் வேலையில் அவன் கவனம் எள்ளளவும் குறையவில்லை. அவனின் மாற்றத்தை கண்ட சமுதாயம், அவனை திட்டவில்லை. மாறாக அவளையே திட்ட தொடங்கிவிட்டது.

காலப்போக்கில், நன்முகையை வாழாவெட்டி என ஒதுக்க தொடங்கினார்கள். சிலர் பரிதாபத்தால் கிசுகிசுத்தனர், மற்றவர்கள் ஆர்வத்தால் கிசுகிசுத்தனர், ஆனால் நன்முகை கிசுகிசுக்களை பொருட்படுத்தவில்லை. கணவன் உண்மை நிலையை அறியாமல் வெறுத்து தள்ளினாலும் ஒரு பெண்ணால் வலுவாக நிற்க முடியும் என்று நம்பினாள். அவனின் அறியாமையை ஒரு காலம் நீக்க முடியும் என்றும் நம்பினாள். அவளுக்கு சமுதாய அமைப்பின் மேல் வெறுப்பு வெறுப்பாக வந்தது. ஏன் தன் மேலேயே ஒரு கோபம் வந்தது.

ஆணாதிக்கச் சமூகம் பெண்ணை எப்படிப் பார்க்கிறதோ, அப்படியே அவர்களால் உருவாக்கப்பட்ட மொழியும் பெண்ணைப் பார்க்கிறது என்று உணர்ந்தாள். பெண், திருமணமாகி கணவனால் கைவிடப்பட்டால் அல்லது ஒதுக்கப்பட்டால் 'வாழாவெட்டி' என்று தூற்றப்படுகிறாள். மனைவியைப் பிரிந்து வாழும் ஆடவனுக்கு இந்த அவச் சொல் கிடையாது. அது ஏன் என்று தனக்குள் வாதாடினாள். குழந்தை பெற்றுத் தராதவள் 'மலடி' என்று பழிக்கப்படுகிறாள். ஆனால், ஆணின் மலட்டுத்தன்மை வெளியே சொல்லப்படுவதேயில்லை. ... இப்படி அவள் மனம் எதை எதையோ அலசிக்கொண்டே இருந்தது. பத்தினி என்றால் என்ன ? அவள் தனக்குத்தானே கேள்விகேட்டாள். தன் உடல் தேவைக்கு மட்டும் அவ்வப்போது பாவிக்க, அதை ஆமோதித்து, தாலியை முத்தம் செய்து கண்ணில் ஒற்றிக்கொள்ளும் பத்தினி வேஷம் போட நான் தயாராய் இல்லை என்று அவளும் ஒரு எல்லைக்கு போய்விட்டாள். தன் கணவர் மௌத்கல்ய முனிவரை, நளாயினி கூடையில் சுமந்துகொண்டு போய் கணவர் விரும்பும் பெண் வீட்டில் விட்டுவிட்டு வெளியே காவல் இருந்தாளாம். அவளை பதிவிரதையாம், பத்தினியாம் ? அவளுக்கு சிரிப்பு வந்தது. அவள் அவனை விட்டு தாய் வீடு போய் அல்லது ஒரு தனி வீட்டில் இருந்து, ஒரு ஆசிரியையாக தன் பழைய கனவை நிறைவேற்றுவது என்ற முடிவுக்கு வந்து, அவன் இப்ப ஒழுங்காக வீடு வாராததாலும், துப்பரவாக கதைப்பதில்லை என்பதாலும், அதை அவனிடம் நேரடியாக கூறாமல், ஒரு கடிதம் மூலம் தெரிய படுத்தினாள்.

திருமணத்தன்று யாவரும் கூடி எதிர்பார்ப்போடும் நம்பிக்கையுடனும் புதுவாழ்வு ஆரம்பமாகும். ஆனால், பிரிந்த அன்று வாழாவெட்டி என்ற பட்டத்துடன் புறக்கணிக்கபட்ட தனி வாழ்வு ஆரம்பமாகும். சமுதாயம் குற்றம் கண்டுபிடிக்க ஆரம்பித்துவிடும். நீ ஒழுங்காக அனுசரித்து போயிருந்தால் அவன் ஒழுங்காக இருந்திருப்பான் என்ற ஆயிரம் விமர்சனங்கள் கூறும். விசேட நாட்களுக்குரிய வரவேற்பு கூட அவளுக்கு மறுக்கப்படும். சிலவேளை உறவுகள் உறவு கொள்ளக் கூட மறுப்பினர். சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவளாக நிரந்தரமாக போய்விடுவேன் என்பது அவளுக்கு தெரியும். எனவே தான்விவாகரத்துகோராமல்பிரிந்துபோகநினைத்தாள். திறந்த தொடர்பு மற்றும் புதுப்பிக்கப்பட்ட புரிதல் மூலம் கட்டாயம் மீண்டும் ஒரு நாள் இணையலாம் என்பது அவளின் முடிவு. காரணம் இமையாளன் அறிவு படைத்தவன். நல்ல குடும்பத்தில் பிறந்தவன்.

இது கோபம், வெறுப்புகளால் ஏற்பட்ட ஒரு தற்காலிக மாற்றமே!

கந்தையா தில்லைவிநாயகலிங்கம்,

முற்றும்.

# தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவு அந்த அரசியல் போக்கை செயல்முனைப்பு உள்ளதாக மாற்றக் கூடியது

இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கும் பொதுக் கட்டமைப்பானது 14 பேர்களைக் கொண்டது.ஏழு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் 7 சிவில் சமூக பிரதிநிதிகளும் அதில் உண்டு. அப்படி ஒரு கட்டமைப்பு, அப்படி ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை இதற்கு முன் ஈழத் தமிழர்களின் நவீன அரசியலில் உருவாக்கப்பட்டதில்லை.

அந்த உடன்படிக்கையானது,அதில் எதிர்காலத்தில் இணையக் கூடிய கட்சிகளுக்காக தொடர்ந்து திறந்திருக்கும் என்று அந்த நிகழ்வில் கூறப்பட்டது. விரைவில் பொது வேட்பாளர் யார்? அவருடைய தேர்தல் விஞ்ஞாபனம் எது? போன்ற விடயங்கள் வெளித் தெரிய வரலாம்.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் சாராம்சத்தில்,தமிழ்ப் பொது நிலைபாடுதான். தமிழ்ப் பொது நிலைப்பாடு என்பது, நபர்கள் சார்ந்தது அல்ல் கட்சிகள் சார்ந்தது அல்ல. அது தமிழ் ஒற்றுமையின் குறியீடு. தமிழ்ப் பொது நிலைப்பாட்டின் குறியீடு. அதைத் தனி நபர் மையப்படுத்தி அல்லது கட்சி மையப்படுத்தி சிந்திக்கத் தேவையில்லை.

இந்த விடயத்தில் பலரும் முதலில் கேட்பது யார் அந்த பொது வேட்பாளர்? அவரை ஏன் இன்னும் கண்டுபிடிக்கவில்லை? என்பதுதான். அவர் யார் என்பதை கூறுங்கள் நாங்கள் ஆதரவை காட்டுகிறோம் என்று கூறுபவர்கள் அநேகர் உண்டு.இந்தக் கருத்துக்கள் எங்கிருந்துவருகின்றன?தமிழ்அரசியல்கடந்த தசாப்தங்களாக நபர்களை மையப்படுத்தி அல்லது கட்சிகளை மையப்படுத்தி கட்டமைக்கப்பட்டதுதான் காரணம்.

ஆனால் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒரு குறியீடு என்றும்,இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கும் பொதுக் கட்டமைப்பின் கீழ் உருவாக்கப்பட இருக்கும் உபகுழுக்களில் ஒன்று அந்த வேட்பாளர் யார் என்பதை விரைவில் கண்டுபிடிக்கும் என்றும் ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. எனினும் கட்டமைப்புக்கு ஊடாக அல்லது கட்டமைப்பு சார்ந்து சிந்திக்காத ஓர் அரசியல் போக்கின் விளைவாக, தனி நபர்களை மையப்படுத்தி அல்லது கட்சிகளை மையப்படுத்தி சிந்திக்கும் ஓர் அரசியல் போக்கின் விளைவாக,யார் அந்த வேட்பாளர் என்ற கேள்வி எப்பொழுதும் மேலெழுகின்றது.அதற்குரிய கட்டமைப்பு இனிவரும் வாரங்களில் அதற்கு விடை கூறும்.

இப்பொழுது உருவாகியிருக்கும் தமிழ் ஐக்கியமானது, அதன் அடுத்த அடுத்த கட்ட வளர்ச்சிகளுக்கு போகுமாக இருந்தால் அது எதிர்காலத்தில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற ஒரு விடயத்தையும் கடந்து நீண்ட கால நோக்கில் தமிழ் அரசியலை சரியான தடத்தில் ஏற்றும் ஒரு கட்டமைப்பாக வளர்ச்சி பெறக்கூடிய வாய்ப்புகள் உண்டு. இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கும் கூட்டானது,ஏழு கட்சிகளோடானது. தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்ட ஏழு கட்சிகள்.

அரசியல் என்பது சாத்தியக கூறுகளின் கலை.சாத்தியக் கூறானவற்றில் இருந்துதான் எதையும் தொடங்கலாம். ஐக்கியமும் உட்பட. சாத்தியமானவற்றில் இருந்து தான் சாத்தியமற்றவற்றைச் சாதிக்கலாம். எவ்வளவு உயரத்துக்கு வானத்தில் கோபுரம் கட்ட விரும்பினாலும் நிலத்தில் கிடைக்கக்கூடிய நிலப்பரப்பில்தான் அத்திவாரத்தை போட வேண்டும். அப்படி ஒரு அத்திவாரம்தான் இப்பொழுது போடப்பட்டிருக்கிறது என்று எடுத்துக் கொள்ளலாமா?

NIRMALAN- CANADA

# கனடாவின் அழகிய மாகாணமான அல்பேர்ட்டா வின் Jasper என்னும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க நகரம் காட்டுத்தீக்கு இரையாகி நினைவுத் தலங்கள் ஆகியவையும் எரிந்து அழிந்தன

Athisayaa Prabagar

கனடாவின் அழகிய மாகாணங்களில் ஒன்றான அல்பேர்ட்டா வின் துயளிநச என்னும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க நகரம் காட்டுத்தீக்கு இரையாகி 50 வீதமான வரலாற்று பதிவான கட்டடங்கள் மற்றும் நினைவுத் தலங்கள் ஆகியவையும் எரிந்து அழிந்து போயின என அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி மாகாணத்தின் முதலமைச்சரான னுயபெைடடந ளுஅவைா அம்மையார் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் கண்களில் நீர் வடிய வடிய தனது உருக்கமான பதில்களை அளித்தார். அந்த மாகாணத்தின் துயளிநச என்னும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க நகரம் காட்டுத்தீக்கு இரையாகி தனது சோபையை இழந்துள்ளது என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன



Due to the widespread wildfire causes destruction in the City of Jasper in Alberta, Emergency Evacuation in Order there.- -

Wildfiresnear Jasper, Alberta have intensified, forcing an estimated 25,000 residentsand tourists to evacuate the town. Two major wildfiresthreatenthecityasofficials work hard to manage the situation.

The Southern wildfire began due to dry conditions and strong winds which grew rapidly and made its way to the town of Jasper. Although Jasper National Park received a small amount of rain which helped reduce fire, it was not enough to control the entire situation.

The Mayor of the Municipality of Jasper, visibly moved by the situation, expressed her deep concern and solidarity with residents and visitors impacted by the wildfires. She announced the Alberta government's commitment to assisting the affected families to recover and rebuild so that they can be a "one-of-a-kind" community once again.

An evacuation order for Jasper was issued on Monday night and by Wednesday, it was completed. Parks Canada, coordinating with federal, provincial and municipal agencies, mobilized all available resourcestoprotectthetownandits critical infrastructure.

Crews are working closely to save as many structures as possible but this has been named as a significant loss according to Parks Canada. Infrastructures such as Jasper Maligne Lodge, small companies, and, neighbourhoods have been damaged severely. Firefighters remain in town and are trying their best to protect facilities, pipelines, and the wastewater treatment plant.

Jasper National Park, a national and international historical treasure, has also closed until August 6 but is providing updates about the reopening and potential further closures. Stars like Marilyn Monroe and TV shows such as "The Bachelor" were filmed there.

Many animals such as bears, cougars, elk, and goats have also been impacted by the crisis. Probable train cancellations from Via Rail have been issued to warn residents due to safety concerns andpoorairquality.MajorCanadian airlines have implemented flexible rebooking policies for impacted passengers and are helping to provide the necessary support.

PrimeMinister Justin Trudeau wrote on social media platform X that Canadian Forces resources and emergency wildfire resources will be deployed to the province immediately. British Colombia, having its own wildfire crisis could not assist Alberta and its residents. For those affected by the disruptions, it is important to stay informed, contact travel providers, follow safety instructions, and utilize all support resources offered by the agencies.

Despite the challenging circumstances, the community of Jasper and support from Canada offer hope for recovery and stand with residents in the wake of these devastating wildfires.

# உணவே மருந்து
## வாழ்வில் இயற்க்கையும் உணவையும் தேடி ஒரு பயணம்

"மருந்தென வேண்டாவாம் யாக்கை கருந்தியது அற்றது போற்றி யுணின். என்னும் வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப மிகவும் நோய் பாதிப்பிற்கு உள்ளானவர்கள் நோய் நீங்கும் வரை உண்மையான இயற்கை உணவில் வாழ்வது பயன் தரும்.



நடுத்தரமான நம்மால் தாங்கிக் கொள்ளக்கூடிய நோய் உள்ளவர்கள் காலை மற்றும் மாலை இயற்கை உணவினை உண்டு மதியம் சமையல் செய்த உணவுகளை எடுத்துக் கொள்ளலாம்.

சாதாரணமான உணவிலேயே சரி செய்யக்கூடிய நோய் உள்ளவர்கள் காலையும் மதியமும் சமையல் செய்த உணவுகளை எடுத்துக்கொண்டு இரவு மட்டும் இயற்கை சார்ந்த உணவுகளை எடுத்துக் கொள்ளலாம். இதனால் என்ன நிகழும் என்றால் மருந்துகளும் மருத்துவர்களும் கைவிடப்பட்ட நோய்கள் கூட இந்த உணவு பழக்கத்தின் மூலம் உலகமே வியக்கும் வண்ணம் அனைத்து விதமான மாற்றம் ஏற்படும் வகையில் உடலில் மாற்றங்கள் ஏற்பட்டு நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் நலமாக வாழ்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதை கண்கூடாக பார்த்துக் கொண்டு இருக்கின்றோம்.



இதனுடன் கண்டிப்பாக உடல் உழைப்பும் அவசியம். உடற்பயிற்சி செய்பவர்கள், அனைவரும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். முடியாத பட்சத்தில் நடை பயிற்சி, மூச்சுப் பயிற்சி ,யோகாசன பயிற்சி, சூரிய நமஸ்காரம் என எளிய பயிற்சிகளை செய்து உடலையும் மனதையும் பேணிக்காப்பது அவசியம். இதில் அனைத்தையும் விட முடிந்த அளவு இயற்கை சூழலை ஏற்படுத்திக் கொண்டு வாழ்வது சிறப்பு ஏனென்றால் இயற்கையாக தாவரங்களுடன் நாம் பயணிக்க கற்றுக் கொள்ள வேண்டும்.




தாவரங்கள் இல்லை எனில் உயிரினங்கள் எதுவுமே வாழ முடியாது என்பது திண்ணம். ஆகையால் முடிந்த அளவு இயற்கை தாவரங்களையும் அந்த சூழ்நிலையும் நம் உடன் அமைத்துக் கொள்வது நல்லது. இதன் மூலம் நம் உடம்பிற்கு தேவையான நல்ல ஆக்ஸிஜன் கிடைக்கும். நல்ல காற்றோட்டம் கிடைக்கும். உடலும் ஆரோக்கியமாக இருக்கும். சில பறவைகளுக்கு நாம் இருப்பிடத்தை அமைத்து கொடுத்தது போலவும் மனதிருப்தி கிடைக்கும்.



காலையில் பறவையின் சப்தங்கள் அணில், மைனா, புறா காகம், எறும்புகள் சில வகைகள் வந்து தங்கி இருக்க நம்மால் இயன்றதை செய்து கொடுப்போம். இதற்காக நாம் ஒன்றும் உயிரியல் பூங்கா அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. நம்மால் முடிந்த வரை சில ஜீவராசிகளை வளர்ப்போம். (அதன் போக்கில் இயற்க்கையாக) இயற்கை உணவு முறையை நாம் கடைபிடிக்க விடியற்காலை எழுந்தவுடன் வெறும் வயிற்றில் இரண்டு டம்ளர் தண்ணீர் அருந்த வேண்டும் . இரு நேரமும் குளிர்ந்த நீரில் குளித்தும், இரு நேரம் பல் துலக்கியும், நம் உடலுக்கு ஏற்றவாறு மூச்சு பயிற்சி, ஆசனம், தியானம், ஆகிய அனைத்தையும் தினமும் செய்ய வேண்டும் மாவுச்சத்து மற்றும் கொழுப்பு சத்து உள்ள உணவுப் பொருட்களை குறைத்துக் கொண்டு நார்சத்து நிறைந்த உணவு பொருட்களை காய்கறிகள் கீரைகள் பழ வகைகள் பருப்பு வகைகள் பயறு வகைகள் அதிக உணவில் சேர்த்துக் கொள்வது அவசியம்.

குறிப்பாக அவரை வகைகளில் பீன்ஸ் துவரை வகைகள், கொடி மரத்தில் வளரும் நீர் சார்ந்த காய்கறிகள் அதிக பயன் தரும். நம் உடம்பிற்கு பழவகைகள் அனைத்தும் உகந்தவை. நல்ல ஆரோக்கியமான வாழ்க்கை வாழ முடிந்த அளவு

இயற்கையில் பயிரிடப்பட்ட காய்கள் ,கனிகள், கீரைகள், தானியங்கள், பாரம்பரிய அரிசிகள் அதன் பயன்களை அறிந்து கொண்டும், சிறுதானியங்கள் அதன் பயன்களை தெரிந்து கொண்டும் நாட்டு ரக காய் மற்றும் கனிகளை எடுத்துக் கொள்வது நலம் பயக்கும்.

முடிந்த அளவு அனைவரும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை வீட்டில் செய்த பலகாரங்கள் சாப்பிடுவது உத்தமம். எண்ணெய் வகையிலும் இயற்கையில் செக்கில் ஆட்டப்பட்ட அனைத்து வகை எண்ணெய்களும் உடலுக்கு ஏற்றது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இல்லற பிரம்மச்சாரியர்கள் என எந்த சூழ்நிலையில் இருப்பவர்களும் இயற்கை உணவிற்கு எளிதில் மாறலாம்.ஆனால் குழந்தை பருவம் மற்றும் இளமைப் பருவத்தில் அவர்களை இயற்கையாக உணவிற்கு மாற்றுவது மிக எளிது.மிகச் சிறந்த பயனும் தரும்.

நம் நாட்டில் திருமூலர், அகத்தியர், விசுவாமித்திரர், விருச்சிகர் இன்னும் பல சித்தர்கள் மற்றும் முனிவர்கள் கனி உணவுகளை உண்டு வாழ்ந்ததாக கூறப்படுகிறது. காந்திஜி, பாரதியார் இன்னும் பல தலைவர்களும் இயற்கை உணவினை உண்டு அதன் பலனை பல நூல்களில் அவர்களை கருத்துக்களை கூறியுள்ளனர். அதேபோல் மேல்நாடுகளிலும் சர். ராபர்ட் மெக்காரிசன்,வெஸ்லிஸ்டிவன்சன் மற்றும் பல அறிஞர்களும் இயற்கை உணவு உண்டு அதைப்பற்றி பல ஆராய்ச்சிகளும் செய்து ஒப்பற்ற குணங்களையும் அதன் பயன்களையும் அவர்களது நூல்களில் விரிவாக எழுதியுள்ளனர்.



நமது தேசத்தந்தை எனப் போற்றப்படும் மகாத்மா காந்திஜி ஆட்டுப்பால் மற்றும் பச்சை வேர்கடலையே நிறைய நேரம் எடுத்துக் கொண்டதாக நூல்களில் உள்ளன. அவர் உத்தம வாழ்க்கை என்னும் நூலில் அதிதீவிரமான அனுஷ்டானத்தின் படி சமையலுக்கு நெருப்பு கூட உபயோகிக்க வேண்டாம். சூரியன் என்கின்ற பெரு நெருப்பில் வெந்த ஆகாரத்தை மனிதன் உண்பது என்பது நல்ல பழக்கம். பசித்தும் புசித்தும் உண்பது மிகச்சிறப்பு. கனி வகையில் சில சிட்ரிக் வகைகள் கனிகள் சிலருக்கு ஒத்துக் கொள்ளாது. அதை தவிர்த்து பழங்களை உட்கொள்வது நலம். நாம் முழுமையாக நல்வாழ்க்கை பெற விரும்பும் அனைவரும் உணவு வகைகள் அனைத்தும் உண்பதற்குரிய பக்குவமாக செய்தும் முடிந்த அளவு மாமிச உணர்வுகளை தவிர்த்து, கடவுள் மனிதனுக்கு முதல் உணவாக கொடுத்த விதைகள், கொட்டைகள், பழகுங்கள் உணவுகளை உண்ண விருப்பப்படுவர். (தொடரும்)

ஹெல்த் டிப்ஸ் by



ஜோ.பா. ராஜஸ்ரீ.

# பிரான்ஸ் தேசத்தின் பாரிஸ் நகரில் நடைபெற்ற பவானியின் “வியன்களம்” “கொற்றவை” ஆகிய நூல்களின் அறிமுக விழா.

09.06.2024 அன்று ஞாயிறுக்கிழமை கனடா வாழ் கவிஞர் பவானி தர்மகுலசிங்கம் அவர்களது “வியன்களம்” நூல், மற்றும் கொற்றவைப் பாடல்கள் தொகுப்பு இறுவெட்டு அறிமுகவிழா பிரான்ஸ் தலைநகர் பரிஸில் மாலை இடம்பெற்றது.

பேச்சாளர் திரு. அமிர்தநாயகம் சத்தியநாதன் அவர்கள் நிகழ்வைத் தொகுத்து வழங்கச் சுடரேற்றல், அகவணக்கத்தைத் தொடர்ந்து, சிறுமி இமையாவின் தேவாரம், இசை ஆசிரியர் தேவராஜா அவர்களது மாணவிகளின் தமிழ்த்தாய் வாழ்த்து, என்பன இசைக்கப்பட்டுப் பல்கலைகழக மாணவி செல்வி பிரவீனாவின் வரவேற்புரை, மற்றும் நடன ஆசிரியர் அருள்மோகன் முருகையா அவர்களது மாணவிகளின் வரவேற்பு நடனம் போன்றவற்றோடும் ஆரம்பமான விழாவுக்கு, முன்னிலை உரையைத் தமிழ் விரிவுரையாளர் யசோதா தர்மலிங்கம் அவர்களும், அறிமுக உரையை ஊடகவியலாளர் அனுசுயா ஆனந்தரூபன் அவர்களும் வழங்கியிருந்தனர்.





மேலும் நூலுக்கான மதிப்புரையைப் பாட்டரசர் பாரதிதாசன் அவர்கள் சிறப்புற வழங் கியதுடன், தனது கம்பன் கழகப் பெயர் பொறித்த போர்வையுடன், படைப்புக்களையும் நூலாசிரியருக்கு அன்பளிப்பாக அளித்திருந்தார்.

கொற்றவைப் பாடல் தொகுப்பிற்கான நயவுரையைக் கவிஞர் திரு எட்வேர்ட் நிக்ஸன் அவர்க ள் ஆற்றியிருந்தார். மேலும் கவிஞரும் பேச்சாளருமான திரு சின்னராஜா கணேஷ் மற்றும் ஊடகவியலாளர் திரு பாஸ்கரலிங்கம் பார்த்தீபன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கியிருந்தனர்.

முதன்மைப் பிரதியைச் சாதனா சுப்பர் மார்சேயின் உரிமையாளர் திருமதி பகீரதி செந்தில் நாதன் அவர்கள் ஏற்றிருந்ததோடு, சிறப்பு விருந்தினர்கள் மற்றும் தமிழ் தேசியப் பற்றாளர்கள், நூல் ஆர்வலர்கள் எனப் பலரும் வருகை தந்து நூல்களைப் பெற்றிருந்தனர்.



செல்வி சாதனாவின் மேதகு புகழைக் கூறும் நடனம், கவிஞர் பவானியின் போர்க்காலக் கவிதைகளைப் போலவே சிறப்பை த் தந்திருந்தது. புலம்பெயர் நாடுகளில் ஈழத் தமிழர்களது அகதிவாழ்வு ஆரம்பமான கடினமான காலங்களான 1987 களில் இருந்து, போர்க்காலம் வரையான காலத்தின் வாழ்வியலையும், போரின் அறம் மற்றும் வீரத்தைப் பாடுவதாயும் வியன்களம் இருந்ததோடு அந்தக்காலத்தில் துணிச்சலான ஒரு பெண் கவிஞராகவும் திருமதி பவானி இருந்தார் என்பதைகூறிச் சிறப்பித்த அந்தச் சபையில், அவரது கொற்றவை ப் பாடல்கள் தொகுப்பில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பாடலுக்கு நடன ஆசிரியர் திருமதி நிஷாந்தி ஆடிய நடனம் விழாவுக்கு மேலும் சிறப்பை தந்திருந்தது.



கவிஞர் பவானி அவர்களது ஏற்புரையோடும், விழா ஏற்பாட்டாளர்களான மிஷன் தமிழ் குழுவினர் சார்பாகத் தமிழ் விரிவுரையாளரான பிரியா லவன் அவர்களது நன்றியுரையோடும் விழா இனிதே நிறைவுற்றிருந்தது.

பாரிஸிலிருந்து நிலாமகள்.

# “கனடியத் தமிழர்களின் கனவான ‘தமிழ்ச் சமூக மையம்’ நிஜமாக எழுந்து நிற்பதற்கு, எமது மக்களின் பங்களிப்பு இன்னும் அதிகளவு தேவைப்படுகின்றது”


தமிழ்ச் சமூக மைய நிதிச் சேகரிப்புக் குழுவின் சார்பில் உறுப்பினர்கள் அனைவரும் வேண்டுகோள் “கனடியத் தமிழர்களின் கனவான ‘தமிழ்ச் சமூக மையம்’ நிஜமாக எழுந்து நிற்பதற்கு, எமது மக்களின் பங்களிப்பு இன்னும் அதிகளவு தேவைப்படுகின்றது. கனடாவின் மத்திய அரசுமற்றும் ஒன்றாரியோ மாகாண அரசு ஆகியவை வழங்கிய நிதி ஒதுக்கீடுகள் மற்றும் எமது சமூக உறுப்பினர்களின் மத்தியிலிருந்து நாம் திரட்டிய நிதி அனைத்தையும் தவிர்த்து எமக்கு 25 மில்லியன் டாலர்கள் தேவைப்படுகின்றது. அதைப் பெற்றுக்கொள்வதற்கு எமது தமிழ்ச் சமூகத்தின் 2500 குடும்பங்களிடமிருந்து தலா 10000 டாலர்களைத் திரட்டி அந்த தொகையை ஈடுசெய்து கொள்ளலாம் என்று நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம். ஆனால் அந்த முயற்சி ஆமை வேகத்தில் தான் செல்கின்றது. எனவே எமது கனடா வாழ் தமிழ் மக்கள் எமது முயற்சிக்கு பச்சைக் கொடி காட்ட வேண்டும்.”

இவ்வாறு கனடா ஸ்காபுறோ நகரில் அமையவுள்ள தமிழ்ச் சமூக மைய நிதிச் சேகரிப்புக் குழுவின் சார்பில் அதன் உறுப்பினர்கள் அனைவரும் வேண்டுகோள் விடுத்தனர்.

10-07-2024 புதன்கிழமை மாலை ஸ்காபுறோ ஜேசிஎஸ் மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் மக்களுக்கான ஒன்று கூடல் மற்றும் இராப்போசன விருந்து ஆகியவற்றை நடத்திய மேற்படி நிதிக் குழுவினர் தொடர்ந்து அங்கு கலந்து கொண்டவர்களிடமும் நேரடியாக உரையாடினர்.

மேற்படி நிதிக்குழுவில் அங்கத்துவம் வகிக்கும் எட்டு அன்பர்களும் அங்கு வருகை தந்து எமது தமிழ் மக்களின் எதிர்காலத்தில் ஒரு அடையாளமாக விளங்கவுள்ள இந்த தமிழ்ச் சமூக மையம் நிதர்சனமாக அழகுடன் எழுந்து நிற்கும் வகையில் எமது நிதிச் சேகரிப்புக் குழுவினரோடு அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தனர்.















VIBRANT HOSPITALITY GROUP

ONE OF CANADA'S FASTEST GROWING HOSPITALITY AND DEVELOPMENT GROUPS

OVER 25 Years IN THE HOSPITALITY INDUSTRY



OUR EXPERTISE

CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES

LOCAL: 905 769 1509
TOLL FREE: 1 888 674 7770
VIBRANTHOSPITALITYGROUP.COM


KT GROUP
An Integrated Facilities Management Services Provider
Providing eco-friendly commercial cleaning services in Ontario to promote sustainability and maintain a spotless environment.
GME
GREEN MAPLES ENVIRONMENTAL
Offering top-tier security solutions to ensure the safety and protection of businesses and properties throughout Ontario.
TDSS
TOP DEFENCE
Delivering comprehensive employment services to connect job seekers with employers and support workforce development.
ONTARIO EMPLOYMENT SOLUTIONS
Specializing in professional restoration services to repair and rejuvenate properties after damage from water, fire, mold, or other disasters.
ONTARIO RESTORATION SQUAD
+1-866-686-9660
2283 Argentia Rd., Unit 16,
Mississauga, ON, Canada, L5N 5Z2


SPECTRONX TECHNOLOGIES
IT
Services
& Solutions
Empowering Brands Digitally
Web Development
WebApp Development
Search Engine Optimization
Social Media Management
Branding
Data Analytics
Digital Marketing
+1-437-213-9525
info@spectronx.ca

# நாம் இழந்தது சமபந்தரையா அல்லது சம்-மந்தரயா?

மறைந்த சம்பந்தர் அவர்கள் தன்னுடைய தாய்க் கட்சியைச் சிதைய விட்ட ஒரு தலைவர். நல்ல தலைமைத்துவ சிந்தனையாளர்ஒருவரை உருவாக்கத் தவறியமை. இவ்வாறான 'மந்தமான' அவரால் எப்படித் தேசத்தை திரட்டியிருக்க முடியும்? அவருடைய கட்சி அவருக்குச் செய்யும் உண்மையான அஞ்சலி எதுவென்றால் அவருடைய இறப்பின் பின்னாவது கட்சியை உடைவிலிருந்து பாதுகாப்பதுதான். அப்போது தான் அவரது பெயர் 'சம்மந்தர்' என்று இல்லாமல் 'சம்பந்தர்' என்று இனிவரும்காலங்களில் அழைக்கப்பெறும்- -ஆசிரியர்

ரூடவ்ழத் தமிழர்களின் நவீன வரலாற்றில் நீண்ட காலங்கள் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்கள் இருவர். ஒருவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர். மற்றவர் சம்பந்தர்.இருவருமே ஒப்பீட்டளவில் நீண்ட காலம் தமிழ் மக்களின் அரசியலை நிர்ணயித்தார்கள். குறிப்பாக சம்பந்தர் 2009க்குப் பின்னிருந்து கடந்த 15ஆண்டுகளிலும் தமிழ் அரசியலின் தவிர்க்கப்பட முடியாத முதிய தலைவராகக்காணப்பட்டார். அவருக்கு பின்வரும் முக்கியத்துவங்கள் உண்டு. முதலாவதாக அவர் ஒரு மூத்த தலைவர்.இரண்டாவதாக அவர் கிழக்கை மையமாகக் கொண்டு எழுச்சி பெற்ற தலைவர். மூன்றாவதாக அவர் நீண்ட காலம் தமிழ் மக்களின் அரசியலை தீர்மானித்தவர்களில் ஒருவர்.



அவருடைய நம்பிக்கைகளை பொறுத்தவரை சம்பந்தர் ஆயுதப் போராட்டத்தில் முழு அளவு ஆதரவாளர் அல்ல.குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது கடுமையான விமர்சனங்களை கொண்டிருந்தார்.எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பொழுது அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டார். தன்னை சுகாகரித்துக் கொண்டார். ஆனால் அதற்காக அவர் ஆயுதப் போராட்ட வழிமுறையை முழுமையாக ஏற்றுக் கொண்டார் என்று பொருள அல்ல. அதனை ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரான கடந்த 15 ஆண்டுகளிலும் அவருடைய வழி எதுவென்று தொகுத்துப் பார்த்தால் தெரிய வரும். சம்பந்தரின் வழி எது? ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின் இலங்கை இனப் பிரச்சினைக்கு தீர்வு என்று சிந்தித்தால் அதாவது பிரிவினை அல்லாத வேறு எந்த ஒரு தீர்வைப்பற்றிச் சிந்தித்தாலும் அதற்கு சிங்கள மக்களின் சம்மதம் அவசியம் என்று சம்பந்தர் நம்பினார்.எனவே சிங்கள மக்களை எப்படி அரவணைப்பது?

அவர்கள் மனதில் இருக்கும் பகை உணர்வை அச்சங்களை முற்கற்பிதங்களை எப்படி நீக்குவது? என்றும் அவர் சிந்தித்தார். ஆயுதப் போராட்டம் சிங்கள மக்களை பகை நிலைக்குத் தள்ளியிருந்தது என்றும் அவர் நம்பினார். எனவே சிங்கள மக்களை பகைநிலைக்கு தள்ளாத ஒரு அரசியல் வழியை அவர் கடைப்பிடித்தார். சிங்கள மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தீர்வைக் கண்டுபிடிப்பது என்று அவர்தீர்மானித்தார். அதை நோக்கியே கட்சியைப் புதுப்பித்தார்.அதனால்தான் முதலில் கஜேந்திரகுமார் அணியை வெளியே விட்டார். அதனால்தான் சுமந்திரனை உள்ளே கொண்டு வந்தார். அதனால்தான் விக்னேஸ்வரனையும் உள்ளே கொண்டு வந்தார்.

2015ல் நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தில் சம்பந்தரின் பங்களிப்பு இருந்தது. அந்த ஆட்சி மாற்றத்தின் விளைவாக உருவாக்கப்பட்ட ரணில்- மைத்திரி அரசாங்கம் ஐநாவின் 30/1 தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது. நிலைமாறுகால நீதிக்கான அத்தீர்மானத்தின் பிரகாரம் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கட்டமைப்பு சார் மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தது. அதன்படி நாடாளுமன்றம் ஒரு சாசனப் பேரவையாக மாற்றப்பட்டதூடவ் ஒரு புதிய யாப்பை உருவாக்குவதற்காக ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.சம்மந்தர் அதில் முழுமையாக ஒத்துழைத்தார். அதுவரையிலும் இருந்த எல்லா அரசியல் யாப்புகளும் தமிழ் மக்களின் பங்களிப்பின்றி உருவாக்கப்பட்டவை என்பதனால் தமிழ் மக்களின் பங்களிப்போடு ஒரு புதிய யாப்பை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கனவு கண்டார்.அதை நம்பித்தான் தமிழ் மக்களுக்கு ஒவ்வொரு பெருநாளின் போதும் வாக்குறுதிகளை வழங்கினார்.

அது மட்டுமல்லரூடவ் மன்னாரில் நடந்த ரூநரழவ்டம் மாறுகிறதா தமிழ் தேசியம்?ரூநரழவ் என்ற ஒரு கருத்தரங்கில் ஆயர்களின் முன்னிலையில் அவர் அந்த நம்பிக்கையை எப்படி வெளிப்படுத்தினார் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதில் உரையாற்றியநான் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டினேன். மூன்றாவது தரப்பு ஒன்றின் கண்காணிப்பு இன்றிரூடவ் மூன்றாவது தரப்பு ஒன்றின் நெருக்குதல் இன்றி சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பானது இனப்பிரச்சினையைத் தீர்க்க முன்வராது என்று நான் அந்த உரையில் சுட்டிக்காட்டினேன். ஆனால் சம்பந்தர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. தலையை சாய்த்து மண்டைக் கண்ணால் என்னைப் பார்த்தபடி சொன்னார்... ரூநரழவ்சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் ஒரு தீர்வைத் தராது என்பது ஒரு வறண்ட வாதம் ஒரு வறட்டு வாதம்ரூநரழவ் என்று யாப்புருவாக்க முயற்சிகள் ஓர் இடைக்கால வரைபுவரை முன்னேறின.அந்த இடைக்கால வரைபை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதித்த பொழுது அதில் டிலான் பெரேரா ஆற்றிய உரையை இங்கு சுட்டிக்காட்டலாம். அது சம்பந்தரின் அரசியல் வழியை மிகக்கூர்மையாக வெளிப்படுத்தும் ஓர் உரை. சம்பந்தரைப் போல விட்டுக்கொடுக்கும் ஒரு தலைவரை இனிக் கண்டு பிடிப்பது கடினம்ரூடவ் சம்பந்தர் அளவுக்கு வேறு யாரும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். எனவே சம்மந்தரின் காலத்திலேயே ஒரு தீர்வைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யுங்கள் என்ற பொருள்பட அந்த உரையில் சுட்டிக் காட்டியிருந்தார். அதுதான் உண்மை. ரணில் மைத்திரி அரசாங்கத்தோடு இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒரு புதிய யாப்பை உருவாக்குவதற்காக சம்பந்தர் அடியொட்ட வளைந்து கொடுத்தார். விளைவு என்ன?

யாப்பு உருவாக்க முயற்சிகளை அதன் பெற்றோரில் ஒருவராகிய மைத்திரிபால சிறிசேனவே 2018ல் காட்டிக் கொடுத்தார். சம்பந்தரின் கனவு கலைந்தது. அவர் தமிழ் மக்களுக்கு வழங்கிய எல்லா வாக்குறுதிகளும் பொய்த்துப் போயின. சிங்கள மக்களுக்கு நம்பிக்கை வரும் வரையிலும் விட்டுக் கொடுப்பதன் மூலம்ரூடவ்ஒரு தீர்வைப் பெறலாம் என்ற அவருடைய நம்பிக்கை தோற்கடிக்கப்பட்டது. அந்த நம்பிக்கை மட்டும் தோற்கடிக்கப்படவில்லை. அதன் விளைவாக கட்சி அதுவரையிலும் வகித்து வந்த ஏகபோகத்தை இழந்தது. அடுத்த தேர்தலில் கட்சியின் வாக்குகள் சிதறின. அது மட்டுமல்லரூடவ் கட்சியே இப்பொழுது சிதறிவிட்டது.

அவருடைய தலைமைத்துவத்தின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் சிதறவில்லை. தமிழரசுக் கட்சியும் இரண்டாக உடைந்துவிட்டது. அவர் உருவாக்க முற்பட்ட வழியைப் பின்பற்றும் ஒரு தரப்பும் அந்த வழிக்கு எதிராக காணப்படும் மற்றொரு தரப்பும் என்று தமிழரசுக் கட்சி இரண்டு அணிகளாகப் பிரிந்து நிற்கின்றது. எனவே இப்பொழுது தொகுத்துப் பார்க்கலாம். கூட்டமைப்பின் தலைவராக அல்லது தமிழ் மக்களின் முதிய தலைவராக சம்பந்தர் கடந்த 15 ஆண்டுகளிலும் எதைச் சாதித்தார் என்று பட்டியலிடலாம்... முதலாவதாகரூடவ்சிங்கள மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முற்பட்டு அதில் தோல்வி கண்டார். அதாவது வரலாறு அவருக்கு வழங்கிய பெறுமதியான ஆண்டுகளை அவர் பொருத்தமான விதத்தில் பயன்படுத்தவில்லை. ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான தமிழ் அரசியலில் பண்புரு மாற்றத்துக்கு தலைமை தாங்க அவரால் முடியவில்லை.

இரண்டாவதாகரூடவ்சிங்கள மக்களுக்கு அதிகம் விட்டுக் கொடுத்ததன்மூலம் அவர் எதையுமே பெற முடியவில்லை. மாறாக் தான் தலைமை தாங்கிய கூட்டின் சிதைவுக்கும் அதனால் காரணமாக அமைந்தார்.

ரூடவ்ழத் தமிழர்களின் நவீன அரசியல் வரலாற்றில் அதிக ஆசனங்களை கொண்டிருந்த ஒரு காலத்தில் அந்தக் கூட்டுக்கு அவர் தலைமை தாங்கினார். ஆனால் கடந்த 15 ஆண்டுகளிலும் கூட்டு உடைந்துடைந்து சிறுத்துக்கொண்டு வந்து இப்பொழுது தமிழரசுக்கட்சியாக சிறுத்து விட்டது. இப்பொழுது தமிழரசுக் கட்சியும் இரண்டாக உடைந்துவிட்டது.தமிழ்த் தேசிய பிரதிநிதித்துவம் 22 ஆசனங்களில் இருந்து ஆறு ஆசனம் வரையிலும் உடைந்து போனமை மகா தோல்வி.

அதுபோலவே தன்னுடைய சொந்தத் தொகுதியிலும் அவர் தொடர்ச்சியாகப் பெற்று வந்த வாக்குகளை பட்டியலிட்டுப் பார்த்தால் அதில் படிப்படியாக வீழ்ச்சியைக் காணலாம்.இப்பொழுதிருக்கும் நிலையில் திருக்கோணமலையில் தமிழரசுக்கட்சிக்குப் போட்டியாக மற்றொரு தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சி களமிறங்கினால் இம்முறை சம்பந்தர் பெற்ற ஆசனம் அடுத்த முறை கிடைக்குமா என்பது சந்தேகம்தான். சிலசமயம் சம்பந்தரின் அனுதாப வாக்குகள் கிடைக்கக்கூடும்.

இவ்வாறுரூடவ்தான் தலைமை தாங்கிய கூட்டுக்குள்ளும் ஒரு தலைவராக தோல்வியடைந்துரூடவ்தனது சொந்த தேர்தல் தொகுதியில்ரூடவ்தனது தாய்ப்பட்டினத்தில் தன்னுடைய ஆதரவுத் தளத்தை படிப்படியாகத் தேய விட்டதில் தோல்வியுற்றுரூடவ்தான் அங்கம் வகிக்கும் மூத்த கட்சிக்குள்ளும் ஒரு தலைவராக அவர் தோல்வியடைந்து விட்டார்.

ஒரு தலைவர் தன் வாரிசுகளாகக் களமிறக்கும் அரசியல்வாதிகள் அந்த தலைவரின் பெயரை வரலாற்றில் ஸ்தாபிப்பவர்களாக அமைய வேண்டும். ஆனால் சம்பந்தர் கொண்டு வந்த சுமந்திரனோ அல்லது விக்னேஸ்வரனோ அவ்வாறு இருக்கவில்லை.

விக்னேஸ்வரன் சம்பந்தரின் வழி தவறு என்று கூறி அவரிடமிருந்து விலகிச் சென்றார். சுமந்திரன் சம்பந்தரின் பட்டத்து இளவரசர் போல காணப்பட்டார். னால் கட்சிக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த பொழுது அவர் சம்பந்தரை பொதுவெளியில் அவமதித்தார்.தன்னுடைய வாரிசினாலேயே அவமதிக்கப்படும் ஒரு தலைவராக சம்மந்தர் அவருடைய இறுதிக் காலத்தில் காணப்பட்டார். அவருடைய தாய்க் கட்சி நீதிமன்றத்துக்கு இழுக்கப்பட்டபொழுது அவர் அதைத் தடுக்கும் சக்தியற்றவராக இருந்தார்.சாதாரணமாக ஒரு குடும்பத்தில் பிணக்கு என்று வரும்பொழுது மூத்தவர்கள் அதைத் தீர்த்து வைப்பார்கள். கட்சிக்குள்ளும் அப்படித்தான்.எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முது தலைவர்கள் பிணக்குகளைத்தீர்த்து வைப்பார்கள். ஆனால் மிக மூத்த தலைவராக அவருடைய சொல்லை அவருடைய வாரிசே கேட்கவில்லை. விளைவாக கட்சி நீதிமன்றத்தில் நிற்கிறது. அதுமட்டுமல்ல அவருடைய சொந்த தேர்தல் தொகுதியில் தன்னை மதியாமல் நியமனங்கள் செய்யப்படுகின்றன என்ற பொருள்பட அவர் ஒரு முறைப்பாட்டைச் செய்யுமளவுக்கு பலவீனமாக காணப்பட்டார். சம்பந்தரின் சுமார் இரண்டு தசாப்த கால தலைமைத்துவத்தை மதிப்பிட இது ஒன்றே போதும்.அவர் தன்னுடைய தாய்க் கட்சியைச் சிதைய விட்ட ஒரு தலைவர். அவரால் எப்படித் தேசத்தை திரட்டியிருக்க முடியும்? அவருடைய கட்சி அவருக்குச் செய்யும் உண்மையான அஞ்சலி எதுவென்றால்ரூடவ் அவருடைய இறப்பின் பின்னாவது கட்சியை உடைவிலிருந்து பாதுகாப்பதுதான்.



# யாழ்பபாணத்தில் மகளிர் இல்லத்தில் பொருத்தப்பட்ட சிசிடிவி அரசியல் பின்னணியில் உருவானதா?

சண்முகம் - மொன்றியால்

யாழ்ப்பாணத்தில் மாணவிகள் தங்கி இருந்த இல்லம் ஒன்று அவர்கள் குளிக்கும் காட்சிகள் பதிவானதாக அண்மையில்தகவல்கள் வெளியாகியிருந்தது. பொதுவாக யாழ்ப்பாணத்தில் பெண்கள் மற்றும் அனாதரவற்ற சிறுவர்களைப் பராமரிக்கவென பல பராமரிப்பு இல்லங்கள் காணப்படுகின்றன. யுத்தத்தின் பின்னர் வடமாகாணத்தில் பல்லாயிரம் சிறுவர்கள் அனாதைகளாகவும்ரூபவ் பல பெண்கள் தமது கல்வியைத் தொடர முடியாமலும் காணப்படுகின்றனர். இத்தகைய நபர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் புலம்பெயர்ந்த தமிழர்கள்ரூபவ் மற்றும் தொண்டு நிறுவனங்கள்ரூபவ் ஆலயங்கள் என்பவற்றின் உதவியுடன் பல இல்லங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே இத்தகைய சிறுவர் இல்லங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேபோல் விடுதலைப் புலிகளின் காலத்தில் செஞ்சோலை சிறுவர் இல்லம் போன்ற பல பராமரிப்பு இல்லங்கள் காணப்பட்டன. அவை அனைத்தும் சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் என்றும் பெண்கள் பராமரிப்பு இல்லங்கள் எனவும் அழைக்கப்பட்டன.

இவ்வாறு செயற்பட்டு வரும் இல்லங்களில் பண்கள்ரூபவ் சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அநீதிகள் தொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்கப்படவேண்டியது கட்டாயமானதாகும். அனுமதியற்ற முறையில் செயற்பட்டு வரும் இல்லங்கள் போதிய வசதி இன்றி காணப்படும் இல்லங்கள் அனைத்தும் மூடப்படவேண்டியது கட்டாயமானதாகும். ஆனால் அனுமதி பெற்று செயற்படுகின்ற சிறுவர் - பெண்கள் பராமரிப்பு இல்லங்களில் இடம்பெறும் வன்முறைகள் கொடுமைகள் அனைத்தும் உரிய முறையில் ஆராயப்பட்டு அவற்றுக்கு சரியான தீர்வினை பெற்றுக் கொடுக்கவேண்டியது உயர் அதிகாரிகளின் கடமையாகும்.

அந்த விடுதியில் 10 குளியலறைகள் காணப்படுகின்ற போதிலும் அவை அனைத்தும் விடுதிப் பராமரிப்பாளர்களின் பயன்பாட்டுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளன. சிறுமிகளுக்கு வெளிப்புறமாக நீர் நிரப்பப்பட்ட தொட்டியொன்றே குளிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சிறுமிகள் குளிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பகுதியே கண்காணிப்புக் கமராவால் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தாம் குளிக்கும் இடத்துக்கு மேற்புறமாக கண்காணிப்புக் கமரா பொருத்தப்பட்டிருப்பதை அவதானித்த சிறுமிகள். அதுதொடர்பில் தமது பெற்றோருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். விடயம் தொடர்பில் சிறுமிகளின் பெற்றோர் இல்லத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது பாதுகாப்புக் காரணங்களுக்காக வீதியைப் பதிவு செய்வதற்காகவே கமரா பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் மேற்படி முறைப்பாட்டின் படி மேற்கொள்ளப்பட்ட அறிக்கையின் பிரகாரம் தெல்லிப்பழையில் இயங்கும் பெண்கள் இல்லத்தினையும் மற்றொரு சிறுவர் இல்லத்தினையும் உடனடியாக மூடிவிடுமாறு வட மாகாண ஆளுநரால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி

இதேவேளை வடக்கு மாகாணத்தில் இயங்கும் சிறுவர் இல்லங்கள் தொடர் மேற்பார்வை செய்து ஒரு வாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. பதிவுசெய்யாமல் இயங்கும்அனைத்துசிறுவர் இல்லங்களையும்உடனடியாக மூடுவதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. வெளி மாகாணங்களில் உள்ள சிறார்களை வரவழைத்து வடக்கு மாகாணத்திலுள்ள சிறுவர் இல்லங்களில் தங்க வைக்க அனுமதி வழங்க வேண்டாம் எனவும்ரூபவ் அவ்வாறு தங்க வைக்கப்பட்டிருப்பின் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அவர்களை சொந்த ஊருக்கு திருப்பி அனுப்பி வைக்குமாறும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.



இங்கு முக்கிய விடயம் ஒன்று தொடர்பாக நாம் நோக்கும் போது சிறுவர் இல்லத்திலோ அல்லது மகளிர் இல்லத்திலோ காணப்படும் அனைத்து தரப்பினரும் ஒட்டுமொத்தமாக திருப்பி அனுப்பிவிட முடியாது. இங்கு தாய் தந்தையர்களை இழந்த பல பிள்ளைகளும் இங்கு காணப்படுகின்றார்கள். அவ்வாறு பெற்றோர் இல்லாத அல்லது சிறுவர்களை பராமரிக்க முடியாது சிறுவர் இல்லங்களில் விடப்பட்டுள்ள சிறுவர்கள் அனைவரின் நிலை தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் சிறுவர் நிலையங்களை மூடிவிடுவதன் மூலம் இத்தகைய முயற்சிகளுக்கு நிரந்தரத் தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முடியாது. வீடுகளுக்குச் செல்ல முடியாத பிள்ளைகளுக்கு பாதுகாப்பான இடம்ஒன்றை அரசாங்க அதிகாரிகள் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்படுகளை செய்வதுடன் அவர்களின் எதிர்கால பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அத்துடன் சிறுவர் இல்லங்கள் போன்ற பொது இடங்களில் பாதுகாப்புக்கு சிசிடிவி கமரா பொருத்தும் போது பிரதேச செயலகம் அல்லது உரிய அதிகாரிகளின் அனுமதியைப் பெற்று சரியான இடத்தில் அவை பொருத்தப்படுகின்றனவா என்பதையும் கண்காணிக்க வேண்டும். அரசாங்க அதிகாரிகள் பொதுமக்களின் வரிப் பணத்திலிருந்தே சம்பளத்தைப் பெற்றுக் கொள்கின்றார்கள் எனவேரூபவ் அவர்கள் தமது கடமைகளை உரிய முறையில் மக்களுக்கு வழங்குவதன் மூலம் இவ்வாறான செய்பாடுகளுக்கு முடிவு கட்டலாம்.


எனினும் இந்தச் சம்பவத்தில் சமயத் தொண்டாற்றும் நபர் ஒருவரின் பெயர் குறிப்பிட்டு யாழ்ப்பாணத்தில் இயங்கும் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகி உள்ளது. இது சில சந்தேகங்களை ஏற்படுத்துவதாக உள்ளது.

அண்மையில் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என தமிழ் தரப்பில் பரவலாக பேசப்பட்டு வருகின்றது. வட-கிழக்கில் உள்ள முக்கிய அரசியல் கட்சிகளும் தொண்டு நிறுவனங்களும் சமூக ஆர்வலர்களும் இணைந்து இத்தகைய தீர்மானத்தை எடுத்து அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளில் ரூடவ்டுபட்டு வருகின்றனர். எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள தமிழரசுக் கட்சியின் சில உறுப்பினர்கள் இத்தகைய நடவடிக்கைக்கு எதிரான கருத்தினை முன்வைத்து வருகின்றார்கள்.

அவர்களின் கருத்தின்படி தமிழ் மக்களால் நிறுத்தப்படும் பொது வேட்பாளரால் வெற்றிபெற முடியாது எனவும் எனவே தென்னிலங்கையில் போட்டியிடும் சிங்கள வேட்பாளர்களின் ஒருவரையே ஆதரிக்க வேண்டும் என்றும் கருத்துக்களை முன்வைத்து வருகின்றார்கள். இது ஒரு அரசியல் நிகழ்ச்சி நிரலாகவே பொதுமக்களால் பார்க்கப்படுகின்றது. அத்துடன் அவர்கள் தென்னிலங்கையை திருப்த்திப் படுத்தவும் அங்கு தமக்கு வேண்டப்பட்ட நபரின் வெற்றிக்காக பாடுபட்டு அவரிடமிருந்து தமக்கான நலன்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தைக் கொண்டவர்கவே காணப்படுகின்றனர்.எனினும் மேலும் சில கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்றும் இல்லையெனில் தமிழ்மக்களின் எதிர்ப்பினைக் காட்ட முடியாது என்றும் குறிப்பிட்டு வருகின்றனர். இதற்கு முன்னரும் ஒருதடவை ஜனாதிபதித் தேர்தலைப் தமிழ்மக்கள் புறக்கணித்ததன் மூலம் பல துன்பங்களை எதிர்கொண்தனையும் மறந்து விட முடியாது. அத்துடன் அண்மைய செய்திகளின் படி சில உறுதிப்படுத்தப்படாத விடயங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் தமிழ் மக்கள் சார்பாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள பொது வேட்பாளர்களின் பெயர்ப்பட்டியல் சில கசிந்துள்ளன. அதில் மேற்படி சிறுவர் இல்லத்தின் பொறுப்பாளர் தேர்தலுக்கு முன்னிறுத்தப்பட உள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றன. இது உறுதிப்படுத்தப்படாத விடயமாக காணப்படுகின்ற போதிலும் இவ்விடயம் பத்திரிகை ஒன்றில செய்தியை வெளியிட்ட செய்தியையும் ஒப்பிட்டு நோக்குமிடத்து இது எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரல்களினை நோக்கமாகக் கொண்ட செயற்பாடாக காணப்படுமே என சந்தேகிக்கத் தோன்றுகின்றது.

எது எவ்வாறான போதிலும் எதிர்காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு முன்வைக்கப்பட்ட பின்னரே இச சம்பவத் தொடர்பான உண்மைகள் வெளிவரும் சாத்தியக் கூறுகள் உள்ளன. அரசியல் நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளினால் எதிர்காலத்தில் சிறுவர்கள் பெண்பிள்ளைகளுக்கு கிடைக்க இருக்கின்ற சில சலுகைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது போகலாம். எனவேரூபவ் ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் பல்வேறு கோணத்தில் ஆராய்ந்து அடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் சிறுவர் இல்லங்களும் பராமரிப்பு நிலையங்களும் அரசாங்கத்தின் பொறுப்பில் சரியான நிர்வாகத்தின் கீழ் இயங்குமாக இருந்தால் அதன் மூலம் பின்தங்கிய அல்லது பெற்றோர் இல்லாத பிள்ளைகளின் எதிர்காலத்தினை சிறந்த முறையில் வளர்த்தெடுக்க முடியும்.



# தமிழ் முற்போக்கு கூட்டணி பங்கு பெறுகின்ற எமது அரசாங்கம் விரைவில் இலங்கையில் ஆட்சியமைக்கும்

## மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் இலங்கைக்கான இந்திய தூதரிடம் தெரிவிப்பு

அடுத்த மாதமான ஆகஸ்ட் மாதத்தில் கட்டி முடிக்கப்படும் என்ற உறுதி மொழியுடன், சுமார் 375 மில்லியன் ரூபா செலவில், 1,300 வீடுகளை கட்டுவதற்காக, பாரத்-லங்கா மலைநாட்டு தோட்ட வீடமைப்பு திட்டம் என்ற பெயரில், கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட, நான்காம் கட்ட இந்திய வீடமைப்பு திட்டம் இடை நிறுத்தப்பட்டுள்ளது அல்லது மிக பெரும் தாமதங்களை எதிர் கொண்டுள்ளமைக்கு காரணம், வீடுகள் கட்டப்பட வேண்டிய உரிய காணிகளை இலங்கை தரப்பு, இன்னமும் விடுவிக்காமையே. இந்த விவகாரத்தில், இந்திய தரப்பில் எவ்வித தாமதமும் இல்லை என இந்திய தூதர் சந்தோஷ் ஜா, தன்னை சந்தித்த தமிழ் முற்போக்கு கூட்டணி தூதுக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

தமுகூ தலைவர் மனோ கணேசன் எம்பி தலைமையில் எம்பிகள் வேலு குமார், உதய குமார் ஆகியோர் அடங்கிய தூதுக்குழுவுக்கும், இந்திய தூதர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையில், இன்றைய அரசியல் நிலைமை, இலங்கை பொருளாதார அபிவிருத்திக்கான இந்திய உதவிகள், மலையகத்துக்கான பிரத்தியேக கல்வி, தொழில் நுட்ப துறைகளுக்கான உதவிகள் ஆகியவை பற்றி கலந்துரையாடல் நிகழ்ந்து உள்ளது.



எம்பி கூறி உள்ளதாவது தமிழ் முற்போக்கு கூட்டணி பங்கு பெறுகின்ற எமது அரசாங்கம் விரைவில் உருவாகும். கடந்த 2015-2019 நல்லாட்சியில் நடை பெற்றதை போன்று, தாமதங்களை களைந்து ஒட்டு மொத்த 10,000 வீடமைப்பு பணிகளையும் நாம் செய்து முடிப்போம் என நாம் இந்திய தூதர் சந்தோஷ் ஜாவிடம் உறுதி கூறினோம்.

மலையக பெருந்தோட்ட மக்களின் காணி உரிமை தொடர்பில் இன்று நிலவும் உதாசீன போக்கை நாம் முடிவுக்கு கொண்டு வருவோம். 200 ஆண்டுகளுக்கு முன் பிரிட்டிஷ் காலனி அரசு கட்டிய லயன் காம்பறாக்களை கிராமங்கள் என்ற சொல்ல முயலும் முயற்சியை, எமது காணி உரிமையை குழி தோண்டி புதைக்கும் செயல்பாடாக நாம் பார்ப்பதற்கு காணி உரிமை தொடர்பில் இன்றைய அரசின் உதாசீன போக்கே காரணம் எனவும் நாம் இந்திய தூதரிடம் எடுத்து கூறினோம். மேலும் ஜனாதிபதி ரணில் வக்கிரமசிங்கவை சந்தித்து, லயன் காம்பறாக்களை கிராமங்கள் என்ற யோசனைக்கு, நாம் வழங்கிய ஆறு அம்ச மாற்று யோசனை ஆவணத்தையும் நாம் இந்திய தரப்புக்கு வழங்கினோம்.

நான்காம் கட்ட இந்திய வீடமைப்பு திட்டத்துக்கு மேலதிகமாக, இந்திய அரசு பின்வரும் உதவிகளை மலையக மக்களின் நலன் கருதி வழங்க உள்ளதாக எமக்கு இந்திய தூதர் சந்தோஷ் ஜா எடுத்து கூறினார்.

1. விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில் நுட்ப கல்வி,
2. கணிதம் ஆகிய துறை சார் ஆசிரியர் பயிற்சி மாணவர்களுக்கான அப்பியாச கொப்பிகள், பாடசாலை பைகள் வழங்கல்
3. தோட்ட தொழிலாளர் வீடுகளுக்கு சூரிய சக்தி மூலமான விளக்குகள்
4. ஸ்மார்ட் வகுப்பறைகள்



5. பாடசாலை பௌதிக கட்டுமானங்கள்
6. தொண்டமான் தொழில் நுட்ப நிலையத்தை தரம் உயர்த்தும் உதவிகள்

இவை அனைத்தும் நமது மக்கள் நலன் கருதி இந்திய அரசால் வழங்கப்படும் உதவிகள். ஆகவே, இவற்றுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணியின் நன்றிகளை தெரிவித்து கொண்டு, அதேவேளை இவற்றை அரசியல் நோக்கங்களுக்கு அப்பால் பாரபட்சம் இன்றி அனைத்து மாவட்ட மக்களுக்கும் வழங்க படுவதை உறுதி செய்யும்படி இந்திய அரசை நாம் கோரினோம்.

தேசம் பத்திரிக்கையில்
விளம்பரம் செய்ய அழையுங்கள்
647-891-7725

## 2800 ஆண்டுகளுக்கு முன் ஒலிம்பியா நகரத்தில் ஆரம்பிக்கப் பட்ட மிகப் பெரிய போட்டியே ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி

ஒலிம்பிக் கோடை கால விளையாட்டுப் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடை பெறும் மாபெரும் நிகழ்ச்சியாகும்.

ஒலிம்பிக் போட்டி கிரேக்கத்தில் ( புசநநஉந ) கிமு 776 (776 டீஊ) இற்றைக்கு 2800 ஆண்டுகளுக்கு முன் ஒலிம்பியா நகரத்தில் முதல் முதலில் ஆரம்பிக்கப் பட்டது. .

ஒலிம்பிக் போட்டியில் ஒலிம்பிக் தீபம் ஏற்றப் படுவது முக்கியமான நிகழ்வாகும். அதற்கு முன்னதாக ஒலிம்பிக் தீபம் கிரேக்கத்தில் ஒலிம்பியா விளையாட்டு மைதானத்தில் பரவளைய கண்ணாடியில்(ியசயடிழடநை ஆசைசழச) சூரியனின் ஒளிக் கதிர்களை (சுயலள ழக வாந ளுரு) பயன் படுத்தி ஏற்றப்பட்டு ஒலிம்பிக் நடை பெறும் நாட்டிற்கு எடுத்து வரப்படும்.

பெரும்பாலும் இது வான் வழியாகவே கொண்டு செல்லப்படும். 2024 ல் ஒலிம்பிக் தீபம் கிரேக்கத்தில் இருந்து நீர் (மத்திய தரைக்கடல்) வழியாகவே பிரான்சுக்கு எடுத்து வரப்பட்டு நதி வழியாக பிரான்சுக்குள் சென்றடைந்தது.

பழைய கிரேக்க ஒலிம்பிக் விளையாட்டு போட்டியின் தொடர்ச்சியாக தற்கால சர்வதேச ஒலிம்பிக் விளங்குவதை அடையாளப் படுத்துவது இத் தீபமாகும்.

தற்கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் 1896 ல் கிரேக்கத்தில் அதென்ஸ் (யுவாநளெ )நகரத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

2024 ஒலிம்பிக் போட்டி பிரான்சின் (குசயஉெந )தலை நகர் பரிசில் ஆடி மாதம் 26 ம் திகதி ஆரம்பமாகி ஆவணி மாதம் 11 ம் திகதி நிறை வடைய இருக்கின்றது.

நூறு ( 100 ) ஆண்டுகளுக்கு பின் பரிசில் இவ் விளையாடாட்டுப் போட்டி நடை பெறுகின்றது.
இப்போட்டி பல புதுமைகளைக் கொண்டிருக்கின்றது. தீபம் நீர்வழியாக கொண்டு வரப்பட்டது, வழமையாக ஒலிம்பிக் ஆரம்ப விழா உள் அரங்க மண்டபத்தில் நடைபெறும். இம்முறை பரிசில் இந்த ரக நிகழ்வு வெளிப்புறத்தில் , நதியில் நடைபெற இருக்கின்றது.

ஒலிம்பிக் விழாவில் ஒலிம்பிக் கொடி ஏற்றப்படும். ஒலிம்பிக் கொடி முதல் முதலில் 1920 ம் ஆண்டு பெல்யியத்தில் (டீநடபரைஅ)நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ஏற்றப்பட்டது. ஒலிம்பிக் கொடி ஏற்றப் படுவதுடன் ஒலிம்பிக் கீதமும் இசைக்கப்படும்

ஒலிம்பிக் கொடியில் ஐந்து இணைந்த வளையங்கள் காணப்படும்.இந்த ஐந்து வளையங்களும் உலகின் ஐந்து கண்டங்களைக் குறிக்கின்றன.

ஒலிம்பிக் கொடி வெள்ளை நிறமாகும்.அதில் மஞ்சல் நிற வளையம் ஆசியா ( Asia) கண்டத்தையும்

பச்சை நிற வளையம் ஐரோப்பா கண்டத்தையும் (Europe )

சிவப்பு நிற வளையம் அமெரிக்கா(வட , தென்) கண்டத்தையும் (America )

கறுப்பு நிற வளையம் ஆபிரிக்கா கண்டத்தையும் (Africa )

நீலம் நிற வளையம் அவுஸ்திரேலியா கண்டத்தையும்(Australia ) குறிக்கின்றன.

தொடர்ச்சி 20 பக்கம்...

# விருதுகள் பல பெற்ற எழுத்தாளரும் அரசியல் விமர்சகருமான ‘குணா கவியழகன்’ அவர்களின் நூல் அறிமுக விழா ஸ்காபுறோவில் நடைபெற்றது


யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் இளம் வயதிலிருந்தே விடுதலைப் போராட்ட அரசியலில் பயணிப்பவரும். ஊடகப் பணிப்பாளராகவும் அரசியல் ஆய்வாளராகவும் எழுத்தாளராகவும் தமிழ் மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவருமான குணா கவியழகன்’ அவர்களின் நூல்களின் அறிமுக விழா ஸ்காபுறோவில் கடந்த 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று அஜின்கோர்ட் சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

தனது படைப்புக்களுக்காக விருதுகள் பல பெற்ற எழுத்தாளரும் அரசியல் விமர்சகருமான ‘குணா கவியழகன்’ அவர்களின் அழைப்பையும் தாய்வீடு பத்திரிகை நிறுவனத்தின் அழைப்பை ஏற்றும் நூற்றுக்கணக்கான அன்பர்கள் மண்டபத்தில் சபையோராக அமர்ந்திருந்தமை அழகுக் காட்சியாக விளங்கியது.

ஒலிபரப்பாளர் வேந்தன் அவர்கள் தொகுத்து வழங்கிய இந்த நூல்கள் அறிமுக விழாவில் பேராசிரியர் ஜோசப் சந்திரகாந்தன், எழுத்தாளர் மாதங்கி எழுத்தாளர் டொட்றிகோ மற்றும் எழுத்தாளரும் கவிஞருமான சித்திவிநாயகம் கியோர் ஒவ்வொரு நூல் பற்றியும்ஆய்வுரைகளையும் கருத்துரைகளையும் சிறப்பாக வழங்கினார்கள்
சமூகம் சார்ந்த படைப்புக்கள் மற்றும் மக்களுக்கு அவசியமான இலக்கியம் , அரசியல், அத்துடன் எமது மொழி என காத்திரமான கருத்துக்கள் பகிரப்பட்ட ஒரு படைப்பிலக்கிய விழாவாக இந்த நிகழ்வு நகர்ந்து சென்றது என்றால் அது மிகையாகாது.
பதிலுரை ஆற்றிய எழுத்தாளர் ‘குணா கவியழகன்’ அவர்கள் தனது உரையை ஆரம்பிக்கும் போதே ஒரு சமூகத்தை நேசிக்கும் ஒரு படைப்பாளியாக தன்னை அடையாளப்படுத்திய வண்ணம் சபையோரை கவரும் வகையிலும் அத்துடன் கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் தமிழரின் தலைவிதியை மீண்டும் நிமிரச் செய்யும் வகையில் எமது அனைத்து செயற்பாடுகளும் அமைய வேண்டும் என்ற கருத்தோடு தனது அழகியதும் சுருக்கமானதுமானதுமான உரையை நிறைவு செய்தார்.

தொடர்ந்து நூல்களின் பிரதிகள் அழைக்கப்பெற்ற பல்துறை சார்ந்த அன்பர்களுக்கும் உறவினர்களுக்கும் வழங்கப்பெற்றன.
அதனைத் தொடர்ந்து சபையோரின் கருத்துக்களுக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பெற்றன. அதில் காலம் சஞ்சிகையின் ஆசிரியர் செல்வம் அவர்களின் உரையை பார்வையாளர்கள் செவிமடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஏனையோர் சிலரின் கருத்துக்களும் சபையோருக்கு உற்சாகத்தை அளித்தன.

மொத்தத்தில் முழுமையான ஒரு படைப்புக்கள் சார்ந்த மக்கள் நிகழ்வாக அன்றைய அறிமுகவிழா மிளிர்ந்து என்பதும் உண்மையே!











# கனடா பீல் பிரதேச சொப்கா மன்றத்தின் 15வது ஆண்டுவிழா

குரு அரவிந்தன்

யூலை மாதம் 6 ஆம் திகதி கனடாவின் பீல் பிரதேசத்தில் உள்ள சொப்கா குடும்ப மன்றத்தினர் தமது 15வது ஆண்டு விழாவை மிசசாகாவில் ஸ்ரிவ்பாங் வீதியில் உள்ள அனாபில்ஸ் மண்டபத்தில் சிறப்பாக நடத்தினார்கள். மங்கள விளக்கேற்றி, அகவணக்கமும் அதைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து, கனடா பண் ஆகியன இடம் பெற்றன. தொடர்ந்து வரவேற்புரையும் அதன் பின் மன்றத் தலைவர் யாழினி விஜயகுமாரின் உரையும் இடம் பெற்றன. இந்தவிழா சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் அவர் தனது உரையில் நன்றியைத் தெரிவித்திருந்தார்.



இந்த விழாவின் பிரமத விருந்தினராகக் கனடா காவல்துறை பெண் அதிகாரியான ஏவா ரட்ணகுமார் கலந்து கொண்டார். இளைய தலைமுறையினருக்கு ஏற்றவகையில் ஒழுக்கம், கட்டுப்பாடு சார்ந்து அறிவூட்டும் வகையில் அவரது உரை இடம் பெற்றிருந்தது. அடுத்து ஈசாபரா ஈசானந்தாவின் உரை இடம் பெற்றது.

அடுத்து இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ரொறன்ரோ கல்விச் சபையைச் சேர்ந்த அனு சிறீஸ்கந்தராஜாவின் உரை இடம் பெற்றது. அவரது உரை இளைய தலைமுறையினரின் கல்வி சார்ந்ததாக அமைந்திருந்தது. எனது 25 வருடகால ரொறன்ரோ கல்விச்சபை ஆசிரியர் பணியைப் பாராட்டி ரொறன்ரோ கல்விச்சபை பாராட்டுப் பத்திரம் வழங்கிய போது அவர்தான் அப்போது அதை மேடையில் வைத்து வழங்கி என்னைக் கௌரவித்திருந்தார்.

இந்த மன்றத்தின் முன்நாள் தலைவராகவும், தற்போது காப்பாளராகவும் நான் இருப்பதால் இளைய தலைமுறையினருக்கு உரையாற்றும்படி கேட்டிருந்தனர். நான் எனது உரையில்,

'சொப்கா மன்றத்தின் இந்த ஆண்டு விழாவை இளையதலைமுறையினர் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்துவதையிட்டுப் பெருமையாக இருக்கின்றது. 15 வருடங்களுக்கு முன் சிறுவர் சிறுமிகளாக இருந்தவர்கள் இன்று நிர்வாகக்குழுவில் அங்கம் வகித்து தமிழ் மொழியில் நிகழ்ச்சிகளை நடத்துவது பெருமைக்குரியது. புலம் பெயர்ந்த கனடிய மண்ணில் தமிழ் மொழி நிலைத்து நிற்காது






என்று சொன்னவர்கள் இந்த நிகழ்வைக் கட்டாயம் பார்க்க வேண்டும். இங்கே பிறந்து வளர்ந்த மன்றத்தின் இளைய தலைமுறையினர் தமிழில் உரையாடி இந்த நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்துவதையிட்டு எல்லோருக்கும் பெருமையாக இருக்கின்றது. இளைய தலைமுறையினரிடம் எங்கள் மொழியைக் கொண்டு சேர்ப்பதில் நாங்கள் எடுத்த முயற்சி வீண்போகவில்லை என்பதை நேரடியாக இங்கே பார்க்கும்போது எமக்குப் பெருமையாக இருக்கின்றது.' என்று உரையின் போது குறிப்பிட்டிருந்தேன்.






தொடர்ந்து வீணை இசை, திரைப்படப் பாடல், சிறுவர் நாடகம், சிறுமிகள் நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. அதைத் தொடர்ந்து நன்றி உரை இடம் பெற்றது. சென்ற வருடம் நடந்த சொப்கா விழாவில் எனது நூல்களை விற்பனை செய்து அதில் கிடைத்த பணத்தை மருத்துவ மனைக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்தோம். அதேபோல நடைபயணம் மேற்கொண்டு அதில் சேகரித்த பணத்தை மருத்துவ மனையில் நோயாளர் தங்கும் ஒரு அறையைப் பராமரிப்பதற்கான செலவையும் கொடுத்திருந்தோம். இரத்தானம், உணவு வங்கிக்கு உணவு சேகரித்துக் கொடுத்தல், பூங்கா துப்புரவு செய்தல், முதியோர்களுக்கான பயிற்சிப் பட்டறை, தமிழ் மொழி வகுப்புகள் போன்றவற்றையும் சொப்கா மன்றத்தினர் செய்து வருகின்றனர்.

18 பக்கம் தொடர்ச்சி...

## 2800 ஆண்டுகளுக்கு முன் ஒலிம்பியா நகரத்தில்.....

ஒலிம்பிக் விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் பாதுகாப்பாக தங்குவதற்கு ஒலிம்பிக் கிராமம்( Olympic Village ) அமைக்கப் பட்டிருக்கும்.
இம் முறை இக்கிராமத்தில் ஏறக்குறைய 14500 பேர் வரை தங்குவார்கள் என எதிர் பார்க்கப் படுகின்றது.

ஒலிம்பிக்கில் உலக சமாதானத்தை வெளிப்படுத்த வெள்ளை நிற புறா பறக்க விடப்படும்.
ஒலிம்பிக்கில் ஏறக்குறைய 195 நாடுகளின் விளையாட்டு வீரர்களும் , வீராங்கனைகளும் 400க்கும் மேற்பட்ட விளையாட்டுக்களில் பங்கு கொள்ள இருக்கின்றார்கள்.

ஒலிம்பிக் போட்டியில் முதல் மூன்று இடத்தில் வெற்றி பெறுபவர்ககளுக்கு முறையே
1. தங்கம் (Gold)
2. வெள்ளி (Silver )
3. வெங்கல (Bronze ) பதக்கங்கள் வழங்கப் படும்.

பழங்கால கிரேக்க ஒலிம்பிக்கில் வெற்றி பெறுபவர்களுக்கு ஒலிவ் மரத்தின் இலைகளால் செய்யப்பட்ட முடி (ஊசழறெ) சூட்டப்படும்.

ஒலிம்பிக் போட்டி இறுதி நாளிலும் பல சிறப்பான விழாக்கள் நடைபெறும். எடுத்துக்காட்டாக ஒலிம்பிக் கொடி இறக்கப்பட்டு அடுத்த முறை ஒலிம்பிக்கை நடத்தும் நாட்டிடம் அக் கொடி கையளிக்கப்படும்.

விழா சிறப்பாக நடை பெற்றதன் நிறைவாக ஒலிம்பிக் தீபமும் அடைக்கப்படும்.

இந்த நூறாவது ஆண்டு ஒலிம்பிக் உலகத் தமிழருக்கும் , தமிழ் நாட்டுத் தமிழருக்கும், ஈழத்தமிழருக்கு பெருமை சேர்க்கும் ஒலிம்பிக்காக இருப்பதுடன் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் எழுதப்படும் பெருமை மிக்க நிகழ்வாக அமைய இருக்கின்றது.
பரிசில் ஈழத்தமிழன் தர்சன் செல்வராசா ஒலிம்பிக் தீபத்தை ஏந்தி தமிழ் மக்களின் மனதில் ஒளி ஏற்றிய நிகழ்வு தமிழனை உலகுயரச் செய்துள்ளது.
தமிழ்நாட்டில் இருந்து மூன்று தமிழ் வீராங்கனைகளும் ஈழத்தில் இருந்து தமிழ் விளையாட்டு வீரனும் இம் முறை ஒலிம்பிக்கில் பங்கு கொள்வது
தமிழ் இனத்தின் பெருமையையும் , திறமையையும் என்றென்றும் உலகம் கொண்டாடும் என்பதை கண் முன்னே காட்டுகின்றது.

தேசம் ஆசிரிய பீடம்

# “300 நாட்களுக்குப் பின்னரும், எங்கள் மேய்ச்சல் நிலங்கள் கிடைக்கும் வரை நாம் போராடுவோம்”.

## கிழக்கு பால் பண்ணையாளர்களின் போராட்டம் தொடர்கிறது



கிழக்கு மாகாணத்தில் மேய்ச்சலுக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை ஆக்கிரமித்து விவசாயம் செய்யும் மக்களை அப்புறப்படுத்தக் கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்திற்கு 10 மாதங்களாகியும் அதிகாரிகள் தீர்வு வழங்காததால் அப்பகுதி பால் பண்ணையாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுத்தருமாறு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் பாற்பண்ணையாளர்களின் போராட்டம் ஜு/லை 09 ஆம் திகதி 300 நாட்களை பூர்த்தி செய்த நிலையில், ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட மயிலத்தமடு மாதவனை பால் பண்ணையாளர் சங்கத்தின் தலைவர் சீனித்தம்பி நிமலன், தமது வாழ்வாதாரம் தற்போது முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் போராட்டம் இல்லாமல் எந்த வெற்றியையும் அடைய முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

“300 நாட்களுக்குப் பின்னரும், எங்கள் மேய்ச்சல் நிலங்கள் கிடைக்கும் வரை நாங்கள் போராடுவோம். தொடர்ந்து போராடினால்தான் பலன் கிடைக்கும். சிங்களக் குடியேற்றங்கள் வருவதற்கு முன் ஒரு நாளைக்கு 6000 லீட்டர் பால் கொடுத்தோம். இப்போது 500 லீட்டர் பால்தான் கிடைக்கிறது. மாடுகள் இறக்கின்றன. வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு 100 லீட்டர் பால் கறந்தவர் இன்று ஐந்து லீட்டர் பால்தான் கறக்கின்றார்.”

தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பால் பண்ணையாளர்களுக்கு ஆதரவாக, உள்ளூர் மத தலைவர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள் மற்றும் உள்ளூர்வாசிகள் 300ஆவது நாளில் தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார்.

கடந்த வருடம் செப்டெம்பர் 13ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குழுக் கூட்டத்தில் தீர்வை வழங்க முடியாது என மாவட்டச் செயலாளர் கமலாவதி பத்மராஜா தெரிவித்ததை அடுத்து, 2023 ஆம் ஆண்டு செப்டெம்பர் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு சித்தாண்டி பாடசாலைக்கு முன்பாக தமிழ்ப் பாற்பண்ணையாளர்கள் முதன் முதலாகப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தமது மாடுகளை மேய்ச்சலுக்கு பயன்படுத்திய சுமார் இரண்டாயிரத்து ஐநூறு ஏக்கர் காணி சிங்கள விவசாயிகளால் பயிர்ச்செய்கைக்காக முதலில் கையகப்படுத்தப்பட்டதாகவும், தாம் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளபோதிலும் மேலும் பல ஏக்கர் காணிகளை அவர்கள் கையகப்படுத்தியுள்ளதாகவும் பாற்பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மட்டக்களப்பு, மயிலத்தமடு, மாதவணை பிரதேசத்தில் அமைந்துள்ள புல் நிலம், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் ஆளுநராக நியமிக்கப்பட்ட, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தினால், சோளம் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளும் வகையில், குடியேற்றப்பட்ட 150 சிங்களக் குடும்பங்களுக்கும் பிரதேச பால் பண்ணையாளர்களுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுத்தப்பட்ட 6,000 ஏக்கர் மேய்ச்சல் நிலத்தில், சிங்கள விவசாயிகள் 2,500 ஏக்கர் நிலப்பரப்பை வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்துள்ளதாகவும், இது புல் வளரக்கூடிய வளமான பூமியெனவும் பால் பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

300 நாட்கள் தொடர் போராட்டத்தின் போது சிங்கள விவசாயிகள் மேய்ச்சல் நிலங்களில் களைக்கொல்லிகளை வீசியதாலும், மேய்ச்சல் நிலங்களுக்கு தீ வைப்பதாலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் உணவின்றி உயிரிழந்துள்ளதாக மயிலத்தமடு, மாதவனை பால் பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவர் சீனித்தம்பி நிமலன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

“இந்தப் போராட்டம் ஆரம்பித்ததில் இருந்து இதுவரை 1,075 மாடுகள் உயிரிழந்துள்ளன. சட்டவிரோதமாக குடியேறியவர்களின் ஆயுதங்களால் 375 மாடுகள் பலியாகியுள்ளன. இதுவரை இழப்பீடு எதுவும் கிடைக்கவில்லை.”

மேய்ச்சல் நிலத்தில் 160 சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்த 300 பேர் அத்துமீறி வாழ்ந்து வருவதாக அவர் முன்னர் தெரிவித்திருந்தார்.

பாற்பண்ணையாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குவதாக நாட்டின் தலைவரும் அரச அதிகாரிகளும் வழங்கிய வாக்குறுதிகள் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என சீனித்தம்பி நிமலன் குற்றஞ்சாட்டுகின்றார்.

“ஜனாதிபதியும், மகாவலி அபிவிருத்தி அமைச்சரும் சந்தித்து வாக்குறுதிகளை வழங்கிய போதிலும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாவட்ட செயலாளர் அரசாங்கத்தின் வாக்குறுதியை நம்புங்கள் என்கிறார். மொத்த நிலத்தில் 10,000 ஹெக்டேயரை மேய்ச்சலுக்குக் கேட்டிருந்தோம். அதன் பின்னர் குறைந்தது 7,000 ஹெக்டேயரைக் கேட்டோம். ஆனால் மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் 3,000 ஹெக்டேயர் என்கிறார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை.”

ஜனாதிபதி நீதிமன்றத்திற்கு செல்கிறார்

பால் பண்ணை பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக தமிழ் மக்கள் பிரதிநிதிகள் கடந்த ஒக்டோபர் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியுடன் நடத்திய கலந்துரையாடலின் போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பொலிஸாருக்கும் மகாவலி அதிகாரசபை அதிகாரிகளுக்கும், பால் பண்ணையாளர்களின் நிலத்தை அபகரித்து விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களை வெளியேற்ற சட்ட ரீதியில் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார்.

மயிலத்தமடு - மாதவனையில் மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான அரச காணியில், அத்துமீறி குடியேறியதாகத் தெரிவித்து 13 பேருக்கு எதிராக ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றில் மகாவலி அதிகார சபையினால் கடந்த செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அரச அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் எவ்வகையான ஆவணமும், அத்துமீறி குடியேறியவர்கள் என குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாததால், மயிலத்தமடு மாதவனை பகுதியில் அத்துமீறி குடியேறிய 13 பேரையும் வெளியேற்றுமாறு நீதவான் கட்டளை பிறப்பித்தார்.

எவ்வாறெனினும் சிங்கள விவசாயிகள் இதுவரை நிலத்தை விட்டு வெளியேறவில்லை என பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தேசம் பத்திரிக்கையில்
விளம்பரம் செய்ய அழையுங்கள்
647-891-7725

# இலங்கையின் சுகாதாரத்துறை ஒரு மருத்துவ மாபியாக்களின் கூடாரமாக அழிந்து போனது வரலாறு என்கிறார் வைத்தியர் அர்ச்சுனா




இலங்கையில் நடந்த இமினோ குளோபின் மற்றும் இதர பல கொள்ளை சம்பவங்களில் எங்களுடைய சுகாதாரத் துறை ஒருமுறை ஆட்டம் கண்டது. அதன்பின்பு ஒவ்வொரு தடவையும் நாம் முயற்சிக்கின்ற நேரங்களில் சுகாதாரத் துறையில் வைத்தியர்களுக்கான உரிமையை பெறுகின்றோம் என்ற அடிப்படையில் ஒவ்வொரு தடவையும் தொழிற்சங்கம் என்ற பெயர்களில் வைத்திய அதிகாரிகள் சங்கம் செய்கின்ற மக்கள் தொடர்பான அடாவடித்தனங்கள் ஒரு கட்டுக்கடங்காமல் போய் சுகாதாரத்துறை ஒரு மருத்துவ மாபியாக்களின் கூடாரமாக ஒரு தொழிற்சங்கங்களின் கூடாரமாக அழிந்து போனது வரலாறு என வைத்தியர் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட முகநூல் பதிவிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் அவர் குறிப்பிடுகையில்,

“ 12-07-2024 நேற்றைய தினம் என்னை சுகாதார அமைப்புக்கு அழைத்து முதல் மணித்தியாலத்தில் என்னிடம் சொல்லப்பட்டது என்னுடைய வேலை இனிமேல் பறிபோகும் சாத்திய கூறு உண்டு அது தவிர என்னுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு என்று மதிப்புக்குரிய சுகாதார செயலாளர் மற்றும் இதர பல உத்தியோகத்தர்கள் அதிகாரிகள் எனது மனவலிமையை பரிசோதித்துப் பார்த்தார்கள்.

ஆனால் மூன்றரை மணித்தியாலம் நீடித்தது இந்த கூட்டம், கூட்டமென்று சொல்வதை விட நமது தலைவரை இந்தியா எவ்வாறு அழைத்து பேச்சு வார்த்தை என்ற பெயரில் ஒரு தனி அறையில் அடைத்தார்களோ அதே இதே போன்ற தொனியில் அதிகாரமாக என்னை மிரட்ட முயன்றார்கள்.

ஆனால் அப்போது என்னால் சொல்லப்பட்ட விடயம் இந்த சந்திப்பு மற்றும் இதில் பேசப்பட்ட எந்த விடயங்களும் நான் பிழையான வழியில் பொதுவெளியில் பகிரப் போவதில்லை என்று. ஆனால் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி அதுமட்டுமன்றி எனது வேலை அடிப்படை உரிமை என்று தெரிந்தும் பொய்யான காரணங்களுக்காக தங்களால் என்னை அச்சுறுத்த முடியுமாயின் தாங்கள் அச்சுறுத்தி உள்ள விடயத்தை நான் பொது வெளிக்கு கொண்டு வருவேன் என்று கூறினேன். துணிவை எனது தந்தை 38 வருடங்களுக்கு முன்னமே சொல்லித் தந்து விட்டு தான் போயிருந்தார். எனது தந்தையின் வரலாற்றை கூட மிகத் தெளிவாக அவர்களிடம் நான் சொல்லி இருந்தேன்.

இரண்டாவது மூன்றாவது மணித்தியாலங்கள் மிகவும் அன்பானவையாகவும் இரு மனங்களும் ஒத்து நடந்தது. யாழ்ப்பாணத்தில் நடக்கின்ற சுகாதார வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகள் மற்றும் வைத்தியர்களின் இடமாற்றம் சம்பந்தமான அடாவடித்தனங்கள் வைத்தியசாலைகளில் நடக்கும் கொடூரங்கள் பிணங்களை தின்று பணம் வேண்டும் சந்தர்ப்பங்கள் பாதிக்கப்பட்ட வைத்தியர்களுக்கோ தாதியர்களுக்கோ நோயாளர்களுக்கோ நீதி மறுக்கப்பட்ட தன்மையை நான் தெளிவாக அவர்களுக்கு அவர்களது மொழியிலேயே சொல்லிக் கொடுத்தேன். அதன்பின்பு தான் அவர்களுக்கு யாழ்ப்பாணத்தின் நிலைமை நன்றாக தெரிந்து கொண்டது.

அது தவிர இந்த சுகாதாரத் துறைக்கான நூல் எழுச்சி போராட்டத்திற்கு முக்கியமாக வடக்கும் கிழக்கு மாகாணத்தில் இந்த சுகாதார தன்னிச்சையாக நடைபெறுவது என்பதையும் வைத்தியர் கேதீஸ்வரன் ஐயா மற்றும் சத்தியமூர்த்தி ஐயா அவர்கள் தன்னிச்சையாக பல பேருக்கு அநீதி விளைவித்ததையும் அது தவிர வைத்தியர் மயூரன் போன்றோர்கள் அடித்தும் துவைத்தும் வைத்தியசாலையை நடத்துகின்ற தன்மையை நான் தெளிவாகச் சொல்லிக் கொண்டேன்.

இறுதியாக இந்த மாற்றத்தை பொதுமக்கள் வேண்டுகிறார்கள் அதில் எனது பங்கு என்ன இது அரசியலா இது அரசியலாக இவ்வாறு மாற்றப்படுகிறது இதன் பாதிப்புகள் பொதுமக்களை எவ்வாறு அடையும் என்ற எல்லா விதங்களையும் நான் அவர்களுக்கு தனியாக நின்று எடுத்துரைத்தேன்.

இந்த சுகாதார மாற்றத்துக்கு எனது வேலையோ உயிரோ போனாலும் நான் அடிபணிய போவதில்லை என்றதை அவர்கள் மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டதுடன் இந்த மாற்றம் படிப்படியாக செய்ய வேண்டும் மாறாக உடனடியே செய்ய முடியாது என்பதை மதிப்பிற்குரிய பாதித்த மகிபால அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனாலும் நான் அவர்களிடம் பெற்ற வாக்குறுதி இந்த சந்தர்ப்பத்திலும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தொடர்ந்து சேவையில் நீடித்தால் குற்றங்கள் மறைக்கப்படும் என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனால் இன்று சுகாதார வைத்திய அதிகாரிகள் சங்கம் ஒரு பல்லை இழந்த பாம்பாக இன்னொரு பல்லுடன் சுகாதாரச் செயலாளரை சந்தித்து சுகாதார அமைச்சர்க்கே ஒரு மிரட்டலை விடுத்திருக்கிறது என்பதை நான் பொது மக்களின் சுகாதார உரிமைக்கு எடுக்கப்படும் குந்தகமாகவே பார்க்கின்றேன்.

சுகாதாரத் துறையில் இருந்து அடாவடித்தனமான சுகாதார தொழிற்சங்க நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு மக்களுடைய சுகாதாரத் தேவை என்பது ஒரு அத்தியாவசிய சேவையாக மாற்றப்பட வேண்டும் என்பதை நான் எப்போதே முடிவெடுத்துக் கொண்டேன்.



அந்த மாற்றத்திற்கு சுகாதார அமைச்சர் இணங்கி கொண்டாலும் தங்களது பதவிகள் இதனால் பறிக்கப்படும் என்ற அச்சத்தில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

ஆனால் வேலையையும் எனது உயிரையும் துச்சமாக நான் மதித்து இந்த சுகாதாரத் துறைக்கான ஒரு விடியலை நோக்கிய எமது மக்களின் பயணத்தை முஸ்லிம் தமிழ் சிங்களம் என்ற அடிப்படையில் பார்க்காமல் இனவாதம் பேசாமல் அரசியலாக்காமல் மிக ஆணித்தரமாக வைத்தியர்களுடைய நலனை முன்னிறுத்தி மேலும் வைத்தியர்கள் வெளிநாட்டில் இருந்து வந்து நிம்மதியாக வேலை செய்யக்கூடிய உறுதியான சுகாதார கட்டமைப்பை உடனடியாக நிறுவ வேண்டும் என்ற குறிக்கோளில் இந்தப் பாதையில் பயணிக்கின்றேன்.

யாராவது இந்த தமிழ் மொழிபெயர்ப்பை சிங்களத்தில் மொழிபெயர்த்து அதனை சிங்கள மக்களிடம் கொண்டு சேர்ப்பார்கள் ஆயின் எமது இலங்கையில் சுகாதாரத்துறை வைத்தியர்களுடைய நலன் தாதிகளின் நலன் பாதுகாக்கப்பட்டு அமெரிக்கா இங்கிலாந்து போன்ற தொழிற்சங்கங்கள் நிர்வாகிக்க முடியாத ஒரு சுகாதார கட்டமைப்பை நாங்கள் நிறுவுவோம் என குறிப்பிட்டுள்ளா வைத்தியர் அர்ச்சுனா




# வட மாகாணத்தினை ஆட்டிப்படைக்கும் வைத்திய 'சிறுந்தகைகளை' கட்டுப்பத்த முடியவில்லையா?

வைத்தியத்துறையில் தற்போது பல்வேறு ஊழல் மோசடிகள் நாளுக்கு நாள் வெளிவந்தவண்ணம் உள்ளன. அண்மையில் வைத்திய அர்ச்சுனாவினால் முன்வைக்கப்பட்ட சாவகச்சேரி வைத்தியசாலை தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு முன்னர யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெறும் பல குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இணையவாசிகளுக்கும் வைத்தியத்துறையில் காணப்படும் முக்கிய புள்ளிகளுக்கும் இடையே பல்வேறான கருத்து சொற்பரிமாற்றங்கள் நடைபெற்றன. அந்தவகையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பாக பாதிக்கப்பட்ட தரப்பினர் தம்மிடமுள்ள ஆதாரங்களை முன்வைத்து சமூக ஊடகங்கள் மூலமாகவும் தெரிந்த சில வழிமுறைகளிலும் முறைப்பாடுகளைத் தெரிவித்து வந்தனர். அந்தவகையில் அவர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் எவராலும் பெரிய அளவில் கண்டுகொள்ளப்படவில்லை. இதற்கு முக்கிய காரணம் முறைப்பாடுகளை முன்வைத்த எவரும் அரசியல் சார்ந்தவர்களாகவோ அல்லது உயர் அதிகாரிகளின் பக்கபலம் உடையவர்களாகவோ இல்லாமல் சாதாரண பாமர மக்களாக காணப்பட்டமையினால் அதிகார வர்க்கத்தினர் அவற்றினை மூடிமறைத்து விட்டார்கள்.

இதேபோல், சில ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள அரச வைத்தியசாலைகளில் கண் பார்வை குறைவு தொடர்பாகவும் கண் சார்ந்த நோய்கள் தொடர்பாகவும் பலர் சிகிச்சை பெறுவதற்கு செல்கின்றபோது வைத்தியசாலையில் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு (சத்திர சிகிச்சை) பிறிதொரு திகதி வழங்கபடும். அதுவும் 6 தொடக்கம் 18 மாதங்கள் பிந்தியதாகவே காணப்படும். அதுவரை காலமும் காத்திருக்க முடியாதமையால் மக்கள் அதே வைத்தியரை தனியார் வைத்தியசாலை ஒன்றில் பணம் செலுத்தி அனுமதி பெற்ற சந்திக்கும் போது தனியார் வைத்தியசாலைகளில் விரைவாக குறைந்த செலவில் சத்திரசிகிச்சை செய்யலாம் என்ற போர்வையில் கருத்துக்கள் முன்வைக்கப்படும். இதனை நம்பி மக்கள் தனியார் வைத்தியசாலையில் திகதி பெற்று சத்திரசிகிச்சையை செய்துகொண்டார்கள். இவ்வாறு செய்து கொண்டவர்களில் சிலரது கண்கள் அந்த வைத்தியசாலையில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக கண்பார்வை இழந்தும் காணப்பட்டனர். அவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றும் கூட எந்தவிதமான பாரிய அளவு நடவடிக்கையும் எடுக்க முன்வராத தற்போதைய வைத்திய மாபியாக்கள் சாவகச்சேரியில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறைக்கும் நோக்குடன் செயற்பட்டது மட்டுமன்றி அவற்றில் தமக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு விரைந்து நடவடிக்கை களையும் எடுக்க முன்வந்தனர்.

இலங்கையில் அதிக வருமானம் பெற்றுக்கொள்ளும் துறையாக வைத்தித்துறை காணப்படுவதுடன் சில வைத்தியர்கள் அரச வைத்தியசாலைகளில் இருந்து கொண்டு தமது சேவை முழுவதையும் தனியார் வைத்தியசாலைகளின் ஊடாக வழங்கி வருகின்றனர். அத்துடன் பெரும்பாலான வைத்தியர்கள் பண முதலைகளாகவே காணப்படுகின்றனர். ஒரு சிலர் அரச வைத்தியசாலையில் நோயாளர்களையும் விடுதியையும் மேலோட்டமாக பார்த்து விட்டு தனியார் வைத்தியசாலையில் சென்று ஒரு நாளைக்கு 20 50 வரையான நோயாளர்களை பதிவுசெய்து பார்வையிடுகின்றனர். இதில் ஒட்டுமொத்தமாக எல்லா வைத்தியர்களையும் குறிப்பிட முடியாது. பல வைத்தியர்கள் எந்தவொரு தனியார் வைத்தியசாலைக்கும் செல்லாது அரச வைத்தியசாலையில் சேவை புரிந்து வருகின்றார்கள். மேலும் எமக்குத் தெரிந்த சில வைத்தியர்கள் இன்றும் துவிச்சக்கர வண்டியில் 8 10 கிலோமீற்றர் தூரம் சென்று காலை 7 அல்லது 8 மணிமுதல் இரவு 10 அல்லது 11 மணிவரைகூட வைத்தியசாலையில் இருந்து நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கி வருகின்றனர்.



அந்தவகையில் தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் அதிலும் குறிப்பாக வடமாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் இடம்பெற்றுவரும் மோசடிகள் பல நாளுக்கு நாள் அம்பலப்படுத்தப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. பொதுவாக கொழும்பு அல்லது தென்பகுதி வைத்தியசாலைகளில் பணிபுரியும் வைத்தியர்கள் அல்லது தாதியர்கள் அல்லது சிற்றூழியர்கள் அனைவரும் நோயாளர்களை பரிவுடன் கவனித்து வருவதுடன் கண்ணியமாக நடந்துகொள்வதையும் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் துப்பரவுப் பணிகள் கூட சிறப்பாகவும் சுகாதாரமான முறையிலும் இடம்பெற்று வருகின்றன. இவை அனைத்தும் அந்தந்த வைத்தியசாலையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் மேற்பார்வையில்தான் நடைபெற்று வருகின்றன. ஆனால், வடமாகாணத்தில் அதிலும் யாழ்ப்பாணத்தில் இவ்வாறு சேவைசெய்ய வருகின்ற சிறந்த வைத்தியர்களையும் தமது ஊழலுக்கு உடன்படாத வைத்தியர்களையும் அங்கிருந்து அப்புறப்படுத்தும் செயற்பாடுகளையே வைத்திய மாபியாக்கள் செய்து வருகின்றன.

அந்தவகையில் யாழ். வைத்திய மாபியாக்கள் அண்மைக் காலமாக மேற்கொண்டு வருகின்ற எதிரானவர்களைப் பழிவாங்கும் செயற்பாடுகள் தற்போது நாளுக்கு நாள் வெளிவந்துகொண்டு தான் இருக்கின்றன. இத்தகைய செயற்பாடுகள் சில ஊடகங்களினாலும் சில பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மற்றும் ஒரு சில அரசியல் வாதிகளின் ஒத்துழைப்பினாலேயே இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில் அண்மையில் பல காரியங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டின் காரணமாக வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று அண்மையில் சமூக வலைத்தளங்களில் அதிகமாக பகிரப்பட்டு வருவது இன்னொரு வைத்தியர் யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து திட்டமிட்டு வெளியேற்றப்பட்டுள்ளார் என்பதுடன் இதுவும் தனியார் துறையில் உள்ள சில வைத்தியசாலைகளை வளர்ப்பதற்கு யாழ். வைத்திய மாபியாக்களினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு செயற்பாடாகவே காணப்படும் என கருத்து நிலவிவருகின்றது. அந்தவகையில், இருதய சத்திரசிகிச்சை நிபுணரின் இடமாற்றம் தொடர்பாக தகவலாகும்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நடந்தவை என்ன?
யாழ் போதனா வைத்தியசாலையில் பணியாற்றிய இருதய நெஞ்சறை மாற்று சத்திர சிகிச்சை நிபுணரான எஸ்.முகுந்தன் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றமை தொடரில் பல்வேறுபட்ட வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ள நிலையில் நமது ஊடகம் இது தொடர்பில் ஆராய்ந்தது.

யாழ் மாவட்ட மக்களுக்கு எட்டாக்கனியாக இருந்த இருதய மாற்று சத்திரசிகிச்சையை முதன் முதலில் யாழ் போதனா வைத்தியசாலையில் வெற்றிகரமாக நிகழ்த்திச் சாதனை படைத்த பெருமை வைத்திய குறித்த வைத்தியநிபுணரையே சாரும்.

அவரது விடாமுயற்சியும் அவரோடு உறுதுணையாக இருந்தவர்களின் அற்பணிப்பும் குறித்த சத்திர சிகிச்சையை யாழ் போதனா வைத்தியசாலையில் வெற்றிகரமாக நிகழ்த்துவதற்கு உறுதுணையாக இருந்துள்ளது. யாழ் போதனா வைத்தியசாலையில் ஒன்றரை வருடங்களுக்கு மேலாக வைத்திய நிபுணர் முகுந்தன் இருதய மாற்று சத்திரசிகிச்சை தொடர்பில் சக வைத்தியர்களை தயார் படுத்தி ஒரு பொறிமுறையின் கீழ் செயற்படுத்தி 150க்கு மேற்பட்ட இருதய நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்து அவர்களின் இருதயங்களில் வாழ்கின்ற வைத்திய நிபுணராக விளங்கினார்.

யாழ் மாவட்ட மக்களுக்கென இல்லாமல் வடமாகாணத்தில் இருதய நோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சேவையாற்றினார். இவ்வாறான நிலையில் இம்மாதம் ஜூன் மாதம் எட்டாம் திகதி கொழும்பு சீமாட்டி மருத்துவமனைக்கு சுய விருப்பத்தின் பேரில் பணியிட மாற்றம் பெற்றுச் சென்றார்.

# “ரொறன்ரோவில் வாழுகின்ற அனைத்து தமிழ்க் குடும்பங்களையும் உள்ளடக்கிய எமது சமூகத்தின் பங்களிப்போடே. ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்தை’ கட்டி எழுப்ப விரும்புகின்றோம்”

## ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்திற்கான நிதி சேகரிப்புக் குழுவின் சார்பில் வர்த்தகப் பிரமுகர் சாந்தா பஞ்சலிங்கம் தெரிவிப்பு






“ஸ்காபுறோ நகரில் எமது சமூகத்திற்காக அமையவுள்ள தமிழச் சமூக மையம் பற்றி எமது கனடா வாழ் தமிழர்கள் அனைவரும் அறிந்திருப்பார்கள் என்பது எமது நம்பிக்கை. இந்த விடயத்தில், ரொறன்ரோவில் வாழுகின்ற அனைத்து தமிழ்க் குடும்பங்களையும் உள்ளடக்கிய எமது சமூகத்தின் பங்களிப்போடே. ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்தை’ கட்டி எழுப்ப தற்போது மிக வேகமாகவும் விவேகமாகவும் செயற்படும் அமைப்புக் குழுவினராகிய நாங்கள் விரும்புகின்றோம். எனவே இங்கு வாழும் தமிழ்க் குடும்பங்கள் அல்லது தனி நபர்கள் ஆகியோரில் சுமார் 2500 பேரிடமிருந்து நாங்கள் பத்தாயிரம் டாலர்களை பெற்றுக் கொள்வதன் மூலம் அதன் மூலம் நாம் 25 மில்லியன் டாலர்களை சேகரித்து எமது திட்டத்தை நாம் பூரணமாக கட்டி முடிக்கலாம் என்று நம்புகின்றோம்”

இவ்வாறு 03-07-2024 அன்று புதன்கிழமையன்று மார்க்கம் ந கரில் டிஅமைந்துள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பு நிகழ்ச்சியொன்றில் உரையாற்றிய ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்திற்கான நிதி சேகரிப்புக் குழுவின் சார்பில் வர்த்தகப் பிரமுகர் சாந்தா பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் தமிழ்ச் சமூக மையத்தின் தற்போதை இயக்குனர் சபையின் சார்பில் தீபிகா மற்றும் குபேஸ், ரமணன், ஜெயக்குமார். சாந்தா பஞ்சலிங்கம் உட்பட கனடிய தமிழர் தேசிய அவையின் பிரதிநிதி ஒருவரும் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய அனைவரும் மேற்படி தமிழ்ச் சமூக மையத்திற்கான கட்டிட நிதியாக கனடாவின் மத்திய- மாகாண மற்றும்ரொறன்ரோ உள்ளாட்சி அரசுகளின் சார்பில் கிடைத்துள்ள 23 மில்லியன் டாலர் நிதி உதவியானது எமது தமிழ்ச் சமூகத்திற்கு கிடைத்த ஒரு பெரும் கொடை என்றும் அதற்கு மேலாக இந்த திட்டத்தை பூர்த்தி செய்ய தேவையான முழுமையான நிதியையும் வர்த்தக சமூகம் உ ள்ளடங்கிய எமது தமிழ்ச் சமூகத்திற் பங்களிப்பை நம்பியிருப்பதாகவும், அமையவுள்ள தமிழச் சமூக மையத்திற்கு எமது சமூகத்தின் முழுமையான பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதை நிதி சேகரிப்புக் குழு நன்கு உணர்ந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் தனதும் ஏனைய இயக்குனர் சபை உறுப்பினர்கள் சார்பிலும் தனது கருத்துக்களை தெரிவித்தார்.”

“எமது சமூகத்தில் உள்ள வர்த்தக பிரமுகர்கள் மற்றும் தொழிலதிபர்கள் ஆகியோர் தங்கள் பங்களிப்புக்களை பெருமளவில் வழங்க உறுதியளித்துள்ளனர். ஆனால் அது மட்டுமன்றி, சுமார் 2500 தமிழ் பேசும் குடும்பங்களின் பங்களிப்புடன் கனடிய தமிழ்ச் சமூகத்தின் சார்பில் நாம் திரட்ட வேண்டிய 25 மில்லியன் டாலர்களை எமது இயக்குனர் சபையும் நிதி சேகரிப்புக் குழுவும் சேகரிக்க இங்குள்ள தமிழ் மொழி சார்ந்த ஊடகங்களையும் பத்திரிகைகளை வெளியிடும் நிறுவனங்களையும் வேண்டுகின்றோம்” என்று தெரிவித்தார்




# வட மாகாணத்தினை ஆட்டிப்படைக்கும் வைத்திய 'சிறுந்தகைகளை' கட்டுப்பத்த முடியவில்லையா?

குறித்த இடமாற்றம் தொடர்பில் யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தி.சத்தியமூர்த்தி தனது இணைய வழி செய்தி குறிப்பில் குறிப்பிடும் போது குறித்த வைத்தியர் சுய விருப்பத்தின் பேரிலே இடமாற்றம் பெற்று தனது குடும்பத்துக்கு அருகில் உள்ள சீமாட்டி வைத்தியசாலையில் பணிபுரிவதற்காக சென்றுவிட்டார் என குறிப்பிட்டார். அத்துடன் புதியவர்களை வரவேற்பதும் இடமாறிச்செல்வோரை வாழ்த்தி அனுப்புவதும் தமது கடமை என குறிப்பிட்டிருந்தார்.

அவர் இவ்வாறு தெரிவித்த கருத்தில் தான் பிரச்சினை ஆரம்பமாகிறது. யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் குறித்த வைத்தியர் கொழும்புக்கு இடமாற்றம் பெற்று தனது குடும்பத்திற்கு அருகில் சேவையாற்ற சென்றுவிட்டார் என குறிப்பிட்ட கருத்து அவர் நான்கு வருடங்களாக யாழ் போதனா வைத்தியசாலையில் பணியாற்றியபோது தனது குடும்பத்தை நினைக்கவில்லையா? என்ற கேள்வி ஒருபுறம் இருக்க யாழ் போதனா வைத்தியசாலையில் அதிலிருந்து குறித்த சத்திர சிகிச்சை நிபுணர் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றமை அவருக்கு ஏற்பட்ட மன உளைச்சலே பிரதான காரணம் என இன்னொரு பகுதியினர் முணுமுணுக்கின்றனர்.

சத்திரசிகிச்சை நிபுணருக்கு என்ன மன உளைச்சல் ஏற்பட்டு இருக்கும் என ஆராய்ந்த போது குறித்த சத்திரசிகிச்சை நிபுணர் போதனா வைத்தியசாலைக்கு சேவையாற்ற வந்து நான்கு வருடங்கள் கடந்த நிலையில் அவருக்கென தனியான நோயாளர் விடுதி ஏற்படுத்திக் கொடுக்காத கொடுமை அம்பலத்துக்கு வந்தது.
குறித்தவைத்தியநிபுணர் நான்கரை வருடங்கள் கடந்த நிலையில் தனது விண்ணப்பத்தை சமர்ப்பிக்காத சந்தர்ப்பத்தில் மத்திய சுகாதார அமைச்சு தான் விரும்புகின்ற மாகாணத்துக்கு அவரை இடமாற்றம் செய்யும். இதனைக் கருத்தில் கொண்டு தனது குடும்பத்திற்கு அருகில் உள்ள வைத்தியசாலையான கொழும்பு சீமாட்டி வைத்தியசாலையை முகுந்தன் தனது பணியிட மாற்றத்துக்கு தெரிவு செய்தாதாகக் கூறப்படுகிறது.
இவ்வாறு நிர்வாக குறைபாடுகள் பல இருக்கின்ற நிலையில் குறித்த சத்திர சிகிச்சை நிபுணர் தான் சுய விருப்பத்தின் பெயரில் தான் கொழும்பு செல்கிறார் என யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாகம் குறிப்பிடுவது தமது பக்க பிளைகளை மறைப்பதற்காகவா என்ற சந்தேகம் எழுகின்றது.
யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் உட்பட பல சத்திரசிகிச்சை நிபுணர்கள் தமது சேவை காலம்சேவைக்காலம் வரை யாழ் போதனா வைத்தியசாலையில் பணியாற்றுவதற்கான என்போசை பெற்ற நிலையில் குறித்த சத்திர சிகிச்சை நிபுணரான முகுந்தனுக்கு மட்டும் யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாகம் என்போசாக மாற்றுவதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்வி இன்னொருபுறம் எழுகின்றது.

யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாகம் ஒரு சில பண முதலைகளின் கோரிக்கைக்காகவா சத்திர சிகிச்சை நிபுணர் முகுந்தனை என்போரஸ் ஆக்கவில்லை என்ற கேள்வி எழவதோடு போதனா வைத்தியசாலையின் இருதய நெஞ்சறை மாற்று சத்திரசிகிச்சை கூடத்தை தரமுயர்த்யதாமல் வைத்திருக்கின்றனர் என்ற கேள்வியும் பலர் இடம் எழந்துள்ளது.

வடக்கு மக்களுக்காக சேவையாற்ற விரும்பிய வைத்திய நிபுணர் முகுந்தனை யாழ் போதனா வைத்தியசாலையில் உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவரை சேவைக்கால முழுவதும் அவர் விரும்பும் பட்சத்தில் யாழ் போதனா வைத்தியசாலை யில் பணியாற்றவிடாது யாரோ ஒருசிலரின் நிகழ்ச்சி நிரலுக்கு யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாகம் அடிபணிந்து செய்யப்படுகிறதா என்ற சந்தேகம் பலருக்கும் எழுந்துள்ளது.

அத்துடன் ஊடக சந்திப்பொன்றில் வைத்தியர் நடராஜா ஜெயகுமாரனும் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாக பல கருத்துக்களை முன்வைத்திருந்தார். தனது வீட்டை அடித்து நொருக்கி எரித்து தன்னை யாழில் இருந்து விரட்டியவர் என்ற வைத்திய மாபியாவின் தலைவர்க
ளில் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டிருந்தார்.
யாழ் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் புற்றுநோய் நிபுணராகக் கடமையாற்றிய தன்னை, ஊழல்கலை வெளிப்படுத்தியதற்காக, உயிர் அச்சுறுத்தல் கொடுத்த வீட்டை அடித்து நொருக்கி எரித்து யாழில் இருந்து விரட்டி அடித்தனர், யாழ் மருத்துவ அதிகாரிகள் எனக் குற்றம்சாட்டுகின்றார் புற்றுநோய் மருத்துவநிபுணர் நடராஜா ஜெயக்குமாரன். 2004 முதல் 2012 யாழ் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாளையில் கடமையாற்றிய இவர், அங்கு நடைபெற்ற ஊழல்களை வெளிக்கொண்டுவந்தால் தனக்கு எதிராக கடுமையாகவும் மோசமாகவும் நடந்து கொண்டதாக யாழ் போதனா வைத்தியசாலையின் அத்தியேட்சகர் ஒருவர் மீது மிகக் காட்டமான விமர்சனத்தை முன்வைத்துள்ளார்.

அத்துடன் தனது குடும்பத்தையும் இவர்கள் வன்முறையால் அச்சுறுத்தியதால், தன்னால் மேற்கொண்டு அங்கு பணிபுரிய முடியவில்லை என்றும் அதனைத் தொடர்ந்து மகரகம தேசிய புற்றுநோய் மருத்துவமனை  அபேஸ்கா வில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக புற்றுநோய் சிகிச்சை நிபுணராக அவர் கடமையாற்றி வருகின்றார்.
இதுதொடர்பில் தற்போது யாழ்ப்பாணத்தில் நாளுக்குநாள் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் யாழ்ப்பாணத் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் பணிபுரிகின்ற புற்றுநோய் வைத்திய நிபுனர் தொடர்பாக பல்வேறு தரப்பினரும் செய்தி நிறுவனத்தின் நிகழ்ச்சியில் நேரடியாக கலந்து கொண்டு தமக்கு நடந்த கொடுமைகள் தொடர்பாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

இந்தவகையில் வைத்தியர் அர்ச்சுனா எப்படிப்பட்டவர் என்பது எமக்கு முக்கியமல்ல அவரினால் தொடக்கி வைக்கப்பட்ட சாவகச்சேரி வைத்தியசாலை மீதான குற்றச்சாட்டிலிருந்து ஆரம்பித்து பல முறைப்பாடுகள் வெளிவந்துகொண்டிருன்றன. இவை தொடர்பாக நடவடிக்கைகள் சில கண்துடைப்புக்காகவே மேற்கொள்ளப்பட்டு வருவது தெரிந்ததே.
எனினும் அதற்கு ஒருபடி மேலே சென்று யாழ். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நிர்வாக அமைப்பு தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பாதிக்கப்பட்ட தரப்பினருடன் நேரடியாக தொடர்பு கொண்டு முறைப்பாடுகள் தொடர்பாக விளக்கங்களை அனைவர் முன்னிலையிலும் வெளிப்பிடுத்தியிருந்தார்.

பாதிக்கப்பட்ட நபர், தனது தந்தைக்கு பாம்பு கடித்த நிலையில் அவரை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அழைத்து சென்றதாகவும், இதன்போது வைத்திய நிர்வாகம் சார்ந்த எவரும் அங்கிருக்கவில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளார். இதேபோல் குற்றச் செயல்கள் இடம்பெறாமல் இருக்க மக்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டியது அவசியமே. அவ்வாறு செய்வதன் மூலம் வைத்திய மாபியாக்களின் செயற்பாடுகளை ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். அதிகார வர்க்கத்தினை மட்டும் நம்பி இராது மக்களும் அவை தொடர்பில் உரிய முறைப்பாடுகள் செய்வதுடன் நின்றுவிடாது குற்றல் செயல்களுக்கு எதிராக குரல்எழுப்ப வேண்டும்.

# கனடாவின் ஒன்ராறியோ மாகாணமும் கறுப்பு ஜூலையின் 41ஆம் ஆண்டை நினைவுகூர்கிறது

தமிழின அழிப்பின் ஒரு கட்டமாக 1983ஆம் ஆண்டு ஜுலை மாதம் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின்போது 3000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டு, ஆயிரக்கணக்கான தமிழர்களின் வணிக நிறுவனங்கள், வீடுகள் ஆகியன அழித்தொழிக்கப்பட்டதன் 41ஆவது ஆண்டு நினைவு இவ்வாரமாகும்.

மாகாணத்தின் அமைச்சராக விளங்கும் விஜய் தணிகாசலம் அவர்கள் இதுபற்றி நினைவுகூரும்போது, "கொடூரமான இவ்வினப்படுகொலையால், தமிழர்கள் அளப்பரிய துன்பங்களைச் சுமந்து தமது தாயகத்தைவிட்டுப் புலம்பெயர்ந்தனர். தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இக்கொடுமைகளை உலகிற்கு எடுத்துரைக்கவும், அவர்களின் பாதிப்புகள் என்றும் மறக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்யவும் தமிழ் இன அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டம் 104 நிறைவேற்றப்பட்டது", என தெரிவித்துள்ளார்.

தமிழ் இன அழிப்புக் குறித்து எதிர்காலத் தலைமுறையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், உயிரிழந்தவர்களின் நினைவைப் போற்றவும் ஏதுவாக இச்சட்டம் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# மலையக தமிழர் தொடர்பில் இந்த அரசு படு தோல்வி அடைந்து விட்டது சம்பளம், வீடு, காணி எதுவும் இல்லை

### சபையில் தமுகூ தலைவர் மனோ கணேசன்

சம்பளம் 1,700 என்றார்கள் அது இன்னமும் இழுபறி. ரூ.1,000 சம்பளமே முழுமையாக கிடைப்பது இல்லை. சில இடங்களில் அரை பேர் போட்டு ரூ. 500 தரப்படுகிறது. அப்புறம், இவர்களின் ஏகப்பட்ட முறை கேடுகள், தில்லு முல்லுகள், மோசடிகள் காரணமாக இந்திய வீட்டு திட்டம் தாமதம் ஆகி விட்டது. பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு வழங்கிய 10,000 வீட்டு திட்ட உறுதி மொழியை நாம் ஆட்சிக்கு வந்து நிறைவேற்றி வைப்போம். அப்புறம், 10 பேர்ச் காணி தருகிறேன் என்றாகள். அதற்கு 4,000 மில்லியன் அதாவது, 400 கோடி ஒதுக்கி உள்ளேன் என்றும் சொன்னார்கள். இன்று, காணியையும் காணோம். காணிக்கு ஒதுக்கிய பணத்தையும் காணோம்.

ஆகவே சம்பளமும் இல்லை. வீடும் இல்லை. காணியும் இல்லை. நீங்கள் எமது மக்களுக்கு ஒன்றும் தரவில்லை. இப்போது தேர்தலை அறிவிக்க தேர்தலை அறிவிக்க தேர்தல் ஆணையகத்துக்கு அதிகாரம் வர இன்னும் ஐந்தே நாட்கள் இருக்கும் போது, தோட்ட லயன்களை "கிராமம்" என்று அறிவிக்க போகிறோம் என்று சொல்கிறீர்கள். இது தேர்தல் குண்டு மாத்திரம் அல்ல, நமது மக்களுக்கு காணி வழங்காமல், தொடர்ந்தும் அவர்களை ஒதுக்க பட்ட மக்களாக மலை உச்சிகளில், இருநூறு ஆண்டுகளுக்கு பிறகும், பழங்குடி மக்களாக, வைக்க முனையும் சமூக அநீதி என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் இன்று சபையில் கூறினார்.

மலையக தியாகிகள் தினம் அறிவிக்க பட வேண்டும் என கோரி பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் முன் மொழிந்து எம்பி ராதாகிருஷ்ணன் வழி மொழிந்து சபையில் கொண்டு வந்த பிரேரணை மீது உரையாற்றிய மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது

எனது தொகுதி கொழும்பு. அவிசாவளை புவக்பிட்டிய பென்ரித் தோட்ட கருங்காலி பிரிவில் தீ விபத்து நிகழ்ந்தது. நான் உடனடியாக எனது பாமன்கடை வீட்டில் இருந்து கிளம்பி, புவக்பிடியவுக்கு ஒரு மணித்தியாலயத்தில் சென்றேன். ஆனால், புவக்பிட்டியவில் இருந்து கருங்காலி மலை உச்சிக்கு செல்ல எனக்கு எனது ஜீப் வாகனத்தில் ஒன்றரை மணித்தியாலம் ஆகியது.

பென்ரித் தோட்ட கருங்காலி பிரிவுக்கு போய் அங்கே ஒரு வயதான பெண்ணிடம் எப்போது கடைசியாக அவிசாவளை நகருக்கு போனீர்கள் என்று கேட்டேன். போன பொங்கலுக்கு துணி வாங்க போனேன் என்றார். சிலர் அப்படியும் போனதில்லை. இது ஏன்? இது என்ன? நமது மக்கள் ஒதுக்கப்பட்ட மக்களாக மலை உச்சியில் பழங்குடியினர் போல் வாழ்கிறார்கள். இருநூறு ஆண்டுகளாக வாழ்கிறார்கள்.

இது நிறுத்தப்பட வேண்டும். எமது மக்களுக்கு உறுதி அளித்த 10 பேர்ச் வதிவிட காணியை சாலை ஓரங்களில் அல்லது சாலைக்கு அண்மையில் வழங்குங்கள். நமது மக்கள் அப்போது தான் தேசிய நீரோட்டத்துக்கு உள்ளே வர முடியும். மலைகளில் இருந்து கீழே வந்து சாலை ஓரங்களில் வீடு கட்டி சிங்கள மக்களுடன் கூடி பழகி வாழட்டும். அப்போதுதான், எமது மக்களின் சட்ட பூர்வ குடி உரிமை முழுமை அடைய முடியும். இது தான் எமது முற்போக்கு கூட்டணியின் முற்போக்கு கொள்கை.

இந்த அரசாங்கத்தில் இருக்கும் ஒரு பிற்போக்கு சந்தா சங்கத்துக்கு நமது மக்கள் தேசிய



நீரோட்டத்தில் கலப்பது அன்றைய முப்பாட்டன் காலம் முதல் பிடிக்காது. நமது மக்களை எப்போதும் மலை உச்சியிலேயே அடைத்து, சாவி போட்டு மூடி வைத்து விட்டு, பெரும்பான்மை கட்சிகளிடம், நமது மக்களை காட்டி, பேரம் பேசி தம்மை வளர்த்து கொள்வதுதான் இவர்கள் பழக்கம்.

நாங்கள் இந்திய பிரஜைகள் அல்ல. நாம் மலையக இலங்கை பிரஜைகள். எமது நோக்கம் நாம் இந்நாட்டில் முழுமையான பிரஜைகள் ஆக வேண்டும். இன்று, சம்பளம், காணி, வீடு எதுவும் தராமல் இந்த அரசு, "மோடி மஸ்தான்" வேலை செய்கிறது. இங்கே "மோடி" என்றால் இந்திய பிரதமர் அல்ல. தமிழில் அப்படி ஒரு மாயாஜாலம் பற்றிய கூற்று இருக்கிறது. அத்தகைய ஒரு மாயாஜால மோடி மஸ்தான் வேலைதான் இந்த தோட்ட லயன்களை "கிராமம்" என்று அறிவிக்கும் லூசு வேலை.

# கறுப்பு ஜூலை என அறியப்படும் தமிழர்களுக்கு எதிரான வன்முறை, பதட்டத்தை அதிகரித்து, நெடுங்காலம் நீடித்த ஆயுதப் போராகியது.

### கனடிய பிரதமர் ட்ரூடோ இலங்கையில் கறுப்பு ஜூலையின் 41 ஆவது ஆண்டை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கை

"நாற்பத்தொரு வருடங்களுக்கு முன்பு இதே நாளில் இலங்கையின் கொழும்பில் தமிழர்கள் மீதும், அவர்களது வணிக நிறுவனங்கள் மீதும் வன்முறைத் தாக்குதல்கள் ஆரம்பமாகின. ஆயிரக்கணக்கான அப்பாவிகள் மரணமாகி, மேலும் பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்து, பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு, நாட்டை விட்டுத் தப்பியோடப் பலவந்தப்படுத்தப்பட்டார்கள். கறுப்பு ஜூலை என அறியப்படும் தமிழர்களுக்கு எதிரான இந்த வன்முறை, பதட்டத்தை அதிகரித்து, தசாப்த காலங்கள் நீடித்த ஆயுதப் போராகியது. இலங்கை வரலாற்றின் மிகவும் இருண்ட அத்தியாயங்களில் ஒன்றாக இது விளங்குகிறது.

"கனடிய நாடாளுமன்றம் மே 18 ஆந் திகதியைத் தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாகப் பிரகடனம் செய்யும் பிரேரணையை 2022 ஆம் ஆண்டில் ஒருமனதாக அங்கீகரித்தது. அர்த்தமற்ற இந்த வன்முறைகளில் பாதிக்கப்பட்டோரையும், தப்பிப் பிழைத்தோரையும் நினைவுகூர்ந்து கௌரவிப்பதில் தமிழ்க் கனேடியர்களுடனும், உலகெங்கும் உள்ள தமிழ்ச் சமூகங்களுடனும் இணைந்திருப்பதில் கனடா கொண்டுள்ள உறுதிப்பாட்டை இது வெளிப்படுத்துகிறது. மனிதர்களின் அடிப்படை உரிமைகளுக்காக உறுதியாகக் குரல்கொடுக்கும் கனேடிய அரசு, இலங்கையில் நலிவநடைந்த சமூகத்தினருக்கு எதிராகப் புரியப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கும், துஷ்பிரயோகத்திற்குமான இலங்கை அரசின் பொறுப்புக் கூறலைத் தொடர்ந்து வலியுறுத்தும்.



"கறுப்பு ஜூலையின் பின்னணியில் 1,800 தமிழர்கள் பாதுகாப்பாகக் கனடாவுக்குக் குடிபெயர்ந்து அவர்களும், அவர்களது குடும்பங்களும் கனடாவில் புதிய வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு உதவியாகக் கனடா சிறப்பு ஏற்பாடுகள் செயற்திட்டம் ஒன்றைச் செயற்படுத்தியது. உலகின் மிகப் பெரும் புலம்பெயர் தமிழ்ச் சமூகங்களில் ஒன்று தற்போது கனடாவில் உள்ளது. தமிழ்க் கனேடியர்கள் தினமும் எமது நாட்டுக்குப் புரியும் பங்களிப்பைக் கொண்டாடும் நாம் அவர்களை எப்போதும் பாதுகாக்கும் பொறுப்பு எமது அரசாங்கத்திற்கு உண்டு என்பதை நான் உணர்கின்றேன்.

"கறுப்பு ஜூலையில் துன்பத்தை அனுபவித்தும், அன்புக்குரியவர்களை இழந்தும் வாடும் அனைவருக்கும் கனேடியர்களுடன் இணைந்து எனது ஆழ்ந்த இரங்கலை இந்த நாளில் தெரிவிக்கிறேன். இந்த அவலத்தில் பாதிக்கப்பட்டோரை நினைவேந்தி, வெறுப்பும் வன்முறையும் அற்றதும், அனைவரையும் அதிகம் உள்வாங்கியதும், அமைதியானதுமான எதிர்பாலத்தை அனைவருக்குமாக கட்டியெழுப்புவதற்கான எமது உறுதிப்பாட்டை மீளவும் கனடியர்களான நாம் உறுதிப்படுத்துவோம்."

# தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவு அந்த அரசியல் போக்கை செயல்முனைப்பு உள்ளதாக மாற்றக் கூடியது

15 ஆண்டுகளாக தமிழ்ப் பரப்பில் ஓர் அரசறிவியல் கருத்தாக, சில கட்டுரையாளர்களின் கருத்துருவாக்கமாக,சில கட்சிகளின் விருப்பமாக, கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்கள் பேரவையின் தெரிவாகக் காணப்பட்ட ஒரு விடயம், இம்முறை அதாவது 15 ஆண்டுகளின் பின் செயல் வடிவம் பெறும் ஒரு நிலைமை தோன்றியிருக்கிறது. தமிழ்ப் பொது வேட்பாளர் என்று தெரிவு அந்த அரசியல் போக்கை செயல்முனைப்பு உள்ளதாக மாற்றக் கூடியது.அதற்கு 15 ஆண்டுகள் எடுத்திருக்கிறது என்பது தமிழ் அரசியலில் செயலூக்கமின்மையை மட்டும் காட்டவில்லை. அதைவிட முக்கியமாக,தமிழரசியல் கடந்த 15 ஆண்டுகளாக எதிர்த் தரப்புக்கு பதில் வினையாற்றும் ஒன்றாகத்தான் இருந்திருக்கிறது என்பதனையும் காட்டுகின்றது.

இப்படிப்பட்ட ஒரு பின்னணியில், கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் ஒரு சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது. வெள்ளைப் பேப்பரில் சிவப்பு மையால் எழுதப்பட்ட ஒரு சுவரொட்டி. “தேசமே பயப்படாதே” என்று அதில் எழுதப்பட்டிருந்தது. யாருடைய சுவரொட்டி அது என்பதற்கு எந்தக் குறிப்பும் இருக்கவில்லை. அது ஒரு விதத்தில் அனாமதேயச் சுவரொட்டி. எந்த தேசம் யாருக்கு பயப்படுகிறது என்ற விளக்கம் எதுவும் அங்கே இல்லை. இப்படித்தான் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகவும் ஒரு சுவரொட்டி சில வாரங்களுக்கு முன் ஒட்டப்பட்டது. முதலில் ஒரு சுவரொட்டியில் நற்செய்தி வருகிறது என்று எழுதப்பட்டிருந்தது. அது ஆவிக்குரிய கிறிஸ்தவ சபைகள் வெளியிடும் பிரசுரங்களை ஞாபகப்படுத்தியது. அடுத்தடுத்த நாள் ரணில்தான் செய்வார் என்ற பொருளில் ஒரு சுவரொட்டி ஒட்டப்பட்டது. முதலாவது சுவரொட்டி ஒரு புதிர் போல காணப்பட்டது. இரண்டாவது சுவரொட்டி அந்த புதிருக்குப் பதிலாகக் காணப்பட்டது. அந்நாட்களில் பன்னாட்டு நாணய நிதியத்தின் அடுத்தகட்ட கடன் உதவியைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் பெருமளவுக்கு வெற்றியடைந்திருந்தன.அந்தப் பின்னணியில் ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்கு உரையாற்ற இருந்தார். நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து நான் படிப்படியாக மீட்டு வருகிறேன் என்பது தான் அவருடைய நாட்டு மக்களுக்கான நற்செய்தியாக இருந்தது.

மேற்கண்ட இரண்டு சுவரொட்டிகளைத் தவிர கடந்த வாரத்தில் மற்றொரு சுவரொட்டி யாழ்ப்பாணத்தில் ஒட்டப்பட்டது. அதுவும் ஒரு பெரிய சுவரொட்டி. அதில் “எங்கள் தோழர் அனுர” என்று எழுதப்பட்டிருந்தது. அதில் அனுர குமார திசாநாயக்கவின் பெரிய படம் ஒன்றும் அச்சடிக்கப்பட்டிருந்தது.

இப்படியாக யாழ்ப்பாணத்தில் தென்னிலங்கைக் கட்சிகள் சுவரெட்டிகளை மாறி மாறி ஒட்டத் தொடங்கி விட்டன. மேற்கண்ட சுவரொட்டிகள் நிச்சயமாக ஜனாதிபதி தேர்தலில் நோக்கியவைதான். தமிழ் மக்களின் மனங்களில் இடம் பிடிப்பதற்கு மூன்று தென்னிலங்கை வேட்பாளர்களும் கடுமையாக முயற்சித்து வருகிறார்கள். ஆனால் தமிழ்மக்கள் அந்த சுவரொட்டிகளை ஆர்வத்தோடு பார்க்கின்றார்களா? ஆர்வத்துடன் பார்க்கிறார்களோ இல்லையோ பார்க்கிறார்கள். அதே சமயம் அதை கடந்தும் போகின்றார்கள். தமிழ் மக்களின் கவனம் இப்பொழுது அதிகமாக மருத்துவர் அர்ச்சுனாவின் மீதுதான் குவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்மக்கள் தாங்களாக கவனத்தைக் குவிக்கிறார்கள் என்பதை விடவும் சமூக வலைத்தளங்களும் யுடியுப்களும் தமிழ் மக்களின் கவனத்தை அர்ஜ/னாவை நோக்கி குவிமையப்படுத்துகின்றன.ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள ஸ்தாபிக்கப்பட்ட அச்சு ஊடகங்கள் அர்ஜ/னாவை நோக்கி ஒப்பீட்டளவில் அதிகம் கவனத்தைக் குவிக்கவில்லை.

இப்படிப்பட்ட ஒரு பின்னணியில், கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடந்த ஒரு நிகழ்வுடன் தமிழ் ஊடகங்களின் கவனம் ஜனாதிபதித் தேர்தலை நோக்கி ஒப்பீட்டளவில் அதிகமாக குவிக்கப்படுகின்றது. கடந்த திங்கட்கிழமை தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்புக்கும் தமிழ்த் தேசிய கட்சிகள் ஏழிற்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை எழுதப்பட்டது. கட்சிப் பிரமுகர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், ஊடகங்கள் உள்ளடங்கலாக நூற்றுக்கும் குறையாத பார்வையாளர்கள் அங்கே இருந்தார்கள்.ஏழு கட்சிகளின் தலைவர்களும் ஏழு சிவில் சமூகப் பிரதிநிதிகளும் அந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்கள். தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான பொதுக்கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதே அந்த உடன்படிக்கையின் நோக்கமாகும்.அப்படி ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகள் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக நடந்து வருகின்றன.

அந்த முயற்சிக்கு தெற்கிலும் எதிர்ப்பு உண்டு. வடக்கிலும் கிழக்கிலும் எதிர்ப்பு உண்டு. தென்னிலங்கையில் பிரதான வேட்பாளர்களில் ஒருவராகிய ரணில், யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பொழுது விக்னேஸ்வரனை சந்தித்தார். சந்திப்பில் தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்பட்டு ஒரு பொது வேட்பாளரை நிறுத்துமா? என்று கேட்டிருந்தார். அக்கேள்வியின் உட்பொருள் தமிழ் கட்சிகளால் அது முடியாது என்பதுதான். அதே சமயம் சஜித் பிரேமதாசதான் அதைப் பற்றிப் பொருட்படுத்தப் போவதில்லை என்று ஒரு தமிழ் ஊடகவியலாளருக்கு தெரிவித்திருந்தார். அனுர குமரவும் அதை ஒரு விடயமாக எடுத்துக்கொண்டு தன் மேடைகளில் பேசுவது கிடையாது. ஆகமொத்தம் மூன்று பிரதான தென்னிலங்கை வேட்பாளர்களும் அந்த விடயத்தை பொருட்படுத்தத் தேவையான ஒரு விடயமாகக் கருதவில்லை.அதேசமயம் அதற்கு எதிராக ஒரு பகுதி சிங்கள விமர்சகர்கள் எழுதினார்கள். தவிர “கொழும்பு டெலிகிராஃப் “எனப்படும் இணையதளத்தில் பேராசிரியர் ரட்னஜீவன் கூல் பொது வேட்பாளருக்கு எதிராக எழுதியிருந்தார்.

அதேசமயம் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் அரசியல்வாதிகளில் ஒரு பகுதியினர் அதைக் கடுமையாக எதிர்க்கிறார்கள். வடக்கில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சுமந்திரன், டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் எதிர்க்கிறார்கள். கிழக்கில் பிள்ளையான் மற்றும் முஸ்லிம் கட்சிகள் எதிர்கின்றன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் பக்கிரிக்கப் போவதாகக் கூறுகின்றது.அதே சமயம் தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது இந்திய உளவுப் பிரிவின் புரொஜக்ட் என்றும் அது விமர்சித்து வருகின்றது.
சுமந்திரன் அதனை ஒரு கோமாளிக் கூத்து என்று சொன்னார். அதற்கு எதிராக ஒரு கூட்டத்தைக் கூட்டி மிகவும் உணர்ச்சி பொங்க உரை நிகழ்த்தினார். அதன் பின் அமெரிக்கத் தூதரகம் ஒழுங்குபடுத்திய ஒரு நிகழ்வில், தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் கட்சித் தலைவர்களையும் விமர்சகர்களையும் ஏள்ளிநகையாடியிருக்கிறார். அவருக்கு ஆதரவான “காலைக்கதிர்“ “காலை முரசு” போன்றஊடகங்கள் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் தரப்புகளை விமர்சித்துச் செய்திகளையும் ஆசிரியர் தலையங்கங்களையும் பத்திகளையும் எழுதி வருகின்றன. சில இணையதளங்கள் தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் தரப்புகளை “சில குழுக்கள்” “சில தனி நபர்கள்” என்றெல்லாம் தரம் தாழ்த்தி எழுதின. சில யூ டியுப்கள் “பத்தி எழுத்தாளர்கள்” என்ற வார்த்தையை, அந்தஸ்து குறைந்த ஒரு வார்த்தையாகப் பயன்படுத்தின. இந்த முயற்சிகளுக்கெல்லாம் எங்கிருந்து காசு வருகிறது என்ற சந்தேகத்தை வேண்டுமென்றே திட்டமிட்டு பரப்பின. ஏதோ ஒரு தூதரகம் அல்லது ஏதோ ஒரு வெளிநாட்டின் உளவுப்பிரிவு அல்லது கொழும்பில் உள்ள ஏதோ ஒரு கட்சி, அல்லது புலம்பெயர்ந்த தமிழ் தரப்பில் உள்ள ஏதோ ஒரு தரப்பு அதன் பின்னணியில் இருக்கலாம் என்ற ஊகங்களையும் சந்தேகங்களையும் சில சமூக ஊடகங்கள் திட்டமிட்டு உருப்பெருக்கின.

எனினும் ஊடகப் பரப்பில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவான ஊடகங்கள்தான் ஒப்பீட்டுளவில் அதிகமாகக் காணப்படுகின்றன. தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னுறுத்தும் தரப்புகளின் மத்தியில் தமிழில் அரசியல் விமர்சனக் கட்டுரைகள் எழுதும் பெரும்பாலானவர்கள் காணப்படுகிறார்கள்.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், கடந்த திங்கட்கிழமை தந்தை செல்வா கலையரங்கில் மதியம் 12 மணிக்கு கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையானது, பொது வேட்பாளர் என்ற விடயம் கட்டமைப்பு சார்ந்து அடுத்த கட்டத்துக்கு நகரத் தொடங்கி விட்டது என்பதனை தெளிவு படுத்தியது. அதை ஒரு பகிடி என்று கூறிப் பரிகசித்தவர்கள் அதை முன்னெடுப்பவர்களை” கொமெடி பீஸ்“களாக வருணித்தவர்கள் குழுக்கள், பத்தி எழுத்தாளர்கள் என்றெல்லாம் விமர்சித்தவர்கள் உளவாளிகள், உளவாளிகளின் உழவாளிகள், ஏஜென்ட்கள் என்றெல்லாம் விமர்சித்தவர்கள்.. அனைவரும் அது அப்படி ஒரு வளர்ச்சிக்குப் போகக்கூடாது என்று எதிர்பார்த்தவர்கள்தான். அல்லது அது அப்படி ஒரு வளர்ச்சிக்கு வராது என்று எதிர்பார்த்தவர்கள்தான்.ஆனால் இப்பொழுது நிலைமை அடுத்த கட்டத்துக்கு நகரத் தொடங்கிவிட்டது.

For All Your Traveling Needs
Cheapest Air Fare In Town
Please call Mr. Lavan

Lowfare
travels and tours

Phone: 416.261.0555
2625 Eglington Ave East
Scarborough, Ontario
M1K 2S2

# தேசம்

NATION THE THESAM




Issue - 05 Once a Month JULY 2024



## ஜனாதிபதித் தேர்தலும் தென்னிலங்கையும்

பக்கம் 04

## ஒன்று பட்ட இலங்கைக்குள் தன்னாட்சி தமிழரசை உருவாக்க வேண்டும் என்ற இலட்சியம் கொண்டிருந்தவர் இரா சம்பந்தன்

பக்கம் 05





## தமிழரசினை அழித்து தான் சார்ந்தவர்களை வாழ வைத்த “தலைவர்“ இரா சம்பந்தன்

பக்கம் 08

## இம்மாதச் சிறுகதை “வாழா வெட்டி”

பக்கம் 09

